புதுவழி

அல்லயன்ஸ்

நேதாஜி

அனுமதி தந்த கடிதம்

Post Restante,
Badgastein (Austria)
27-12-1937.

To
The Proprietor,
The Alliance Co.,
Mylapore.

Dear friend,

I am sorry for the delay in replying to your letter of the 8th November.

Regarding translation rights of Taruner Swapna - The Dream of Youth and Nutaner Sandhan (not Satyer Sandhan) - Search for the New - kindly communicate with Sjt. * * * * * whom I am asking to deal with the matter on my behalf.

Yours sincerely,

Subhas C. Bose

Subhas C. Bose.

புதுவழி

பங்கிம் சந்திரர்
அரிய நாவல்கள்

1. ஆனந்த மடம்
2. விஷ விருக்ஷம்
3. துர்க்கேசநந்தினி
4. தேவி சௌதுராணி
5. மாதங்கினி
6. இந்திரா
7. ரஜனி
8. ஹிரண்மயி
9. ராதாராணி
10. கபால குண்டலா
11. கிருஷ்ண காந்தன் உயில்
12. சீதாராம்
13. ராஜஸிம்ஹன்
14. மிருணாளினி

சரத் சந்திரர்
அரிய நாவல்கள்

1. விஜயா
2. தேவதாஸ்
3. வைகுந்தன் உயில்
4. லலிதா
5. அமூல்யன்
6. ஸௌதாமினி
7. சந்திரநாத்
8. இருளில் ஒளி
9. அனுபமா
10. ஹேமநளினி
11. ஹேமாங்கினி
12. இந்துமதி
13. சரத் சந்திரர் கதைகள்
14. காசிநாதன்

புதுவழி

'நேதாஜி'

ஸ்ரீ ஸுபாஷ் சந்த்ர வஸு

மொழிபெயர்ப்பு

த. நா. குமாரஸ்வாமி, பி. ஏ.

அல்லயன்ஸ் கம்பெனி

மயிலாப்பூர் :: சென்னை-4

உரிமை] 1947 [ரூ. 2-0-0

நேதாஜீ
அனுமதி
தந்தது.

முதல் பதிப்பு
ஸர்வஜித் - சித்திரை

அல்லயன்ஸ் பிரஸ்
எம். எஸ். 109 -
1 - 5 - 1947

நன்றியுரை

பாரத மாதாவின் உண்மையான தவப்புதல்வன், ஸ்ரீ ஸுபாஷ் சந்த்ர வஸு, இந்திய சுதந்தர இயக்கத்தையே வேறு பாதையில் திருப்ப யத்தனிக்கையில், காங்கிரஸின் ஒரு சாராருக்கு அவரிடம் கசப்பு ஏற்பட்டது. ஒப்பற்ற வஸுவை இவர்கள் எதற்கும் உதவாத 'ஓட்டைப் படகு' என்றெல்லாம் ஏளனம் செய்தார்கள். ஆனால் அவர் ஆசியாவின் கிழக்குப் பகுதியில் செய்த அரிய செயல்கள் உலகத்தவரைப் பிரமிக்கச் செய்தன. இதுவரையில் பெரிய தலைவர்கள் பல காங்கிரஸ் மகாநாடுகளில் தீர்மானம் செய்ததை இந்த இளம் சிங்கம் நடத்திக் காட்டிவிட்டு மறைந்தது. இன்று காங்கிரஸின் பலம் மானம் யாவும் எதன் பேரில் நிற்கிறது? பகைவர் நடுவிலும் தம் தாய் நாட்டை மறவாது அதன் கௌரவத்தைப் பிரதிஷ்டை செய்த நேதாஜி எழுப்பிய இந்திய ராணுவத்தின்பேரில் தான், சந்தேகமில்லை! சுதந்தரம் உதயமாகும் ஸமயம் இன்று, புதிய வழியைக் கோலிய அத்தகைய நேதாஜியை நாம் இழந்து நிற்கிறோம்.

* * *

1937-ஆம் வருஷம் ஐரோப்பாவில் ஸ்ரீ ஸுபாஷ் சுற்றுப்பிராயணம் செய்து இந்திய சுதந்தரத்திற்காகப்

பிறநாட்டாரின் அனுதாபத்தைப் பெற முயன்ருர். அச்சமயம் அவரது உடல் நலம் நாளுக்குநாள் குறைந்து கொண்டே வந்தது. ஆஸ்ட்ரியாவில், படகாஸ்டின் என்னும் ஆரோக்கிய ஸ்தலத்தில் அவர் தங்கி இருந்த ஸமயம் எங்கள் வேண்டுகோளுக்கு இசைந்து, சங்க நிதி பதுமநிதி போன்ற 'இளைஞன் கனவு' 'புது வழி' என்ற இரு நூல்களையும் ஸ்ரீ த. நா. குமாரஸ்வாமியைக் கொண்டு வங்கமூலத்திலிருந்து மொழிபெயர்க்க அன்புகூர்ந்து எங்களுக்கு அனுமதி தந்தார். நாட்டில் மூண்ட பல கலவரங்களால், இரண்டாவது நூலான 'புது வழி'யை உரிய காலத்தில் வெளியிட எங்களால் முடியவில்லை. அன்பர்கள் மிக்க ஆவலுடன் எதிர் பார்த்த 'இளைஞன் கனவு' புதிய பதிப்பும் தயாராகி விட்டது. நேதாஜி இன்று இவ்வுலகில் இல்லை. அவருடைய புனித நினைவாக இவைகளை வெளி யிடத் துணிந்தோம். அன்பர்கள் இவற்றை ஏற்ப ரென்று நம்புகிறோம்.

பதிப்பாளர்.

ஜய் ஹிந்த்

புது வழி

1. மாணவர் கிளர்ச்சி

" மாணவர்கள் வாழ்வின் லக்ஷ்யம் பரீக்ஷையில் தேறுவதும், பதக்கங்கள் வாங்குவதும் மட்டும் அல்ல. தேசஸேவைக்காக உயர்வான யோக்கியதையும், அனுபவமும் பெறுவதுதான் இவர்கள் லக்ஷ்யம். தேச மாதாவின் காலடியில் தன்னையே முழுவதும் அர்ப்பணம் செய்து கொள்வது ஒன்றே இந்த ஸாதனையின் முக்கிய கருத்து. இந்த ஸாதனையை மாணவர்களாக இருக்கும்பொழுதே நாம் தொடங்க வேண்டும்! "

என் முன்பு திரண்டிருக்கும் இந்த மாணவர் குழாம் என்னை அவர்களுள் ஒருவனாக எண்ணித் தலைமை வகிக்க அழைத்திருப்பதால் நான் உண்மையில் அவர்களுக்குக் கடமைப்பட்டவனாவேன். அவர்கள் காட்டும் சிரத்தையை நான் விரும்பவில்லை. காரணம்: நான் அதற்குத் தகுதி உடையவனல்ல. அவர்களுடைய அன்பைத்தான் நான் விரும்பி நிற்கிறேன். அவர்களுள் ஒருவனாக ஆவதற்கே

என் ஆசையும். தங்களிடையே என்னை ஒருவனாக நினைத்துக்கொண்டு இந்தத் தலைமைப் பதவியை எனக்கு அளித்திருந்தால் நான் இங்கே எந்த நோக்கத்துடன் வந்தேனோ, அது நிறைவேறும் என்றே நம்புகிறேன். மாணவர்கள் மீதுதான் எனக்கு அன்பெல்லாம். அவர்களது மனோபாவம், ஸுக துக்கம், ஆசை, அந்தக்கரணம், இவற்றை நான் உணர்வேன். நான் மிகைபடக் கூறவில்லை. மாணவ வாழ்க்கையில் பல அவமானங்களை, அநீதங்களைப் பொறுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. அந்த அனுபவம் எனக்கு உண்டு. ஆதலால் புறக்கணிக்கப்பட்ட இந்த மாணவர் ஸமுதாயத்தின் உள்ளத்துள் குமுறும் வேதனையை நான் அறிவேன். மாணவர்களுக்கு ஆதரவும் மரியாதையும் காட்டாத ஒரு ஸமூகத்தில், மாணவர்களை வெறும் சிசுக்களாக நினைக்கும் ஒரு ஸமுதாயத்தில், உண்மையான மனிதனை உருவாக்குவது முடியாத காரியம். நாம் வாயால்மட்டும் அளந்துவிடுகிறோம்: "ப்ராப்தே து ஷோடச வர்ஷே புத்ரம் மித்ரவத் ஆசரேத்"* ஆனால் நடைமுறையில் வயதான பிள்ளையைக் குழந்தையாகவே பாவிக்கிறோம்; அவன் பி.ஏ., எம்.ஏ., தேறியிருந்தால் தான் என்ன? நாற்பது வயது ஆகியும், ஒருவன் குழந்தைக்குக் காட்டும் செல்லமெல்லாம் பெறுவது நம் தேசத்தில் எத்தனையோ இடங்களில் நடக்கிற விஷயமே. இதில் வெட்கக்கேடு என்னவென்றால், இதை நாம் கௌரவமாக எண்ணுவதுதான். நடுவயது எட்டியும் எவர்களுக்குச் சிறுபிராயத்தின் மனோபாவங்கள் போகவில்லையோ, அத்தகையோர் பாக்கியத்திற்கு வழிகாட்ட ஸைமன் கமிஷன் இந்தத்தேசத்திற்கு வந்ததென்றால் அதைவிட வியப்பானதோர் விஷயம் வேறு இல்லை.

---

* பதினாறு ஆண்டு நிரம்பியதும் மகனை நண்பனாகக் கொள்.

ஹிந்து வகுப்பினர் பெருமைப்படுத்திக் கொள்ளு கிறார்கள், தாங்கள் அன்னையின் வடிவில் இறைவனை வழிபடுவதாகவும் பால கோபாலனின் உருவில் கடவுளைப் பார்ப்பதாகவும். ஆனால் நான் இந்த ஹிந்துக்களை ஒரு கேள்வி கேட்கிறேன்: இதயத்தை விட்டுச் சொல்லுங் கள், பார்க்கலாம்! "நம் ஸமுதாயத்தில் தற்பொழுது, வீட்டிலும் சரி, வெளியிலும் சரி, நாம் அன்னையாகப் போற்றும் பெண்களுக்கு உரிய மதிப்பைத் தருகிறோமா? இளைஞர்களை மனிதர்களென்று கருதி அவர்களிடத்தில் பழகுகிறோமா?" - நாம் உண்மையில் அன்னையிடத்தில் பக்தி பூண்டிருந்தால், இன்று இந்த வங்காளத்தில் ஒவ் வொரு ஜில்லாவிலும் பெண்பாலார் பலவித அவமானங் களுக்கும், அட்டூழியங்களுக்கும் ஏன் ஆளாகிறார்கள்? உண்மையில் நாம் அன்னையைப் போற்றுபவர்களாயின் ஆண்பிள்ளைகளான நாம் ரோஷம் குன்றி இப்படி வாயை மூடிக்கொண்டு உட்கார்ந்து கிடப்போமா? இன்று வங்க தேசத்தில் சரியான ஆடவன் ஒருவன் இருப்பானாயின், அன்னை வடிவமான பெண்பாலார் அவமதிக்கப்படுவ தைப் பார்த்துத் துடித்தெழுந்து சிறந்த வீரனான ஒரு கட்க பஹதூர் ஸிம்ஹனைப்போல உயிர்மேல் பற்றையும் துறந்து, அன்னையைக் காப்பாற்றப் பெருஞ் செயல் அல்லவோ செய்திருப்பான்?

மாணவர்களே! இங்கிலீஷ்காரர்களிடம் உங்களுக்கு வெறுப்பு இருக்கலாம். ஆனால் நான் ஒன்று சொல்வேன். அவர்கள் தம் பெண்டிரிடம் காட்டும் ஆதரவும் கௌரவ மும் ஒப்பற்றவை. நீங்கள் அந்த உயர்ந்த பண்பை அவர் களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டியது அவசியம். உங்கள் நாட்டில் உங்களுடைய தாய்மாருக்கும், சகோதரி களுக்கும் யார் என்ன மரியாதை காட்டுகிறார்கள்? பிடியில் அடங்கும் இங்கிலீஷ்காரர்கள், முப்பத்து மூன்று கோடி அயலார் மத்தியில் தம் மகளிரின் மானத்தை

எவ்வாறு காத்துவருகிருர்கள்? அதன் காரணம் இதுவே: இங்கிலீஷ் மாதரை யாராவது அவமானம் செய்துவிட்டால், உலகத்திலுள்ள இங்கிலீஷ் ஜாதியினர் அத்தனை பேரும் வெறிமூண்டு இதற்குப் பழி தீர்த்துக்கொள்ளக் கங்கணம் கட்டிக் கொள்ளுகிருர்கள். இந்தியாவின் எல்லைப்புற மாகாணத்தில் நடந்த விஷயம் உங்களுக்குக் கவனம் இருக்கலாமே. மிஸ். எல்லிஸ் என்னும் ஐரோப்பிய மாதை ஒரு பட்டாணியன் அடித்துக்கொண்டு போய் விட்டானே!

"ஜனனீ ஜன்ம பூமிஸ்ச ஸ்வர்க்காதபி கரீயஸி" என்று வாய் நிறையப் பேசிவிடுகிருேம். நாம் முழு மனசுடன் தாயகத்தின்மீது அன்பு செலுத்துகிருேமா? தாயிடம் அன்பு என்ருல் நம்மைப் பெற்ற தாயுடன் நின்றுவிட வில்லை. அன்னையின் வடிவினர்களான எல்லா மாதர்களிடமும் அன்பு காட்டுவதுதான். வங்காளத்தின் மண்-அதன் நீர்-அதன் ஆகாயம்-அதன் காற்று-அதன் கல்வி, கேள்வி-அதன் தர்மம்-அதன் உயிர் யாவும் இந்தப் பெண்பாலார் மூலமாகத்தான் உருவெடுத்துத் திகழ்கின்றன. அன்னையின் ரூபமான பெண்களிடத்தில் பற்றில்லாதவனுக்குச் சுயநாட்டின்மேல் எப்படிப் பற்று ஏற்படும்? பெண்களை ஒரு பொருளாக உள்ளூற எண்ணுதவன் எவ்வாறு மனித இனத்தைச் சேர்ந்தவன் ஆவான்? பெரியதோர் ஆதர்சத்தில் பிடிப்பில்லாத ஒருவன், அத்தகைய ஆதர்சத்தின் அணிகலனுக விளங்குபவர்களைப் புறக்கணிக்கும் ஒருவன், என்றும் மனிதன் ஆகமாட்டான். வாழ்வில் தூய்மையானதும் அழகானதும் மங்களம் தருவதுமான ஓர் ஆதர்சத்தை, தேசமாதாவின் திவ்விய வடிவிலும், மூவுலகை வென்ற லோகமாயையான நம் அன்னையின் உருவிலும் காண்கிருேம். ஆகவே, தம்பிமார்களே! அன்னையை வழிபடக் கற்றுக்கொள்ளுங்கள். அன்னையின் இனத்தினரான மாதர்களிடம் பக்தி செலுத்துங்கள்; அவர்களிடம்

சிரத்தை வையுங்கள்; சொந்த நாட்டு நாரியரின் கௌரவத்தைச் சிதைவுருமல் காக்கப் பிரதிக்ஞை செய்துகொள்ளுங்கள்.

மனு சொன்ன வாக்கியத்தை மனத்தில் வைத்துக் கொள்ளுங்கள்:

"யத்ர நார்யஸ்து பூஜ்யந்தே
ரமந்தே தத்ர தேவதா:
யத்ரைதாஸ்து ந பூஜ்யந்தே
ஸர்வாஸ் தத்ர அபலாஃக்ரியாஃ
சோசந்தி மாமயோ யத்ர
விநச்யதி ஆசு தத்குலம்
ந சோசந்தி து வத்ரைதா
விவர்த்ததே தத்தி ஸர்வதா".*

நாரியர்கள் கௌரவமாக ஒரு காலத்தில் நம் இந்தியாவில் இருந்தார்கள். மைத்ரேயி, கார்கி போன்ற தவ மகளிர் வாழ்ந்த நாட்களில், கனு, லீலாவதி போன்ற அறிவில் சிறந்தவர்கள் தோன்றிய காலத்தில், அஹல்யா பாயீ, ஜான்ஸீ ராணி போன்ற வீர ரமணிகள் தலை தூக்கி நின்ற யுகத்தில் நம்முடைய இந்தப் பொன்னுட்டிலும் ராணி பவானி, தேவீ சௌதுராணி போன்ற ஒப்பற்ற ஸ்திரீ ரத்தினங்கள் ஒரு நாள் உலவவில்லையா?

---

* நாரியர் எங்கே கௌரவிக்கப் படுகிருர்களோ, அங்கே தேவதைகள் களிப்பு எய்துகின்றனர். நாரியருக்கு எங்கே அவமானம் ஏற்படுகிறதோ, அங்கே எல்லா முயற்சியும் அவலமாகும். எந்தக் குலத்தில் தீராத்துயரில் பெண்கள் மூழ்கிக்கிடக்கிருர்களோ அந்தக் குலம் விரைவில் அழிந்துபோம். சிறிதும் கவலை, துயரம் இரண்டும் இன்றி எங்கே பெண்கள் வாழ்கிருர்களோ அவ்விடம் செல்வத்தின் களஞ்சியமெனத் திகழும்.

என் மாணவ அன்பர்களுக்கெல்லாம் வியப்பாக இருக்கும், மாணவர் கூடும் சபையில் இந்த விஷயங்களை யெல்லாம் நான் எடுப்பானேனென்று. ஆனால் அதிக வேதனையினால்தான் இதை நான் இன்று சொல்லவேண்டியிருக்கிறது. நம் நாட்டுப் பெண்பாலார் வீரர்களைப் பெற்றெடுக்காத பரியந்தம் நாம் உலகில் சுதந்திர ஜாதியைச் சேர்ந்த மக்கள் ஆக முடியாது. வீட்டிலும் சரி, வெளியிலும் சரி, தாய் அனைய மாதரைப் போற்றி உயர்ந்த நிலைக்குக் கொண்டுவரத் தவறுவோமாயின், இந்த நாட்டு நாரியர் வீரம் நிறைந்த புதல்வர்களைப் பெறுவது கடினம். நம் தாய் இனத்தவரைச் சக்தியின் ரூபமாகச் செய்யக் கருதினால், இளமையில் விவாகமென்பதை அடியோடு ஒழித்தல் வேண்டும்; ஸ்திரீகளுக்கும் வாழ்வு முழுவதும் பிரம்மசரியத்தைக் கடைப்பிடிக்கும் உரிமை இருக்கவேண்டும்; அதற்கேற்ற கல்விப் பயிற்சியும் அவர்களுக்கு அளிப்பது நம் கடமையாகும். அவர்களுக்கு இடையூறுனவற்றை விலக்கி விடவேண்டும். சிறுமிகளுக்கும் யுவதிகளுக்கும் தேகப்பயிற்சி, கோல் சுற்றுதல், கத்தி வேலை போன்ற வித்தைகளைப் புகட்ட வேண்டும். தம் காலிலேயே நிற்பதற்கு அவர்களுக்கு வயிற்றுப் பிழைப்புக்கான கல்வி முறைகளையும் போதிக்கவேண்டும். விதவைகள் மறுமணம் செய்து கொள்வதற்கு ஸமூகம் இணங்கவேண்டும்.

இந்தத் திட்டங்கள் யாவும் காரியமுறையில் செய்து காட்டும் பொறுப்பை இளைஞர்கள் ஏற்பது அவசியம். ஏனெனில், பல யுகத்து மூட நம்பிக்கைகளுக்கு வசமாகி, தர்மத்தையும் ஆசாரத்தையும் ஒன்றாகக் குழப்பும் பிற்போக்காளர், இளைஞரின் அரிய பணிக்கு முட்டுக்கட்டை போடுவார்கள். சரித்திரத்தை ஆய்ந்து பாருங்கள். அரசியல் புரட்சியை உண்டாக்குவது சுலபம். ஆனால் ஸமூக வாழ்வில் புரட்சியோ, மாறுதலோ, சீர்திருத்தமோ

அவ்வளவு எளிதாகக் கைகூடாது. இதற்குக் காரணம், அரசியல் புரட்சியில் நம்முடைய எதிரி முற்றும் அந்நியன். ஜாதி, மதம் என்ற வேற்றுமை இராமல் தேசமக்கள் அனைவரும் ஒருமித்து இந்தக் காரியத்தில் இறங்குகிறார்கள். இதற்காக வெஞ்சிறையின் கொடுமையையும், பலவிதமான துன்பங்களையும் பொறுத்துக் கொள்ளுகிறார்கள். நாட்டினரின் அன்பும் அனுதாபமும் போராடும் தொண்டர்களுக்குப் பலத்தைக் கொடுக்கின்றன.

ஆனால் ஸமூகக் கடலில் மாபெரும் அலைகளைக் கிளப்புபவர்கள், புதுவிதமான ஸங்கடங்களுக்குத் தலைகொடுக்க வேண்டியிருக்கிறது. இங்கே சத்துரு அந்நியன் அல்ல; தேசத்தினரே; சொந்த உறவினரே; பழகிய நண்பர்களே; சொந்த வீட்டிலேயே எதிர்ப்பு! அல்லும் பகலும் அவர்களுடைய வசை மொழிகளைக் கேட்டு ஸஹித்துக்கொள்ள வேண்டியதுதான். ஸமூகத்தினர் சிறிதளவும் இந்த இயக்கத்திற்கு அனுகூலமாக இருக்கமாட்டார்கள். பழகிய நண்பன், ரத்தக் கலப்புள்ள உறவினன், குடும்பத்துப் பெரியவர் இவர்களையெல்லாம் எதிர்த்துப் போராடும் ஒருவனுடைய நிலை, குருக்ஷேத்திரத்தில் அர்ஜுனனுக்கு நேரிட்ட ஒரு நெருக்கடியை ஒக்கும். ஆகவே, இத்தகைய சமருக்கு அளவற்ற மனவலிமையும் துணிவும் வீரியமும் மிக அவசியம். என் இள நண்பர்களே, அத்தகைய வன்மையைப் பெற ஸாதனை புரியுங்கள்.

ஏற்கனவே நான் குறிப்பிட்டுள்ளேன்: நம் நாட்டில் இன்னும் இளைஞருக்கும் மாணவர்களுக்கும் மதிப்பான ஸ்தானத்தை நாம் கொடுக்கவில்லை. இந்தக் குறையிலேயே இருந்து பழகிப் போனதால் இந்தச் சீர்கேடான நிலைமையை நாம் உணரவில்லை. ஆனால் சுதந்திரம் அடைந்த நாடுகளுக்குச் சென்று அங்கே சிலவும் விஷயங்களை, நம்முடைய பரிதாபமான நிலையுடன் ஒப்பு நோக்கின், கண் திறக்கிறது நமக்கு. சுதந்திரமான தேசங்களில் மாணவ

ஸமுதாயம், பெற்றோர்களிடமிருந்தும் கல்விக் கழகத்தாரிடமிருந்தும் போலீஸ் வர்க்கத்தாரிடமிருந்தும் சர்க்காரிடமிருந்தும் ஸமூகத்தவரிடமிருந்தும் பெறும் ஆதரவையும் மதிப்பையும் நோக்குங்கால் நாம் எங்கே யென்றுதான் நினைத்துக்கொள்ளவேண்டும். மாணவர்களான நாமோ, பெரியோர் முகம் கோணாமல் நடக்கவேண்டும், உபாத்திமாருக்கு அடங்கி ஒடுங்கிய சரக்குகளாக இருக்கவேண்டும். ஸமூகத்தினர் கண்ணில் நாம் புத்தி வராத பயல்கள்! போலீஸார், அரசாங்கத்தார் இவர்களின் உறுமலுக்கும் மருட்டலுக்கும் தலைகுனியும் பயங்கொள்ளிகள் நாம்!

இந்த மாதிரி ஓர் அடக்குமுறையான நிலையில் பூரண மனிதத்தன்மை நமக்கு எங்கிருந்து வளரப்போகிறது? ஸ்வாதீனமான நாடுகளில் மாணவர்கள் தமக்குக் கிடைத்த ஆதரவினாலும் யதேச்சையினாலும் பொறுப்பான காரியங்களைச் செய்வதில் முனைகிறார்கள். கடமை ஆற்றும் புத்தி அவர்களுக்கு ஏற்படுகிறது. அவர்கள் உள்ளத்தில் மறைந்து ஒளிரும் ஒரு தெய்விகத்தன்மை வெளியே கிளம்புகிறது. நம் ஸமூகத்தின்மேல் நமக்குள்ள குறையெல்லாம் என்ன? மாணவர்களை இவர்கள் நடத்தும் விதம், மனிதன் வீறி வளர்வதைத் தடுத்துவிடுகிறதே என்ற குறைதான்!

ஆனால், நல்ல காலம் வருமென்பதற்கு ஸூசகங்கள் தென்படுகின்றன. இதோ மாணவர்கள் விழிப்படைவதன் நல் நிமித்தங்கள்! ஸமூகத்தை எதிர்பாராமல் அவர்கள் ஓங்கி முன்னுக்கு வரத் தாமே பாடுபடுவதைப் பார்க்கிறேன். இன்று வங்க தேசம் முழுவதும் இந்தக் கிளர்ச்சி பரவியுள்ளது. ஸமூகத்தின் பந்தங்களிலிருந்து மீள்வதற்குத் தாமே ஸாதனைகள் புரிந்து ஒரு புதிய ஸமூக தர்மத்தை நிறுவ அவர்கள் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். என்னுடைய நம்பிக்கையெல்லாம், என் ஆசையெல்லாம்

என்ன? சுதந்திரமான நாடுகளில் வாழும் மாணவர்களுக்கு உலகத்தவர் தரும் மதிப்பை நம் நாட்டு மாணவர்களும் பெறவேண்டும் என்பதே. தம் வலிமையாலேயே தம் முயற்சியினுலேயே, தமக்குள்ள தகைமையினுலேயே இந்த மதிப்பை அவர்கள் பெறவேண்டும். ஸ்ரீ கட்க பஹதூர் சிங் போன்ற மாணவன் இன்று உலகம் போற்றும் ஒரு வீர புருஷனுகத் திகழ்வது எதனுல்? அவனுடைய துணிவு, ஒப்பற்ற தியாகம், வன்மை இவற்றினுல்தான். அதே மாதிரி வங்க மாணவர் குழுவினரான நீங்களும் ஆத்ம பலத்தைக்கொண்டு அழியாப் புகழ் எய்துவீர்களென்று எண்ணுகிறேன்.

மனிதன் முன்னுக்கு வரும் வழியில் இடைஞ்சலாக நிற்பது மருள் நிறைந்த ஓர் ஆதர்சமே. நன்மை செய்யவோ தீது நடத்தவோ மனிதன் முனையும்பொழுது தன் செயலுக்கு ஆதாரமாக ஏதாவது நீதி முறையைக் காட்டிப் பழியிலிருந்து நழுவப் பார்க்கிருன்.

இந்தக் காலத்து மாணவர்களிடையே சிலர் தவருன ஆதர்சத்தைப் பின்பற்றி அநீதமான காரியங்களில் இறங்கிவிடுகிருர்கள்; அக்கிரமங்களுக்கு இடங்கொடுக்கிருர்கள். உதாரணமாக, இங்கே ஒரு விஷயத்தைக் குறிப்பிடுகிறேன்: 'சாத்ராம் அத்யயனம் தபஃ' - படிப்பே மாணவர்களுக்குரிய தவம். தேசத்தொண்டிலிருந்து மாணவர்களைத் திருப்பப் பலர் இந்த வேத வாக்கியத்தை உபயோகித்துக் கொள்ளுகிருர்கள்.

படிப்பு என்றும் தவம் ஆகாது. படிப்பு என்ருல் சில நூல்களைக் கற்பதும் சில பரீக்ஷைகளில் தேறுவதுந்தான். இதனுல் தங்கப் பதக்கம் கிடைக்கலாம். சர்க்காரில் உயர்ந்த வேலையும் கிட்டும். ஆனுல் மனிதத்தன்மை மட்டும் பெறமுடியாது. புத்தகங்களைப் படித்துவிட்டு நாம் உயர்ந்தமனப்பான்மையையும் லக்ஷ்யங்களையும் அடையலாம். இந்த உண்மை ஒருபுறம் இருக்க, இதைப்

பூரணமாக உட்கொண்டு, அனுபவத்தில் காட்டாதவரைக்கும் நம்முடைய ஒழுக்கம் முழு மலர்ச்சி அடையாது. தவம் புரிவதன் கருத்தென்ன? உண்மையைக் காண்பது தான். சிரவணம் (கேட்டல்), மனனம் (சிந்தித்தல்), அத்தியயனம் (பயிற்சி) இவற்றின் உதவியால் உண்மையைக் காணும் பேறு நமக்கு வரும். அந்த நிலையை அடைந்தவுடன் பெரியதோர் மாறுதல் மனிதனுடைய வாழ்க்கையில் ஏற்படுகிறது. வாழ்வின் உள் பொருளையும் லக்ஷயத்தையும் அவன் அறிகிறான். மறைந்து கிடக்கும் அமோகமான சக்தியை இந்த ஒளியைக்கொண்டே உணருகிறான். புதிய வழியில் தன் வாழ்க்கையைத் திருப்ப முயல்கிறான். இந்த ஸாதனையில் வெற்றி பெற வேண்டுமானால் சிறு வயதிலிருந்தே உழைப்பது அவசியம். உடல் வன்மை பெருகி ஓடும் பொழுது, ஆர்வம் ததும்பும் சமயம், கல்பனாசக்தி குறைவுபடாத காலம், எதையும் துறக்க மனோதிடம் இருக்கும் வயது, தனக்கென வாழாது பிறர்பால் அன்பு அனைத்தும் சொரியும் இளமைப் பருவம் - இதுவே அழியாததோர் இலக்கிற்கு எந்த இளைஞனும் எந்த மாணவனும் தன்னைப் பலியாகக் கொடுப்பதற்கு ஏற்ற காலம். முன்பின் யோசியாமல் உணர்ச்சிக் கடலில் தன் வாழ்க்கைக் கலத்தைச் செலுத்த வேண்டும்.

இளமையும் யௌவனமுமே இத்தகைய ஸாதனைக்கு ஏற்ற பிராயம். கொழுவிய செம்மலரே தேவியின் வழிபாட்டிற்கு ஏற்றது. வாடி வதங்கிய பூ அங்குப் பூசனைக்கு உதவாது. என் இளந் தம்பிமாரே! கேளுங்கள், நான் சொல்வதை. உங்களது உள்ளம் தூய்மையுடன் இருக்கும் பொழுதே - தேகவன்மை குறையாது இருக்கும் பொழுதே- உத்ஸாஹம் குன்றாது இருக்கும்பொழுதே- உங்கள் வருங்கால வாழ்வைக் காட்ட நம்பிக்கையின் செவ்வொளி தோன்றும்பொழுதே- புனிதமான இந்த

நல்ல வேளையிலே- வாழ்க்கையின் சிறந்த லக்ஷயத்தின் சேவடியில் உங்கள் இன்னுயிரை அர்ப்பணம் செய் யுங்கள்.

அத்தகைய உன்னத ஆதர்சம் எது? சாவா மருந் தைத் தேட எது மனிதனைத் தூண்டுகிறதோ, எது பேரின்பம் தருகிறதோ, சக்தியின் ஊற்றை எது கிளப்பு கிறதோ, ஒவ்வொரு யுகமும் பல நாடுகளில் எதன் புண் ணிய வசத்தால் மகான்கள் தோன்றுகிறார்களோ - அந்த லக்ஷயமே. மகா புருஷர்களெல்லாம் பிறந்தவுடனேயே உயர்வான மனம் படைத்தவர்கள் ஆகிறார்கள். எத்த கைய சிரமமின்றியும் ஸாதனையின்றியும் உன்னத நிலைக்கு வருகிறார்களென்று நீங்கள் எண்ணலாம். அது சுத்தத் தவறு. மகா புருஷர்கள் அருஞ் செயலின் பொருட்டே பிறக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை; ஆனால் ஸாதனை யின்றித் திடுமென அவர்களாலும் அந்த உயர்ந்த நிலைக்கு வர முடியாது. இந்த நாட்டிலோ, பிறநாட்டிலோ இது வரை தோன்றிய பெரியார்களின் சரிதங்களை அலசிப் பாருங்கள். ஒவ்வொருவர் வாழ்விலும் எவ்வளவோ கஷ்டநிஷ்டூரங்கள், சளைப்பற்ற உழைப்பு, அரும்பாடு ஆழ்ந்த லக்ஷயம் எல்லாம் புலனாகும். அவ்வாறு முனைந்து வேலை செய்யத் தொடங்குவீராயின், நீங்களுந்தான் ஒரு நாள் அந்தப் பதவிக்கு உரியவர் ஆவீர். உங்கள் ஒவ்வொருவரிடத்திலும் நீறு பூத்த நெருப்பனைய மட்டிலாத ஒரு சக்தி கனிந்துகொண்டிருக் கிறது. ஸாதனைகள் மூலம், மேலே இருக்கும் சாம்பரை ஊதி விடுங்கள். உள்ளே திகழும் உங்களது தெய்விகத் தன்மை கோடி சூரிய வெளிச்சத்துடன் வெளிக் கிளம்பி மனித வர்க்கத்தையே வியப்பில் ஆழ்த்தும்.

வங்க நாட்டு இளமாணவர்கள் பின்பற்ற வேண் டிய ஓர் இலக்கை அடிப்படையாக வைத்து, அவர்களைத்

தட்டி எழுப்பக் கவியரசர் ரவீந்த்ரநாதர் தம் 'புதிய ஆண்டு' என்னும் அழகிய பாட்டில்,

"ஹே பாரத, ஆஜ நவீன வரஷே
சுநோ ஏ கவிர் கான.
தோமார் சரணே நவீன ஹரஷே
ஏநேசி பூஜார் தான.
ஏநேசி மோதேர் தேஹேர் சக்தி,
ஏநேசி மோதேர் மநேர் பக்தி,
ஏநேசி மோதேர் தர்மேர் மதி,
ஏநேசி மோதேர் ப்ராண,
ஏநேசி மோதேர் ச்ரேஷ்ட அர்க்ய,
தோமாரே கரிதே தான." *

என்று சொல்லுகிருர்.

தேச மாதாவின் சரணங்களில் நம்மையே முழுவதும் வைத்து விடவேண்டும். இது ஒன்றே நாம் புரியும் ஸாதனையாகும். இந்த ஸாதனையை மாணவ வாழ்வின் தொடக்கத்திலேயே செய்வது நலன். மனம் உவந்து தானமாக வழங்கக் கூடிய ஒரு செல்வத்தைத் தேடுவதோ

---

*பாரதமே, இன்று இப் புது வருடப்பிறப்பில் இவ் வெளிய புலவன் பாட்டைக் கேள். உன் திருவடிக்கே புதியதோர் இன்பச் சிலிர்ப்புடன் நான் வைக்கும் இந்த மலர்க் காணிக்கையை ஏற்பாய். எங்கள் உடலின் திரண்ட சக்திகளெல்லாம் கொணர்ந்தேன்.

எங்கள் உள்ளமதில் திகழும் பக்தியாவும் கொணர்ந்தேன்.

எங்கள் அறத்தின் நல்லறிவு அனைத்தும் கொணர்ந்தேன்.

எங்கள் இன்னுயிரும் கொணர்ந்தேன்.

சிறப்புடைய எங்கள் அர்க்கியங்கள் உனக்கே தருதற்குக் கொணர்ந்துள்ளேன்.

சேமிப்பதோ, நாம் மாணவர்களாக இருக்கும் காலத்தில தான் முடியும். உடலில் வலிமை உள்ளவனிடமும், துணிவும் பொலிவும் மனத்திடையே கொண்டவனிடமும், கல்வியில் நல்ல பயிற்சி அடைந்தவனிடமும், பிரம்மசரிய விரதத்தில் பிறழாது இருப்பவனிடமுமே இத்தகைய நிதியைக் காணமுடியும். பிச்சைக்காரன், ஏழை பாழை இவர்கள் தரும் ஈகைக்கு ஓர் அர்த்தமும் இல்லை. இவர்களே பிறர் கிருபைக்குப் பாத்திரமானவர்கள். மாணவர்களாக இருக்கும்பொழுதே ஆரோக்கிய திடகாத்திரத்தைத் தேடிக்கொள்ளவேண்டும். இழுக்கு இல்லா ஒழுக்கத்தைப் பூணவேண்டும். மெய்ப்பொருள்பற்றிய அறிவை வளரச் செய்யவேண்டும். ஒரே வார்த்தை: உடல், மனம், உள்ளம் இம்மூன்றினாலும் வாழ்வினைப் பெருக்கி மனிதத்தன்மையைப் பெறவேண்டும்.

தேச ஸேவையின்பொருட்டு உயிர்ச் செல்வமும், யோக்கியதையும் பெறுவதே மாணவ வாழ்க்கையின் குறிக்கோளாக இருந்தால், பரீக்ஷையில் தேறுவதிலும் தங்கப் பதக்கங்களை மாட்டிக் கொள்வதிலும் உள்ள மதிப்பு உங்களுக்குத் தானாகவே வெளிச்சமாகிவிடும். இந்தக் காலத்தில் ஸ்கூல், காலேஜ்களில் "நல்ல பையன்" என்று பெயரெடுக்கும் ஒரு சாரார் இருக்கிறார்கள். பாவம், அவர்களைக் கண்டால் எனக்குப் பரிதாபமாயிருக்கிறது. வெறும் புஸ்தகப் புழுக்கள்; ஏட்டுச் சுரைக்காய்கள்! புத்தகத்திற்கு வெளியே இருக்கும் ஓர் உலகு எத்தன்மையது என்று அவர்களுக்குத் தெரியாது. பரீக்ஷை நடக்கும் கூடத்தோடு நின்றுவிடுகிறது, அவர்களது வாழ்க்கையின் அகலம். அந்தப் 'போக்கிலி' ராபர்ட் க்ளைவுடன் அவர்களை ஒப்பிட்டுப் பார்த்தால் என்ன வித்தியாஸம்! பெற்ற தாய்க்கும் தந்தைக்கும் ஓயாத தொல்லையையும் வெறுப்பையும் மூட்டிய அந்தப்பையன் திரைகடல் ஓடி, அரிய பொருளைத் தேடி அலைந்து கடைசியில்

இங்கிலீஷ்காரர்களுக்காகப் பெரிய ஸாம்ராஜ்யத்தை நிலை நிறுத்திச் சென்ருன். இங்கிலாந்திலுள்ள "நல்ல பிள்ளைகள்" என்ற சாரார் செய்யாத - ஏன் செய்ய முடியாத - ஓர் அபாரமான காரியத்தை இந்தப் 'போக்கிலி' க்ளைவ் வெற்றியுடன் முடித்திருக்கிருன்!

இங்கிலீஷ் ஜாதியார் மனிதனுக்குரிய மதிப்பை உணர்பவர்கள். பாருங்கள், அவர்கள் உயர்ந்த பீடத்தில் க்ளைவை நன்றியுடன் தூக்கிவைத்தார்கள். 'போக்கிலி' க்ளைவ் அவனது இறுதி நாளில் க்ளைவ் பிரபுவாக மாறினுன்!

இங்கிலீஷ்காரர்கள், ஏன் உலகில் முன்னுக்குவந்த எந்த ஜாதியாரின் சரித்திரத்தையும் ஆய்ந்து பார்த்தாலே தெரியும், இரண்டு அபூர்வ குணங்கள் இருப்பது. அதன் பலத்தினுலேயே அவர்கள் இன்று எல்லா ஜாதியினரைக் காட்டிலும் சிகரத்தில் வீற்றிருக்கிருர்கள். முதலாவது, அவர்கள் தம் தாய் நாட்டினிடம் உள்ளூற அபிமானம் வைத்திருக்கிருர்கள். இரண்டாவது, அவர்களிடம் முன்னேகும் துணிச்சல் ஏராளமாக இருக்கிறது. புதுமையிலுள்ள வசீகரம் அவர்களை இழுக்கிறது. தேய்ந்த பழைய பாதையைத் துறந்து புதுவழியே செல்கின்றனர். வெளியுலகின் ஆகர்ஷணமே அவர்களைத் தம் வீட்டைத் துறக்கச் செய்து வாவென்று அழைக்கிறது. தொன்மையான ஸம்பிரதாயங்களை விட்டெறிகிருர்கள். இந்த அஞ்சாமை, சஞ்சலம், தொலைவின் மோகம் இவற்றின் விசேஷத்தால் அல்லவோ இன்று இங்கிலீஷ்காரர்கள் உலகின் முன்னணியில் நிற்கின்றனர்! இவை இல்லாத குறையினுல்தான் இன்று நாம் ஏழைகளாய், பள்ளத்தில் விழுந்து தவிக்கும் குருடர்களாய் இருக்கிருேம்.

ஆனுல் ஆதியில் இந்த மாதிரி ஒரு கேடான நிலையில் நாம் இருக்கவில்லை. நாமும் ஒரு காலத்தில் கிளர்ந்தெழும் கருங்கடலைத் தாண்டி வேறு நாடுகளில் குடிபுகுந்து

ஞானச்சுடரை ஏற்றினோம். பண்டம் பொருள்களை விற்றுவாங்கினோம். நம்முடைய முழுவளர்ச்சியைக் கண்ட யுகம் அது. நம்முடைய ஆத்மா, கலை, செல்வம் யாவும் பொங்கி வழிந்த காலம்; நாம் தலைதூக்கி நின்ற பொன் யுகம்! அதன் பின்னரே நாம் வறண்டு சுருங்கிப்போன காலம் வந்தது. உறக்கத்தில் படுத்தோம் - வீழ்ச்சியின் யுகம். மறுபடியும் இன்று நம்முடைய பிராணன் விழித்துக்கொண்டது. நாடியின் துடிப்பை உணராலானோம். வீழ்ச்சிக்குப் பிறகு மறு எழுச்சி வருகிறது. தூக்கத்திற்குப் பிறகு புதிய விழிப்பின் அறிகுறிகள் நாற்றிசையும் தென்படுகின்றன. எதையும் ஆராயும் ஓர் அறிவு நமக்கு உதயமாகியுள்ளது. வெளியுலகின் ஞானக் களஞ்சியத்திலிருந்து சேகரம் செய்யும் ஆர்வம் நம்மிடம் தளிர்க்கிறது. வீட்டில் நமக்குள்ள செல்வமனைத்தையும், இவ்வுலக சபை முன் கொண்டு நிறுத்த நாம் ஓடிவருகிறோம், இன்று. கவியும் இந்தக் கருத்தை வைத்தே பாடியிருக்கிறார் :

1. "ஆமி டாலிபோ கருணா தாரா
ஆமி பாங்கிபோ பாஷாணகாரா
ஆமி ஜகத் ப்லாவியா பேடாபோ காஹியா
ஆகுல பாகலபாரா."

2. "சிகர் ஹஇதே சிகரே சுடிபோ
பூதர் ஹஇதே பூதரே லுடிபோ
ஹேஸே கலகல, கேயே கலகல
தாலே தாலே திபோ தாலி."

---

1. கருணையின் வெள்ளம் பாய்ச்சுவேன். நான் சிறையின் இருப்புக் கதவைத் தகர்த்தெறிவேன். நான் உலகில் பரவிச் சுற்றிடுவேன் பாட்டிசைத்து, ஆகுலம் கொண்டு வெறி மூண்டே.

2. மலைமுடியிலிருந்து மற்றொரு முடிக்குத் தாவுவேன். நிலத்திலிருந்து மற்றொரு தலத்தின்கண் புரளுவேன்,

3. "தடிநீ ஹஇயா ஜாஇபோ பஹியா
நவ நவ தேசே வார்த்தா லஇயா
ஹ்ருதயேர் கதா கஹியா கஹியா
காஹியா காஹியா கான."

யோக்கியதாம்சம் வரை பார்ப்போமாயின் பாரத வாஸிகள் உலகிலுள்ள மற்ற ஜாதியாரைவிட எந்த விஷயத்திலும் குறைந்தவர்களல்ல; இதற்கு மாருக, பலபடி சிறப்புடையவர்களே. அடிமைகளாயிருந்தாலும், இப்பொழுது நமக்கு நல்ல காலம் வராதுபோனுலும், நம்மிடையே தோன்றும் புலவர்கள், எழுத்தாளர்கள், சிற்பிகள், விஞ்ஞானிகள், தொழிலாளிகள், வணிகர், யுத்தவீரர்கள், குஸ்திபுரியும் பயில்வான்கள், வேடிக்கையில் கைத்திறமுடையவர்கள் உலகில் மற்ற ஜாதிக்கு எள்ளளவும் குறைந்து போய்விடவில்லே. உலகத்தவர் கூட்டும் பெரும் போட்டிப் பந்தயங்களில் அடிக்கடி நம்முடைய திறமையை வெளிப்படுத்தி இருக்கிரும்.

இவ்வளவு இருந்தும், நம் தேசத்திற்குப் புகழும் பெயரும் சம்பாதித்தவர்கள் வாழ்க்கையின் பலவிதத் துறைகளில் மற்ற ஜாதிக்குச் சரிநிகராக நின்ருலும் என்ன? ஒருவிஷயம்மட்டும் ஒப்புக்கொள்ள வேண்டியதே. ஒன்றுபட்ட ஜாதி, ஸமூகம் என்ற கணக்கில் நாம் வீழ்ச்சியடைந்தவர்கள்தாம். கல்வி மூலம் பொதுமாந்தரை மனிதர்களாக்காதவரை நாம் பிற ஜாதியாருடன் போட்டிபோட்டு முன்னுக்கு வரமுடியாது. பொதுமக்களே விழிபெறச் செய்யவேண்டுமானுல் அந்தப் பொறுப்பை இளேஞர்தாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். உண்மையான

பக பகவென நகைத்து, தனதனவெனப் பாடித் தித்தாம் என்று தாளங்கள் போட்டு.

3. ஆறுபோல் பெருகி நாடெங்கும் வழிவேன். புதுப் புது நாட்டிடை என் வாணியை ஏந்தி உள்ளத்தில் எழும் சொல்லேக் கொட்டிக் கீதங்கள் பல பாடுவேன்.

நாட்டுப்பற்று நம்மிடை ஊற்றெடுத்தால்தான் நாம் பொது ஜனங்களுடன் இழைந்து பழகமுடியும். இந்தத் தேசாபிமானம் உருவாக வேண்டுமானால் நம் இதயத்தைத் தாராளமாகத் திறக்கவேண்டியது அவசியம். நம் மனப்பான்மை யாவும் குறுகிய வரம்பிலிருந்து விரிவடைய வேண்டும். எல்லாக் குந்தகங்களையும் மீறிச் செல்ல வேண்டும். யதேச்சையான சிந்தை, விசாலமான இதயம் இவைப்பெற மாணவ வாழ்க்கையே உரிய காலமாகும்.

மனிதத்தன்மை அடைவதற்கான ஒரே உபாயம், அந்த மனிதத்தன்மையை வளரவிடாமல் தடுக்கும் தடைகளை உடைத்தெறிவதுதான். அக்கிரமம், அட்டூழியம், அநீதி தலைவிரித்து ஆடும் இடங்களில், நிர்ப்பயமாக, 'தூக்கிய சிரத்துடன் எதிர்த்துப் போராடுவோம். அதை நிர்மூலமாக்க வழிதேடுவோம்' என்ற உறுதி வரவேண்டும். இந்த யுகத்தில் நம்மைக் காத்துக் கொள்வதற்கும். நமது ஸமூகத்தைப் பாதாளத்திலிருந்து மேலே தூக்குவதற்கும் போதிய சக்தி காட்டிலோ, மலைக்குகையிலோ தவம் புரிவதனால் வந்துவிடாது. தன்னலம் இராத தொழில் மூலமாகத்தான் (நிஷ்காம கர்மயோகம்) அது கைகூடும். உள்ளத்திலும் புறத்திலும் போர் விளைத்து அதன் மூலமாகத் தான் அட்டூழியங்களை நேரில் கண்டும், அதைத் தடுக்க முன் வராத ஒருவன் தன் சொந்த மனித இயல்பிற்கே இழுக்குத் தேடிக்கொள்கிறான்; கொடூரங்களுக்கு ஆளான மனிதனுடைய தன்மைக்கும் மானக்கேட்டைக் கொண்டுவருகிறான். அட்டூழியத்தை அடக்கும் முயற்சியில் நஷ்டமோ, இன்னல்களோ, சிறைவாசமோ, கொடிய தண்டனையோ ஒருவனுக்கு ஏற்படுமாயின் அவன் பாக்கியசாலி ஆகிறான். ஒப்பற்ற தியாகத்தின் மூலம், துன்பங்களுக்குத் தலைகொடுப்பதன் மூலம் மனிதனுக்குரிய கௌரவத்தை அவன் பெறுகிறான். இன்று, உங்களைப்போன்ற ஒரு மாணவன் கட்க பஹதூர் சிங்,

அபலை ஒருத்தியின் மானத்தைக் காத்துப் பெற்ற துன்பப் பரிசினால் அல்லவோ பாரதநாடு போற்றும் சிறந்த வீரனாக விளங்குகிறான். கல்கத்தா கலைக் கழகங்களிலிருந்து ஒவ்வொரு வருஷமும் வெளியே வரும் தங்கப் பதக்கம் பெறும் நண்பர்கள் ஆயிரம் பேர் சேர்ந்தால் கூட ஒரு கட்க ஸிம்ஹனுக்கு ஈடு ஆகமாட்டார்கள். பள்ளியிலும் கலாசாலையிலும் வீட்டிலும் வழியிலும், துறையிலும் நடக்கும் அநீதங்களைக் கண்ட மாத்திரம் வீரர்களைப்போல் முன்னால் வந்து தடுப்பீர். அதனால் வரும் கஷ்டங்களை ஸம்மானமாக ஏற்பீர். ஸத்யத்திற்குப் போராடிய வீரர்களாக மாநிலத்தில் நிலவுவீர். உங்கள் வாழ்வே புதிய திசையில் திரும்பி முற்றும் மாறிப் போகும். எனது எளிய வாழ்வில் நான் திரட்டிய வலிமை சிறிதாயினும் இந்த உபாயத்தைக் கொண்டுதான் அதைச் செய்தேன்.

இன்னும் ஒரு விஷயத்தைக் கூறியதும் என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன். மாணவர்களை ஒரு ஸங்கத்தினராகச் செய்யவேண்டும். வருங்காலத்தில் அவர்களே அதிகாரிகள்: தேசத்தை மீட்கும் பெரிய காரியம் அவர்களால்தான் முடியும். அதற்கு வேண்டிய பலமும் திறனும் அவர்களிடம் விசேஷமாகத் தென்படுகின்றன. தம்மீது நம்பிக்கையும், தம் ஜாதியாரிடம் நம்பிக்கையும் இராதுபோனால் எந்தப் பெருஞ் செயலையும் அவர்களால் இயற்றமுடியாது. ஆனால் எனக்கென்னவோ வங்க தேசத்து மாணவர்களிடம் நம்பிக்கை உண்டு; பற்றுவைத்திருக்கிறேன். உள்ளூற அவர்கள்பால் ஆசை கொண்டுள்ளேன். அவர்களும் என்னிடம் அன்பாக இருக்கிறார்கள். என் இள நண்பர்களே! உங்களிடம் புதைந்து கிடக்கும் அளவற்ற பலத்தைப்பற்றி உங்களுக்குத் தெரியாது போனாலும் எனக்குத் தெரியும். உங்கள் ஆத்மாவை மறந்துவிட்டீர்கள். அந்த மறதி நீங்கும் நாள் வரும்

பொழுது, உங்களிடத்தில் நம்பிக்கையை இழந்தீர்கள். அந்த நம்பிக்கை திரும்பும் நாள்-ஸாதனையின் மூலம் நீங்கள் மரணத்தையும் வென்றுவரும் வேளையில்-அஸாத்ய மானதைச் செய்துமுடிப்பீர்கள்.

வேணுமென்றே நான் இன்று பேசியதில் அயல் நாட்டு மாணவர் கிளர்ச்சியைப்பற்றி எதுவும் குறிப்பிட வில்லை. பல புஸ்தகங்களிலும் பத்திரிகைகளிலும் இதன் விவரம் உங்களுக்குக் கிடைக்கும். இங்கே நான் உங்களுக்கு அவற்றையெல்லாம் கற்பிக்க வரவில்லை. உங்கள் மீது எனக்கு இருக்கும் ஆந்தரிகமான பற்றையும் என் சுய வாழ்வில் பெற்ற அனுபவங்களையும் சொல்லவே வந்திருக்கிறேன். நமக்குள்ளேயே சேர்ந்து உழைக்கும் ஸங்க வாழ்வை நாம் மேற்கொள்ள வேண்டும். மாண வர்களுக்கெனப் பாடல்களை இயற்றவேண்டும். பத்திரி கைகளை வெளிப்படுத்த வேண்டும். கொடிகளும் விளம்ப ரங்களும் தயார் செய்யவேண்டும். தனி இலக்கியத்தைச் சிருஷ்டிக்கவேண்டும். மாணவர்களிடையே தொண்டர் படை ஒன்றைப் புதிய தோரணையில் திரட்டவேண்டும். கல்கத்தா காங்கிரஸ் மகாநாட்டில் இருந்ததுபோல் ஸ்வேச்சா ஸேவக தளத்தின் உதவியால் மாணவர்கள் அஞ்சா நெஞ்சினராகவும் கஷ்ட நிஷ்டூரங்களைப் பொறுப் பவர்களாகவும் முன்னணிக்கு வருவார்கள். கட்டுத்திட் டங்களுக்கு அடங்கி நடப்பவராவார்கள். இந்த மாதிரி முறைகளால் மாணவ ஸமுதாயத்தில் பரஸ்பரமான அன் பும் ஒத்துழைப்பும் ஏற்படும். அவற்றின் வழியாக ஐக்கிய சக்தியும் வளரும். வர்க்க உணர்ச்சி உருவாகும். தற்சமயம் நம் மாணவர்களுக்கு அவசியமானது இதுதான். பாரத தேசத்தின் மூலைக்குமூலை மாணவரின் இதயம் ஒரே சுருதி யில் இழைந்து செல்லவேண்டும். ஐக்கிய பலங்கொண்ட இந்த மாணவர் கூட்டத்தின்முன் - அது எந்தச் சக்தியானு லும் சரி - தலை தாழ்த்தவேண்டியதுதான். விழிப்படைந்த

இந்த மாணவர் இயக்கம் எல்லாவிதமான தளைகளிலிருந்தும் சுய ஜாதியை விடுவித்து ஸ்வாதீன பாரதத்தை நிலைநிறுத்த வல்லது. உலகத்து வல்லரசுகளிடையே பாரத தேசமும் கௌரவ பீடத்தில் வீற்றிருக்கும்.

தம்பிமார்களே! என் பேச்சு முடிந்தது. நானும் மாணவனாக இருந்தேன், இன்றளவும் மாணவனாகவே இருக்கிறேன். உங்களில் ஒருவன் நான். என் உளமார்ந்த அன்பையும் ஆதரவையும் ஏற்பீர்.*

---

* 1336 வங்காப்தம் வைசாக மாதம், வெள்ளிக்கிழமை 13-ஆம் தேதி ஸ்ரீஹட் (சில்ஹட்) டைச் சேர்ந்த ஸுர்மா வெளி மாணவர் ஸங்கத்தினர் தம் தலைவராக ஸுபாஷைத் தேர்ந்தெடுத்தார்கள். ஆனால் எதிர்பாராதவிதமாக அவர் நேரில்வந்து அதில் கலந்துகொள்ள முடியாமல் போய்விட்டது. ஆகவே இந்தச் சொற்பொழிவை அனுப்பிவைத்தார். ஸங்கத்தின் உப தலைவர் இதைப் படித்தார், அன்று.

"ஒவ்வொரு மனிதனுக்கும் ஸமூகத்திற்கும் தனியான கொள்கையும் ஆதர்சமும் உண்டு. அந்தக் கொள்கையைப் பின்பற்றியே அவனது வாழ்க்கையும் ஸமூகத்தின் வளர்ச்சியும் முழு உருவுகொள்ளும். அந்ந ஆதர்சத்தைக் கடைப்பிடிப்பதே அவனுடைய கடமையாகும். இதை விட்டொழித்தால் அவனது வாழ்க்கையோ ஸமுதாயத்தின் நோக்கமோ பொருளற்றதாகும்; அவலமாகும்."

இன்று என்னை நீங்கள் இந்த ஸபைக்கு அழைத்த காரணம் உங்களுக்கே தெரியும். இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள எனக்கு அபிலாஷையும் துணிவும் உண்டானதற்குக் காரணம் இதுவே: உங்களைப்போல் என்னையும் ஒரு மாணவனுகவே எண்ணிக்கொள்வதுதான். ஜீவன வேதத்தை (வாழ்க்கைத் திருமறையை) நான் அத்தியயனம் செய்துகொண்டிருக்கிறேன். வாழ்வில் நேர்முகமாகக் காணும் கடின அனுபவங்களால் நமக்கு ஞானம் உதயமாகிறது. அத்தகைய அறிவினைப் பெறவே இன்று முனைந்துள்ளேன்.

ஒவ்வொரு மனிதனுக்கும் ஸமூகத்திற்கும் தனியான கொள்கையும் ஆதர்சமும் உண்டு. அந்தக் கொள்கையைப் பின்பற்றியே அவனது வாழ்க்கையும் ஸமூகத்தின் வளர்ச்சியும் முழு உருவு கொள்ளும். அந்த ஆதர்சத்தைக் கடைப்பிடிப்பதே அவனுடைய கடமையாகும். இதை விட்டொழித்தால் அவனது வாழ்க்கையோ, ஸமுதாயத்தின் நோக்கமோ பொருளற்றதாகும்; அவலமாகும். இடம், காலம் இவற்றின் வரம்புக்குள் ஆதர்சத்தின் வளர்ச்சியோ நோக்கமோ ஒரே நாளில், அல்லது ஒரே வருஷத்தில் ஏற்படுவதன்று. ஒருவனுடைய

வாழ்வில் ஸாதனையானது பல வருஷங்கள் நீடிக்கலாம். ஸமூகத்தின் வாழ்விலும் அத்தகைய ஸாதனையின் ஓட்டம் பல தலைமுறைகளாகப் பெருகிச் செல்லலாம். இதனாலேயே சான்றோர், 'ஆதர்சம், ஓர் உயிரற்ற, சலனமற்ற வஸ்து அன்று; அது வேகம் நிரம்பியது; ஜீவசக்தி ததும்புவது' என்றார்கள்.

இத்தகையதோர் ஆதர்சம் நம்முடைய ஸமுதாயத்தில் சென்ற நூறு ஆண்டுகளாக வெளிப்படப் பார்க்கிறது. ஆனால் நாம் அதை அறியாமல் இருக்கிறோம். ஆழ்ந்து சிந்திப்பவர்களும், உள்நோக்கு உள்ளவர்களுமே வெளி நிகழ்ச்சிகளின் வரிசைகளுக்குப் பின்னால் பெருகி ஓடும் இந்த ஆதர்சத்தின் போக்கைக் கண்டுபிடிப்பார்கள். இந்த ஆதர்சமே நம்முடைய யுகதர்மமாகும். இதன் நுட்பத்தை உணர்ந்த பின்புதான் ஒரு மனிதனுக்குத் தான் செல்லும் வழி எது, வழிகாட்டி யார், இவை யாவும் புரியும். ஆனால் இந்த அனுபவம் எல்லா ஸமயத்திலும் வராததனால் நாம் தவறான நெறியிலேயே, தவறான குருவைப் பின்பற்றிச் செல்கிறோம். மாணவர்களே! உங்கள் வாழ்வை உருவாக்க விரும்பினால், பிசகான மார்க்கம், தவறான தலைவன், இவர்களிடமிருந்து உங்களைக் காத்துக்கொள்ளுங்கள். உங்கள் அறிவை நம்பியே வாழ்வின் உண்மை ஆதர்சத்தைத் தெரிந்துகொள்ளுங்கள்.

பதினைந்து வருஷங்களுக்குமுன் வங்க தேசத்து மாணவர்களைத் தூண்டி எழுப்பிய ஓர் ஆதர்சம், ஸ்வாமி விவேகானந்தர் காட்டிய வைராக்கியப் பாதையே. அந்த ஆதர்சத்தின் மகிமையால் இள வங்காளிகள் ஆறு பகைகளையும், ஐம்புலன்களையும் வென்று, தன்னலம், மனமாசு யாவும் களைந்து ஆத்ம சக்தியினால் தூய அறிவுபடைத்த வாழ்வினைப் பெற முயன்றனர். ஸமூகம், ஜாதி இவை ஓங்கி வளர்வதற்கு அடிப்படையானது மனிதத்தன்மையின் முழு மலர்ச்சியே! விவேகானந்தரும், 'சரியான மனிதனை

உருவாக்குவதுதான் எனது பணி' என்று அடிக்கடி சொல்வார். மனிதனை உருவாக்கும் விஷயத்தைக் குறித்து இவ்வளவு அழுத்தமாக விவேகானந்தர் கூறினார் என்றாலும், அவர் ஸமூக விஷயத்தை அடியோடு மறந்து விடவில்லை. உழைப்பு இல்லாத ஸந்யாஸ தர்மத்திலோ, காரண புருஷன் இல்லாத ஊழ்வினையிலோ துளியேனும் அவருக்கு நம்பிக்கை இல்லை. ராமகிருஷ்ண பரமஹம்ஸர், தம் ஸாதனை, அனுபவங்கள் மூலமாக ஓர் ஐக்கிய சமயத்தைக் கண்டார். அதுவே விவேகானந்தருக்கு வாழ்க்கையின் மூலமந்திரமாக அமைந்தது. வருங்காலத்திற்கும் அதுவே பாரத ஸமுதாயத்திற்கு மூலக் கொள்கையாக இருக்கும். சமயங்களின் ஐக்கியமும், எல்லாக் கொள்கைகளுக்கும் இடந்தரும் விசால மனமும் உண்டாகாதுபோனால் விசித்திரம் நிரம்பிய நம்முடைய தேசத்தில், ஸமுதாயத்தைப் பலமுள்ள கட்டடமாக நிறுமிக்கவே நம்மால் முடியாது.

விவேகானந்தர் வாழ்ந்த காலத்துக்கு வெகு முன்னரே, இந்தப் புது யுகத்தை ஆரம்பித்தவர் ராம் மோஹன் ராய். அக்காலத்தில் தர்மத்தின் பெயரால் அதர்மங்கள் நடந்தன. துஷ்ட ஆசாரங்கள் தர்மத்தின் தோலைப் போர்த்துக்கொண்டு, ஸமூகத்தின் உடலைக் கொத்தித் தின்றுகொண்டிருந்தன; ஹிந்து ஸமுதாயத்தைப் பல துண்டுகளாகப் பிரித்தன. அந்த அதர்மத்தை நசுக்கவே ராம் மோஹன் ராய் உறுதிகொண்டார். வேதாந்தத்தின் உண்மைகளைப் பிரசாரம் செய்தால், ஹிந்து ஸமுதாயம் தன்போலி தர்மத்தின் போர்வையை விலக்கி, ஸத்யதர்மத்தைக் கடைப்பிடிக்கும்; சமய விகல்பங்களை அறவே ஒழித்து, ஒரே ஸூத்ரத்தில் இணைந்திருக்கும் என்று அவர் நம்பினார். சமய உலகில் பெரிய மாறுதலைக் கொண்டுவர வேண்டுமானால், முதலில் மனிதரின் சிந்தையில் கிளர்ச்சியை மூட்டவேண்டும். பாரத தேசத்தின்

சிந்தா சக்தியைத் தூண்ட அவர் மேல் நாட்டு விஞ்ஞானம், தத்துவம் இவற்றை அறிந்துகொள்வதன் அவசியத்தை உணர்ந்தார்.

பாரதநாடு விழித்து எழுவதற்கு மனோராஜ்யத்தில், ராம் மோஹன் கிளப்பிய பெரும்புரட்சி பிற்காலத்தில் மும்முரமாகி, நம் ஸமூக வாழ்விலும் படர்ந்தது. கேசவ சந்திர ஸேன் அவர்கள் காலத்தில் ஸமுதாயம் சீர் திருத்தக் காரியத்தில்மட்டும் ஈடுபட்டிருந்தது. பிராஹ்ம ஸமாஜம் விடுத்த புதிய வாணியின் விளைவாகத் தேசமெங்கும் புதிய மாறுதல் தோன்றியது. சில காலங்களுக்கு அப்புறம் பிராஹ்ம ஸமாஜம் ஹிந்து ஸமூகத்தைவிட்டு வேறாகப் பிரிந்துபோய்விட்டது. அப்புறம் ஹிந்து ஸமுதாயத்திலும் விழிப்பின் அறிகுறிகள் தோன்றின. அச்சமயம் பிராஹ்ம தர்மம் ஏற்றிய சுடர் மங்கிக்கொண்டு வந்தது.

ராம் மோஹன் காலந் தொட்டுப் பலவிதமான கிளர்ச்சிகளுக்கிடையே பாரத நாட்டின் விடுதலை அவா மெல்ல மெல்ல அதிகரித்துக்கொண்டு வருகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்த அவா, சிந்தை, ஸமூகம் இவை வரைக்கும் தோன்றினாலும் அரசியல் உலகில் தலைகாட்டவில்லை. காரணம், பாரதவாஸிகள் பிறர் ஆதிக்கத்தின் மோக நித்திரையில் அழுந்தி, இங்கிலீஷ்காரர் பாரதத்தை அடக்கி ஆள்வது ஒரு தெய்விக நிகழ்ச்சி என்று நினைத்திருந்ததுதான். சென்ற நூற்றாண்டின் இறுதியிலும், இந்த இருபதாவது நூற்றாண்டின் தொடக்கத்திலும் சுதந்திரத்தின் அகண்டமான ரூபம் ராமகிருஷ்ணர், விவேகானந்தர் இவர்களின் பிரசாரத்தின் மூலம் வெளியாயிற்று. 'சுதந்திரம், சுதந்திரமே நம் உள்ளத்தினின்று எழும் இசை' இந்த மணிவாசகம் ஸ்வாமிஜீயின் உள்ளத்திலிருந்து வெடித்து வெளிக்கிளம்பியபொழுது உலகமே வெறிபிடித்து, பெய்ம்

மறந்து அவரைப் பின்பற்றியது. அவர் தம் ஸாதனையை நடைமுறையிலும், சொற்பொழிவின் மூலமும் உலகிடைப் பரவச் செய்தார்.

ஸ்வாமி விவேகானந்தர் மனிதனை எல்லாவிதமான கட்டுகளிலிருந்தும் மீட்டு உண்மை மனிதனுவதற்கு வழி கோலினுர். மற்ருெரு புறம் சமயங்கள் யாவும் ஒன்றெனநிரூபித்துப் பாரத ஸமுதாயத்தைத் திடமான அஸ்திவாரத்தின்மேல் நிறுத்தினுர். ஸாகார வாதத்தை (கடவுளுக்கு உருவம் உண்டு; குணம் உண்டு என்ற கொள்கையை) கண்டித்து வேதாந்தத்தின் நிராகார வாதத்தை (கடவுளுக்கு உருவில்லை; குணம் இல்லை என்பதை) நிலை நிறுத்துவதன் மூலம் ஸமுதாயத்கை உலகம் பரவிய ஒரு பீடத்தில் நிறுத்தலாம் என்று எண்ணினுர். அந்தப் பாதையில்தான் பிராஹ்ம ஸமாஜம் சென்றது. அதன் விளைவாக ஹிந்து ஸமாஜம் அதினின்று விலகவேண்டியதாயிற்று. பிறகு விசிஷ்டாத்வைதவாதம், த்வைத அத்வைத வாதம் இவற்றின் மூலக் கருத்துகளைக் கொண்டு ஒரு ஸத்ய தர்மத்தைப் பரவச் செய்து எல்லாக் கொள்கைகளுக்கும் இடந்தரும் விசால மனப்பான்மையைப் போதிக்கும் பாரத ஸமுதாயத்தை ஒரே நூலில் கோக்க முயன்றனர் ராமகிருஷ்ண விவேகானந்தர்கள்.

விவேகானந்தருடைய கொள்கையில் நாம் காணும் சுதந்திரத்தின் அகண்டமான உருவம் அவர் இருந்த காலத்தில் அரசியல் துறையில் தென்படவில்லை. அரவிந்தர் வாயிலிருந்து முதல் முதலாக அந்தச் சுதந்தரவாணியை நாம் கேட்கிருேம். அரவிந்தர் 'வந்தே மாதரம்' என்ற பத்திரிகையில் "பிரிட்டிஷ் அதிகாரம் ஒழிந்த பூரண சுய ஆட்சிதான்வேண்டும்" என்று எழுதினுர். அன்றுதான் யதேச்சையை விரும்பிய தருண வங்காளம், கடைசியில் மனிதர்க்கேற்ற மனிதனைக் கண்டோம் என்ற உவகையில் ஆழ்ந்தது. பாவங்களில் திளைக்கும் வங்காளிகள்

பரதநாட்டின் விடுதலை ஸ்வப்னத்தைக் கண்டு மெய்ம் மறந்துபோய் நின்றனர். அன்றொருநாள் கல்கத்தாவின் திறந்த வெளியில் அரவிந்தர் ஜனத்திரளை நோக்கிக் கூறிய அந்தப் பொன்மொழிகள் இன்னும் இந்தக் காதில் ஒலித்துக்கொண்டிருக்கின்றன.

"உங்களில் சிலர் உயர்வான நிலைக்கு வருவதைப் பார்க்க விரும்புகிறேன். அந்த உயர்வு உங்கள் பொருட்டு அல்ல. இந்திய அன்னையை உயர்வாக்க வேண்டியே. அதனால் அவள் உலகின் சுதந்திர நாடுகளிடையே தலை நிமிர்ந்து நிற்க முடியும்."

பூரண சுதந்திரத்திற்குத் தூண்டுதல் ஏற்பட வங்க ஸமுதாயம் பெரும் புயலையும் கடுவளியையும் பொருட்படுத்தாமல் புரட்சி வெள்ளத்தை நாடெங்கும் கொண்டு வந்தது.

1921-ஆம் ஆண்டை அடைந்தபொழுது ஒத்துழையா இயக்கத்தின் கோஷத்திடையே, மற்றொரு மந்திர வாக்கு மகாத்மா காந்தியின் வாயிலிருந்து வந்ததைக் கேட்டோம்: "பொதுமக்களைப் புறக்கணித்து விட்டு அவர்களிடையே விடுதலைக்கான ஆவலை எழுப்பாது போனால் சுயராஜ்யம் கிடைத்தற்கரிதாகும்" என்றார் அவர். ஒத்துழையாமை இயக்கம் இந்தியாவிற்கோ, வங்க தேசத்திற்கோ புதியதன்று. முன் ஒரு சமயம் யசோஹர் ஜில்லாவில் இந்த வழியைக் கடைப்பிடித்து மக்கள், நீலி வர்த்தகர்கள் செய்த கொடுமைகளிலிருந்து தப்பி உயிர் பிழைத்தனர். ஆனால் 'மக்கள் வாக்கு' (கணவாணீ) என்று மகாத்மா சொல்லும் ஒரு விஷயம் பாரத அரசியல் உலகில் முற்றும் புதிது.

இதே வாக்கு இன்னும் தெளிவாகத் தேசபந்து சித்தரஞ்ஜன் தாஸ் அவர்களின் சரிதத்தில் தொனித்தது. அவர் தம் லாஹோர் பிரசங்கத்தில் தெற்றெனச் சொன்னார்: "நான் அடைய விரும்பும் ஸ்வராஜ்யம் கைப்பிடி

அளவு உள்ள மனிதர்களுக்காக அல்ல; அனைவருக்குந் தான்; பொது மக்களுக்குத்தான்" என்றார். இந்த ஆதர்சத்தை அவர் அகில இந்தியத் தொழிலாளர் மகா நாட்டில் எல்லா நாட்டினர் முன்பும் உறுதியுடன் நிறுத்தினார்.

தேசபந்துவின் புண்ணிய சரிதையில் மற்றொரு திருவாக்கு: மனிதனின் வாழ்வு, ஸமூகம், தனிப்பட்ட மனிதனது வாழ்க்கை, லக்ஷ்யம் இவை வெவ்வேறு அல்ல. பிளவற்றதோர் உண்மையையோ, இந்த வாழ்வினையோ இரண்டாகவோ பலவாறாகவோ வகுக்க முடியாது. மனிதனுடைய பிராணன் விழித்துக்கொள்ளும் பொழுது, அந்த விழிப்பின் அறிகுறி எத்திசையும் தோன்றும். எல்லாத் துறையிலும் புது வாழ்வின் ஸூசகங்கள் ஏற்படும். மலர்தலை உலகில் மனித வாழ்க்கை ஒரு விசித்திரமான புள்ளி. இந்தப் புதுமைக்கு இடைஞ்சல் விளைந்தால் வாழ்வின் இதழ்கள் மலரா. அதற்கு மாறாக நாம் நாசத்தையே அடைவோம். இந்த வைசித்திரியத்தின் மூலம், பல என்பதிலிருந்து ஒன்றின் வளர்ச்சிக்கும், ஜாதியின் உயர்விற்கும் வழி தேடவேண்டும்.

இந்த யுகத்தில் ராமகிருஷ்ண விவேகானந்தர்கள் அத்யாத்மிக உலகில் 'ஏகம், பஹு' (ஒன்று, பல) என்ற வித்தியாசத்தை ஒழித்து ஸமரசக் கொள்கையை ஸ்தாபனம் செய்தார்கள். இந்தக் கொள்கையைத் தேசபந்து ஜாதீய வாழ்விலும், அரசியல் துறையிலும் புகுத்த அரும்பாடு எடுத்துக்கொண்டார். "கல்வியில் ஒற்றுமை" என்ற விஷயத்தில் தேசபந்துவுக்கு நம்பிக்கை இருந்தது போல், "கல்வியில் பகைமை" என்ற விஷயத்திலும் நம்பிக்கைஉண்டு. ஒரேவார்த்தை: பண்புகளின் இணைப்பு-இதில் அவருக்குப் பற்று இருந்தபோதிலும், ஐக்கிய பாரதத்தில் அவருக்கு நம்பிக்கை இருந்தாலும், தனிப்படையான வங்கத்தின் மேன்மையை அவர் விரும்பினார்.

அரசியல் ஸமஸ்யையில் அவர் இந்தியாவுக்குக் கேந்திர ஸ்தாபன அந்தஸ்தைவிட ஐக்கிய நாட்டின் நிலையையே கோரினர்.

தேசபந்து எத்துறையிலும் முழு வளர்ச்சியில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தது இந்த யுகத்து ஸாதனையின் மகிமையே. இந்த ஸாதனை ஈடேறவேண் டின் சுதந்திரத்தின் அகண்ட உருவை முதலில் நாம் காண்பது அவசியம். ஆதர்சத்தை முற்றும் உணராத வரைக்கும் ஒருவன் எவ்வளவு உழைத்தாலும் வெற்றி பெற முடியாது, ஆகவே இன்று பாரதத்திற்கு - முக்கிய மாகப் பாரதத்தின் இளைஞருக்கு - நான் விடும் செய்தி இதுதான். ஸ்வாதீன இந்தியாவின் கனவைத்தான் நாம் காண்கிறேம். ஒவ்வொருவனும், அனைவரும், ஸமூகமும், விடுதலை பெற்ற அந்தச் சுதந்திர நாட்டின் கனவைத்தான். அரசியல் ஊழல்களிலிருந்தும் ஸமூகக் கோளாறுகளி லிருந்தும், பணப் பேராசையிலிருந்தும் விடுபட்டு ஒன்ருக வாழும் புண்ணிய பாரதத்தின் ஸ்வப்னத்தையே. அரசியல், ஸமூகம், பொருளாதாரம் இந்த மூன்று வெந்தழலிலிருந்தும் நாம் இந்த மானிட ஜாதியை மீட்கவேண்டும்.

அரசியல் தளைகளிலிருந்து தேசத்தை உத்தாரணம் செய்வோம். ஆனல் ஸமூக விஷயத்தில் கைவைக்கக் கூடாதென்போரும் ஸமூகத்தைத் தலைகீழாக்கிச் சீர்திருத்தம் செய்வோம். ஆனல் அரசியல் துறையில் புயலை எழுப்ப நாங்கள் இல்லை என்போரும் மருண்டு தவருன பாதையில் செல்வோர். நலிந்த உடலிற்கு ஆரோக் கியம் வளரவளர, ஒவ்வோர் உறுப்பும் பொலிவடைகிறது போல் விடுதலைபெறும் ஆர்வம் தேசத்தவர் மனத்துள் கொழுந்துவிடவிட எத்துறையிலும் இதன் சிலிர்ப்பு பரவு கிறது. எல்லாக் கட்டுகளிலிருந்தும் விடுபட்டுத் தேசம்

முன்னேற விரையும்பொழுது, "இவ்வளவே; மேலே செல்லவேண்டாம்" என்று தடுப்பவர் யார்?

பல பொத்தல்கள் மலிந்த அழுகிய நாற்றம் வீசும், இந்த ஸமுதாயத்தை வைத்துக்கொண்டு நாம் ஒருகாலும் சுதந்திரம் அடையமுடியாது. பூரண சுதந்திரம் வரவேண்டுமானல் நம்முடைய ஜாதியை விடுதலை பெறத் தூண்டிவிடவேண்டும். ஆனல் ஸமூக ஊழல்களுக்கு இடங் கொடுப்பவர்களும் பொருளாதாரச் சிக்கலில் அழுந்திக்கிடப்பவர்களும் தேசத்தின் விடுதலைக்காக ஏன் பரிந்து வரப்போகிருர்கள்? ஸமூகம், பொருளாதாரம் இவற்றில் ஏற்படும் அநீதங்களையே பெரிதாக நினைப்பவர்கள், இவைகளிலிருந்து விடுபட்டால் ஒழிய அரசியல் சுதந்திரத்திற்கு ஏன் ஆசைப்படப் போகிருர்கள்?

இன்று இங்கே கூடியிருக்கும் இள நண்பர்களுக்கு முக்கியமாகச் சொல்ல விரும்புகிறேன்: நீங்கள் தோன்றியுள்ள இந்த யுகத்தின் தர்மம் என்ன, தெரியுமா? - எத்துறையிலும் பூரணமான விடுதலை பெறுவதே. யதேச்சையான சூழ் நிலையில் நாம் பிறக்க ஆசைப்படுகிருேம்; வளர விரும்புகிருேம்; உயிர்விட விழைகிருேம்.

"புருஷ அவருத்த ஆபன தேசே.
நாரீ அவருத்த நிஜ நிவாஸே" *

இந்த நிலை இன்னும் எத்தனை நாள் நீடிக்கும்? நம் நாரியரின் படுமோசமான நிலையை நோக்குங்கால் இன்னும் எத்தனை நாளாகுமோ என்றே படுகிறது.

---

*தன் நாட்டில் கட்டுண்டான் காளை;
தன் வீட்டில் அடைபட்டாள் அபலை

*"ஸசல ஹயேஒ அசல ஸேஜே
பஸ்தார் சேயே ஓ பாரீ.
மானுஷ ஹயேஒ ஸங்ஏர் புதுல்
வங்க தேசேர் நாரீ"

சுதந்திரம் என்ற வார்த்தையைக் கேட்டதும் சிலர் இடிவிழுந்து போகிறார்கள். யதேச்சாதிகாரம் என்று நினைக்கும்பொழுதே சிலர் கண் முன்பு ரத்தக்களரி, தூக்குமேடை எல்லாம் வந்து நிற்கின்றன. ஸமூக வாழ்வில் சுதந்திரம் என்றவுடன், பலருக்குத் தாறுமாறான பயங்கரக் காட்சிகளின் நினைவு வந்துவிடுகிறது. மனிதர் உள்ளத்தில் மட்டும் கடவுள் இருப்பது மெய்யானால், மனிதத்தன்மை என்பது உண்மையானால், ஒருகாலும் ஸமூகமோ, தேசமோ தலைகீழாகப் போகாது; தவறான நெறியில் செல்லாது. யதேச்சை என்னும் கள் அருந்திய வெறியில் சில காலம் எல்லாம் தலைவிரி கோலமாகவே இருக்கும் - மயக்கம் தெளிந்ததும் அமைதியே நிலவும். சுதந்திரத்தைக் கோரும் ஓர் உரிமையில் தவறுகள் செய்யும் உரிமையுந்தான் இருக்கிறது. ஆகவே, வரப்போகும் பயங்கரங்களைப் பாராமல் விடுதலை வழியே ஏகுவீர்! மனிதன் என்பதை மட்டும் மறவாதீர்கள்! அந்தத் தன்மையைப் பெறுவதுதான் உங்கள் வேலை.

இன்று நம் நாட்டில் மூன்று பெரிய வகுப்பினர் ஒரு விதத்தில் உதவியற்று, செயலற்று விழுந்து கிடக்கிறார்கள் - மாதர், தாழ்த்தப்பட்டோர், தொழிலாளர்கள், உழவர்கள் இவர்களிடம் சென்று, "நீங்களும் மனிதர்கள். உங்களுக்கும் இந்தத் தேசத்தின் சுதந்திரத்

---

*ஆடி அசைந்தாலும் ஒரே நிலையில் நிற்குமவள்
ஊதிப்புடைக்கும் ஒரு துருத்தி.
பெண்ணாய்ப் பிறந்தும் பதுமையாவாள் வங்க நாட்டு நாரி.

தில் பங்கு உண்டு. எழுவீர் உறக்கத்திலிருந்து! சொந்த உரிமைக்காகப் போராடி அதிகாரத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள்'' என்று பிரசாரம் செய்யுங்கள்.

வங்க நாட்டு மாணவர்களே! இளஞ் சமூகமே! கலப் பற்ற, பிளவுபடாத விடுதலையின் உபாஸகர்களாவீர். நீங்களே வருங்காலத்துப் பாரத நாட்டின் உரிமையாளர். ஆதலால் எல்லா வகுப்பினரையும் எழுப்பும் பாரத்தை ஏற்றுக் கொள்வீர். உங்கள் ஒவ்வொருவரிடத்திலும் எல்லையற்றதும், அளவிடற்கரிதுமான பலம் குவிந்து கிடக்கிறது. இந்தச் சக்தியின் ஊற்றைக் கிளப்புங்கள். இந்தப் புதுவன்மையைப் பிறர் உள்ளத்திலும் பாய்ச்சுங் கள். உங்களை எதிர்பார்த்தே, உங்களிடம் சுதந்திர மந்திரத்தில் தீக்ஷைபெறவே எல்லாச் சாராரும் நிற்கின்ற னர். அவர்களை உய்வியுங்கள்.

பாரதம், என்று அந்நியரின் ஆட்சியின்கீழ் வந் ததோ அந்நாள் தொடங்கி அது திரண்ட ஸாதனை யின் வலிமையை மறந்துபோய்த் தனி ஒருவன் வளர்ச் சிக்குத் தன் சக்தி அனைத்தையும் பிரயோகித்தது. அதன் பலனாக ஆயிரக்கணக்கில் மஹா புருஷர்கள் இந்நாட்டில் தோன்றினார்கள். அவர்கள் வந்தும், இன்று நம் தேசம் வருந்தத்தக்க நிலையிலேயேதான் நிற்கிறது. நம் ஜாதியை அழிவிலிருந்து மீட்கவேண்டுமானால் ஸாத னையை வேறு முகமாகத் திருப்பவேண்டியது அவசியம். ஜாதியை விட்டால் தனிப்பட்ட ஆளுக்கு ஒருவித மதிப்பும் இல்லை. இந்த விஷயத்தை ஒவ்வொருவரும் உள்ளத்தில் ஆழப் பதித்துக்கொள்ளுங்கள்!

நம் ஜாதியில் தோன்றிய பலர் வம்சக் கிரமமாக, அரிய செல்வங்களையும் ஞானநிதியையும் பெருக்கியிருக் கின்றனர். இத்தனை நாள்வரை அந்த ஐசுவரியத்திற்கு நம் ஜாதியினர் உரிமையற்றவராக இருந்துவருகிறார்கள். இன்றுதொட்டு அவர்களை அதற்குரியவராக ஆக்கவேண்

டும். ஜாதி, சமயம் போன்ற வேற்றுமையே இராமல் எல்லோருக்கும் சரிசமமான அதிகாரமும் சலுகையும் சந்தர்ப்பமும் தரும் பாரதத்தை அமைக்க விரும்புகிறோம் என்பதை அனைவரும் உணரும்படி செய்யவேண்டும். தேசமக்கள் இதன் உண்மையை என்று உணருகிறார்களோ, அன்றே விடுதலை பெற விரைவார்கள்; இது திண்ணம்.

இன்னும் ஒரு விஷயத்தைச் சொல்லிவிட்டு நிறுத்திக்கொள்ளுகிறேன். நம் ஜாதியின் உடலில் ஓடும் ரத்தம் குறைந்து கெட்டுவிட்டது. புது ரத்தத்தை உண்டாக்கவேண்டும். இந்தியாவின் சரித்திரத்தைப் படித்துப் பாருங்கள். எத்தனையோ தடவை ரத்தக்கலப்பு ஏற்பட்டிருக்கிறது. அந்த ரத்தக் கலப்பினால் அல்லவோ பாரத ஸமுதாயம் மரணத்தறுவாயில் இருந்தும் புத்துயிர் பெற்று இன்றளவும் அழியாமல் இருக்கிறது. ரத்தக் கலப்பைப் பார்த்து நடுங்குபவர்கள் நம் ஸமுதாய வரலாற்றை அறியாதவர்கள். மனுஷ்ய தத்துவத்தைப் பற்றி ஆழ்ந்த ஞானம் இராதவர்கள். இன்று கலப்பு மண முறையை ஏற்று, ரத்தக் கலப்பிற்கு நாம் உதவி செய்ய வேண்டும். இந்த ரத்தக் கலப்பை உண்டாக்குவதற்குப் பிறநாட்டாரை நாம் எதிர்பார்க்க வேண்டியதில்லை. நம் நாட்டில் கலப்பு மணம் வெகு காலமாகச் சாஸ்திர விரோதமாகக் கருதப்படுகிறது. அதனாலேயே இதை அமுலுக்குக் கொண்டுவந்தால் ரத்தக் கலப்பு ஏராளமாக ஏற்படுமென்று நாம் தயங்குகிறோம். ஆனால் இந்த ரத்தச் சேர்க்கையினால் அமோகமான ஜீவசக்தியை நாம் மீண்டும் பெறுவோம்.

சகோதரர்களே! என் உரையை இங்கே முடித்துக் கொள்கிறேன். ஸாம்யவாதம், சுதந்திரம் இந்த இரண்டையும் பரவச் செய்ய நீங்கள் ஊர் ஊராகப் போக

வேண்டும். இன்று நான் உங்கள் கண்முன் வரைந்த சுதந்திர பாரதத்தின் திருவுருவை எல்லாத் தேசமக்கள் எதிரிலும் பிரித்துக் காட்டுங்கள். சுதந்திரத்தின் ருசியை ஒருதரம் உள்ளத்தில் அவர்கள் நுகர்வாராயின் வெறி பிடித்து ஓடிவரமாட்டார்களா! உங்கள் இதயத்துள்ளேயே இந்த விளக்கை ஏற்றுங்கள். இந்தத் தீபத்தின் துணையைக்கொண்டே, ஒவ்வொருவருடைய வீட்டுவாயிலிலும் நின்று சீனத்து மாணவர்கள்போலப் புறப்படுங்கள்! ருஷிய இளைஞர்கள்போலக் கிளம்புங்கள்! ஒவ்வோர் ஏழையின், ஒவ்வொர் உழவனின் ஓலைக் குடிலினுள்ளும், குப்பை கூளம் நிரம்பிய பாட்டாளியின் இடிந்த வீட்டினுள்ளும் புகுந்து அவர்களை எழுப்புங்கள்!-மேலும் நடவுங்கள். பெண்பாலார் சக்தியின் வடிவங்களாக இருந்தும், இன்று ஸமூகத்தில் அழுந்திக் கிடக்கிறார்கள். அந்த அபலைகளையும் எழுப்புங்கள்.

*" ஆபனார் மான ராகிதே, ஜனனி
ஆபனி க்ருபாண தரோ"

என்று உத்ஸாகம் ஊட்டுங்கள்.

இதற்குமேல் கூட்டங் கூட்டமாகப் புறக்கணிக்கப்பட்ட வங்க ஸமூகத்தை நோக்கிச் செல்லுங்கள்: "தம்பீ! இத்தனை நாளுக்குப் பிறகு புதியதோர் மந்திரத்தை உச்சரித்துக்கொண்டு உன்னை விடுவிக்க வருகிறேன் - மனிதனுக்குரிய பூரண அதிகாரம் உனக்கும் உண்டு எனச் சொல்லத்தான் வந்திருக்கிறேன். எழுந்திரு! கண் விழிப்பாய்! வீரப் புதல்வர்களைப் பெற்ற இந்த மாநிலம் உனக்குந்தான் சொந்தம்" என்று சொல்லுங்கள்.

---

*உம் மானத்தைக் காக்க, தாயினமே!
கூரிய வாளை ஏந்துவீர்!

ஒன்று கேட்கிறேன்: இதைச் செய்ய உங்களால் முடியுமா? ஆம்; முடியும். இந்தக் காரியம் உங்களால் ஆகும். அதைச் சொல்லவே நான் இங்கே வந்தது. முன்னே செல்லுங்கள் - வெற்றி உங்களுக்குத்தான். நீங்கள் புரியும் சாதனைகள் கைகூடட்டும். பாரதம் மீண்டும் விடுதலை பெறட்டும். உங்கள் வாழ்க்கை பயனுறுக!



ஹுக்ளீ ஜில்லா மாணவர்கள் ஸம்மேளனத் தலைமை உரை - 21-7-1929.

"இன்றைய மாணவர் கிளர்ச்சி பொறுப்பு உணராத, யுவக யுவதியர் ஈடுபடும் லக்ஷயம் அற்ற ஓர் இயக்கமல்ல. கடமையும் சுறுசுறுப்பும் கொண்ட இளைஞரைத் தேசப் பணிக்கு ஏற்றவர்களாகச் செய்வதே இந்த இயக்கத்தின் நோக்கம்."

சுதந்திரம் என்றால் ஸமூகம், மனிதன், ஆண், பெண், பணக்காரன், ஏழை யாவருக்கும் சுதந்திரம். இது அரசியல் உலகில் சுய ஆட்சி பெறுவதுமட்டுமன்று. சமமான பணப்பங்கீடு, வகுப்பு வேற்றுமையையும் ஸமூக ஊழல்களையும் போக்குதல், கக்ஷிகளின் குறுகிய நோக்கங்களையும் முரட்டுத்தனத்தையும் ஒழிப்பது இவற்றைத்தான் குறிக்கும். ஆய்ந்து பாராதவர்கள் இந்த ஆதர்சத்தில் அவநம்பிக்கைகொண்டு இது நடக்காத கதை என்பர். ஆனால் இதுதான் தேசத்தில் இப்பொழுது மூண்டிருக்கும் தாகத்தைத் தணிக்கச் சக்தி வாய்ந்தது. முழுவதும் விடுதலையடைந்த பாரத பூமியின் கல்பனை வடிவமே என் நெஞ்சு நிரம்பியுள்ளது. வாழ்க்கையின் ஒரே லக்ஷயம் என்ன? எல்லாப் பிணைகளிலிருந்தும் விடுபடுவதுதான். சுதந்திரத்தின்பொருட்டு விழையும் ஓர் ஆர்வமே, நம் வாழ்க்கையின் இன்னிசை. பாரததேசத்தினால் உலகமே பயனடைய வேண்டியிருக்கிறது. சுதந்திரமே ஜீவனம். இதைத் தேடுவதிலும் வாழ்வைப் பணயம் வைப்பதிலும் அழியாத கீர்த்தி மண்டிக்கிடக்கிறது.

* * *

பாஞ்சால வாசிகளான என் சகோதர சகோதரிகளே!

ஐயாறு பாயும் இந்தப் புனித பூமியில் இதுவே முதலில் நான் கால் வைப்பது. இவ்வளவு ஆந்தரிகமான அன்புடன் என்னை வரவேற்றதற்கு, உங்களை உள்ளூறப்

போற்றுகிறேன். நீங்கள் காட்டும் மரியாதைக்கும் முகமனுக்கும் நான் தகுதியற்றவனென்பதை அறிவேன். ஆகவே இன்று எனது ஒரே வேண்டுகோள் என்ன வெனில், இந்த இடத்தில் எனக்குக் கிடைத்த ஆதரவுக் கும் உபசாரத்திற்கும் நான் யோக்கியதை உள்ளவனாக இருக்கவேண்டுமென்பதே.

என்னுடைய கொள்கைகளைப்பற்றித் தெளிவாகப் புரிந்துகொள்வதற்கே நீங்கள் என்னைக் கல்கத்தாவி லிருந்து வரவழைத்தீர்கள். அந்த ஆக்ஞையைச் சிர மேற்கொண்டு இன்று உங்கள் முன்னிலையில் வந்து நிற் கிறேன். ஆனால் முக்கியமாக என்னை, நீங்கள் அழைத்த காரணம் என்னவோ? கீழ்நாடும் மேல்நாடும் ஒன்றுகூடி இரண்டிற்கும் பொதுவான ஒரு பிரச்னையைத் தீர்த்துக் கொள்வதென்ற எண்ணத்தினாலா? இல்லை, இங்கிலீஷ் காரர் முதல் முதல் வென்று ஆட்சியைப் பரப்பிய வங்க தேசமும், கடைசியாக அவர்கள் அதிகாரத்தின் கீழ்வந்த பாஞ்சால தேசமும் ஒன்றுக்கொன்று ஏதாவது உதவிபுரிந்து கொள்வதன் நிமித்தமா? இன்றேல், உங் கள் உள்ளத்திலும் என் உள்ளத்திலும் ஒரே ஆசை யும், ஒரே லக்ஷயமும் ஏககாலத்தில் தோன்றியதனாலா?

பாரதநாட்டிலுள்ள ஒரு கல்லூரியிலிருந்து கடத்தப் பட்ட மாணவனாக நான் இன்று லாஹோரில் மாணவர் கூட்டத்தில் கலந்துகொள்ள வந்திருப்பது தெய்வத்தின் விந்தையான சூழ்ச்சியே. எங்கிருந்தோ புதுப்புது ஆட் கள், புதுப்புது பாவங்கள் இன்று இந்த உலகில் ஆதரவு பெறுவதைப் பார்த்துப் பெரியவர்களெல்லாம் இந்தக் காலத்தைப் படுமோசமான யுகமென்றே சொல்லி வருந்து கிறார்கள். இதில் என்ன வியப்பு? என்னுடைய பூர்வீ கத்தை அறிந்தே உங்கள் மத்தியில் என்னை அழைத் திருக்கிறீர்கள். இன்று வேறு என்ன சொல்வதற்கு

இருக்கிறது? நீங்களே சுலபமாக ஊகித்துக்கொள்ள லாம்.

நண்பர்களே! விசேஷமாக, பஞ்சாப் இளைஞரிடத் தில் எனக்கு எப்பொழுதுமே ஒருவிதப் பற்று உண்டு. அதை இங்கே முன்னால் குறிப்பிடுகிறேன். இதற்காக என்னை மன்னிப்பீர்களென்று நம்புகிறேன். ஜதீந்த்ர நாத தாஸ் போன்ற சில வங்க நாட்டுத் தொண்டர்கள் சிறையில் வாடும்பொழுது அவர்களுக்காக நீங்கள் என்ன வெல்லாம் துன்பத்தை அனுபவித்தீர்கள்! அவர்களை மீட்க நீதிஸ்தலத்தில் வாதாடினீர்கள். உண்ணாவிர தம் பூண்ட சமயம் நெக்குருகினீர்கள். உயிருடன் இருந்தபோதும் அவர்கள் மரித்த பின்பும் நீங்கள் காட் டிய அன்பும் மரியாதையும் - வங்காளி ஒவ்வொருவன் மனத்துள்ளும் பதிந்து இருக்கின்றன-மறக்கமாட்டோம். அதுமட்டுமா, ஜதீன்தாஸின் சவத்தோடு கணக்கற்ற பஞ்சாபிகள் கல்கத்தாவரைக்கும் வந்தார்கள். பாவத் தில் துழவும் ஜாதியினர் நாங்கள். உங்கள் பெருந் தன்மை எங்களுக்கும் உங்களவர்களுக்கும் இடையே நட்பின் பாலத்தை எழுப்பியது. கெட்டகாலம் வந்த போது பஞ்சாப் வங்காளத்திற்குச் செய்திருக்கும் ஓர் ஒப்பற்ற பணியையும் சகாயத்தையும் வங்காளிகள் ஒரு கணமும் மறவார்கள்.

ஜதீன்தாஸைக் குறித்துக் கல்கத்தாவில் நடந்த ஒரு மாபெருங் கூட்டத்தில் உங்கள் தேசத்தின் கௌரவ மான தலைவர் டாக்டர் ஆலம் தம் அற்புதமான பிரசங் கத்தில், "ஜதீனின் வாழ்க்கையும் மரணமும், சூரிய சந்திரர்கள் மாறின திசையில் உதித்து அஸ்தமிப்பது போல ஒரு நிகழ்ச்சி. உயிருடன் இருக்கையில் கல் கத்தாவிலிருந்து அவர் லாஹோருக்கு வந்தார். இறந்தபின் அவரை லாஹோரிலிருந்து கல்கத்தாவுக்குக் கொண்டு போனார்கள்" என்று சமத்காரமாய்ச் சொன்னார். மறலி

உண்ட அவருடைய தேகம் வெறும் பிணமாகக் கல்கத்தாவுக்குத் திரும்பவில்லை. தூய்மை, தெய்விக மகிமை இவற்றின் சின்னமாகத்தான் திரும்பியது. ஜதீன் சாகவில்லை. பிற்காலத்தவர்களுக்கு வழிகாட்டவே, அவர் வானில் ஒளிரும் தாரகைபோலவே நம்முடைய உள்ளத்தில் வாழ்ந்துவருகிறார். நம் ஜாதியின் ஆத்மாவாகத் திகழ்கிறார். தியாகத்தினாலும் துயரை மேற்கொண்டதாலும் அவர் அமரவாழ்வு எய்தினார். பாவத்தின் உருவில் ஆதர்சத்திடையே - மானிடர் சரித்திரத்திலே, தூய்மையும் மேன்மையுமான வாழ்வினைப்பற்றிக் கூறும் படலத்திலே அவர் நடுநாயகமாக விளங்குவார். தம் உயிரை ஈந்து அவர் பாரத நாட்டின் ஆத்ம சக்தியை எழுப்பியதோடு, நம் இரு பிரதேசத்தாரையும் அறுத்துக் கொள்ள முடியாதபடி பிணைத்துவிட்டார்.

நாம் படிப்படியாகச் சுதந்திரம் உதயமாகும் புதிய திசையே முன்செல்லச் செல்ல, துன்பத்தையும் வேதனையையும் வழிய வழியத்தான் நாம் உட்கொள்ள வேண்டும். ஆளும் சக்தி நாளுக்குநாள் தன் கைகளை விட்டு நழுவுவதைப் பார்க்கும்பொழுது அதிகாரவர்க்கத்திற்குக் கண்சிவப்பது ஸஹஜந்தானே. கொஞ்சங் கொஞ்சமாக நாகரிகத்தின் போலிவேஷத்தைக் களைந்துவிட்டு அதிகாரிகள் அட்டூழியத்தின் பயங்கரத் தோற்றத்தைக் கொள்வதில் வியப்பு ஒன்றுமில்லை. எல்லா மாகாணங்களையும்விட, பஞ்சாப், வங்காளம் இரண்டின்மீதே கொடுமைகளை இழைத்துள்ளனர். உண்மையில் இது ஸந்தோஷப்பட வேண்டிய விஷயமே. காரணம், இந்த அநீதங்களுக்கிடையே புகுந்துதான் நாம் சுதந்திரத்தை நோக்கி ஏறமுடியும். துன்பம் அனுபவிப்பதன் மூலமே உண்மை வீரர்கள் தோன்றுவார்கள். ஆகவே, அட்டூழியங்களை நாம் வரவேற்போம், அதற்கு நல்ல சந்தர்ப்பம் வாய்க்க வழிதேடுவோம்.

உங்களுக்குத் தெரியாமல் இருக்கலாம்; வங்காள இலக்கியத்தில் பாஞ்சாலத்தின் பழைய வீரச் செயல்களைச் சொல்லும் காவியங்கள் உள்ளன. அவற்றைப் படித்து இன்புற்றவர்கள் மனத்துள் சுதந்திரப் பற்று வேரூன்றிவிட்டது. ரவீந்திரர் போன்ற புகழேந்திய கவிகள் பலர் உங்களுடைய வீர சிரேஷ்டர்களின் கீர்த்தியைத் தம் பாமாலைகளில் புனைந்தார்கள். வங்காளிகள் ஒவ்வொருவர் வீட்டிலும் இவை வழங்குகின்றன. உங்களுடைய ஸாது ஸந்தர்களின் அருள்வாக்கு யாவும் எங்களுக்குப் பழக்கமானவையே. வேதனையிலும் துயரிலும் எங்களுக்கு அளவற்ற ஆறுதலைத் தருவன அவை. இந்த ஒற்றுமை வெறும் மனம் வரைக்கும் நின்றுவிடவில்லை. அரசியல் விஷயத்திலும் நாம் இருவரும் பரஸ்பரமாக இணைபவரே. பாரதநாடு மட்டுமா, தொலைவான பர்மாவின் வெஞ்சிறையிலும் அந்தமான் தீவிலும், சுதந்திரத்தை நோக்கிச் செல்லும் வங்க யாத்திரிகர்கள், பஞ்சாப் நண்பர்களைக் கட்டித் தழுவிக்கொண்டிருக்கிறார்கள்.

அன்புடையீர்! இந்தப் பிரஸங்கத்தில் அதிகமாக அரசியல் விஷயங்களையே ஆராயப் புகுந்ததைப்பற்றி நான் எந்த ஸமாதானமும் கூற விரும்பவில்லை. இந்த நாட்டில் ஒரு சாரார் இருக்கின்றனர். அவர்களுள் கண்ணியமானவர்களும் இருக்கின்றனர். "பிறர் ஆளுகையின்கீழ் உழலும் ஜாதியினர் அரசியல் விஷயங்களில் ஈடுபடுவது வீண். விசேஷமாக மாணவர்கள் இதில் கலந்துகொள்வது நல்லதல்ல" என்று அவர்கள் நினைக்கிறார்கள். என்னுடைய துணிபு இதுவே: அரசியல் விஷயத்தில் தலையிடுவதைவிட அடிமைப்பட்ட ஜாதியாருக்கு வேறு ஜோலியே இல்லை. பராதீனமான தேசத்தில் தோன்றியுள்ள எந்தவிதமான பிரச்னைக்கும் அடிக்களமாக அரசியலே நிற்கிறது. தேசபந்து தாஸ், "வாழ்க்கை

அகண்டமானதோர் உண்மை. அதைப் பல கூறுகளாக்க முடியாது" என்பார். அதனால் அரசியல், பொருளாதாரம், கல்விமுறை இவைகளைப் பேதப்படுத்திக் கூறுவதில் அர்த்தமில்லை. மனிதனுடைய வாழ்க்கையைத் துண்டு துண்டாகச் செய்தால் அதன் நிறைவை அறியமுடியாது. ஒன்றுக்கொன்று உறவுடையவை ஜாதியின் பல உறுப்புக்கள். அதன் ஸமஸ்யைகளும் அவ்வாறே. அந்நியர் ஆட்சியின்கீழ் உழல்வோர் படும் துன்பங்கள், அவர்கள் பொறுத்துக்கொள்ளும் அநீதங்கள் இவைகளுக்கெல்லாம் காரணம் ஒன்றே: அது அரசியலில் அடிமைத்தனமே. மாணவர்கள் இந்தப் பிரச்னையைக் குறித்து உதாஸீனமாக இருக்க முடியாது. எப்படி அரசியலில் ஸ்வாதீனம் பெறுவதென்பதை ஆராய்வதே அவர்கள் வேலை.

மற்ற இயக்கங்களைக் கண்டிக்காமல் முக்கியமாக அரசியல் சம்பந்தமான விஷயங்களில் இவர்கள் குறுக்கிடுவதன் அர்த்தம் எனக்கு விளங்கவில்லை. அடிமை ஜாதியாரின் எல்லாப் பிரச்னைகளுக்கும் வேராக இருப்பது அரசியலே. ஆகவே, ஒவ்வோர் இயக்கமும் அரசியல் கிளர்ச்சிதான். சுதந்திரம் பெற்ற நாடுகளில் அரசியல் இயக்கங்களில் கலந்து கொள்வது செய்யக்கூடாத காரியமென்று கருதப்படவில்லை. மாணவர்களுக்கு உத்ஸாகத்தையும் தருகிறார்கள். ஏனெனில், இந்த மாணவர்கள் மத்தியிலிருந்தே பிற்காலத்து மேதாவிகளும் அரசியல் ஞானிகளும் தோன்றுவார்கள். இந்திய மாணவர்கள் அரசியல் வேலைகளில் கலந்துகொள்ளாமல் இருந்தால் உண்மை உழைப்பாளியோ சிறந்த அறிவாளியோ எங்கிருந்து வரப்போகிறான்? இதன் மூலமாகத்தான் மனிதப்பண்பு முழுவதும் விகாசமடையும். தொழிலற்றுத் தனிமையில் புரியும் ஸாதனையினால் ஒருபொழுதும் மனிதத்தன்மை உருவெடுக்காது.

ஆதலால் அரசியல், ஸமூகம், கலை இந்தத் துறைகளில் இறங்கி வேலை செய்வது உங்கள் கடமையாகும்.

வெறும் புஸ்தகப் புழுக்களையும் 'நல்ல பிள்ளை' களையும், ஆபீஸில் பேனாவை ஓட்டும் குமாஸ்தாக்களை யும் உற்பத்தி செய்வது நம் கல்லூரிகளின் நோக்க மாக இருக்கக்கூடாது. வாழ்வின் ஒவ்வொரு துறையி லும் நல்ல தேர்ச்சிவாய்ந்து, சுயநாட்டிற்குத் தொண்டு செய்வதற்குத் தகுதி உடைய இளைஞரைச் சிருஷ்டிப்பது தான் கழகத்தாரின் நோக்கமாக இருக்கவேண்டும்.

இதற்கான நல்ல அறிகுறிகள் இப்பொழுது தென் படுகின்றன. இந்தியாவெங்கும் உண்மையான எழுச்சி மாணவர்களிடையே பரவி வருகிறது. இவர்களது பெரு முயற்சி, விசாலமானதோர் இளைஞர் கிளர்ச்சியின் ஓர் அம்சமென்றே கருதுகிறேன். இன்றைய மாணவர் சம்மேளனத்திற்கும், பத்து வருஷத்திற்கு முன்னால் இருந்த மாணவர் ஸங்கத்திற்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது! அந்தக் காலத்து மாணவர் ஸங்கங்கள் சர்க் காரின் ஆதரவில் கூடும். அரசியல் ஸம்பந்தமாகப் பேசுவதோ அதில் கலந்து கொள்வதோ கூடாது என்ற தடை உத்தரவு அந்த ஸங்கங்களின் வாயிலின் முன்னால் நிற்கும். ஒரு விஷயத்தில் பழைய காங்கிரஸ் கூட்டங்களோடு இவற்றை ஒப்பிடலாம். முன் நடந்த காங்கிரஸ் மகாநாடுகளில் முதல் தீர்மானம், 'அரசாங் கத்துடன் ஒத்துழைப்போம்' என்பதுதான். இந்தக் காலத்திலோ, காங்கிரஸும் சரி, மாணவர் இயக்கமும் சரி, இந்த அவகேடான நிலைமையைத் தாண்டி வந்திருக் கின்றன. இன்று நம் எண்ணங்கள், காரியமுறைகள் யாவும் எந்த மாதிரி கட்டுக்கும் உட்பட்டு இருக்க வில்லை. முன்னேறி வருகின்றன, விடுதலையை நோக்கி.

இன்றைய மாணவர் கிளர்ச்சி பொறுப்பே உணராத யுவக யுவதிகள் ஈடுபடும் லக்ஷ்யமற்ற ஓர் இயக்கம் அன்று. கடமையாற்றும் குணமும் சுறுசுறுப்பும் கொண்ட இளைஞரைத் தேசத் தொண்டிற்கு ஏற்பு வாய்ந்தவர்களாகச் செய்வதே இந்த இயக்கத்தின் நோக்க மாகும். இதற்கு இரண்டுவிதக் காரியமுறை இருப்பது அவசியம். முதலாவது, மாணவர்களின் சொந்தமான குறைகளை அகற்றுவது; தேக ஆரோக்கியம், மனோபலம், நடத்தையில் தூய்மை இவற்றின் மூலம் புத்துணர்வைப் பெறவேண்டியது. இரண்டாவது, 'பிற்காலத்தில் நாட்டை ஆளப்போகிறவர்கள் நாம்' என்ற நினைவுடன் வாழ்க்கைப் போருக்குத் தம்மைத் தகுதியுள்ளவர்களாகச் செய்துகொள்ளவும், எந்தவிதமான ஸமஸ்யைகளுக்கும் தலை கொடுக்கவும், எதிரிடையாக நிற்கும் எந்தவிதமான பகையையும் வென்று வரவும் உறுதி இருக்கவேண்டும். இப்பொழுதே இதற்கு வேண்டிய முன்னெச்சரிக்கை எடுத்துக்கொள்வது அவசியம்.

இன்றைய இளைஞர் எழுச்சியில் ஒரு விசேஷம் இருக்கிறது; ஒரு பரபரப்பு - தற்காலச் சீர்கேடான நிலையைத் தாளாத ஆத்திரம் - நூதனமாகவும் சிறப்பாகவும் மானிட ஸமூகத்தை அமைக்கவேண்மென்ற தீவிர ஆவல். பொறுப்புணர்வும், தன்னம்பிக்கையுமே இவ்வெழுச்சியின் மூலபலங்கள். இளமை இன்று முதியவர்கள் மீது எல்லாப் பாரத்தையும் தள்ளிவிட்டு நிச்சிந்தையாக இருக்க விரும்பவில்லை. காயமனோவாக்காக இளைஞர், தேசம் தங்களைத்தான் எதிர்பார்க்கிறது. அதன் வருங்காலம் தங்களால்தான் புகழ்மிக்கதாகும் என்று அறிந்துகொண்டிருக்கிறார்கள். இத்தகைய பொறுப்பை மேற்கொள்வதைத் தங்கள் கடமையெனக் கருதுகிறார்கள். அதைக் காப்பாற்றிக் கொள்வதற்கு அரிய ஸாதனைகளையும் செய்கிறார்கள். இளைஞர் எழுச்சியின் ஒரு கூறுண

இந்த மாணவர் இயக்கமும் இதே ஆதர்சத்தின் ஒளியில் செல்கிறது.

இங்கே நான் குறிப்பிட்ட இரண்டு காரிய முறைகளில் முதல் சொன்னது, நம் பெரியோர்கள் கண்ணிலோ அதிகார வர்க்கத்தின் பார்வையிலோ படாது. ஆனால், இரண்டாவது முறைக்குத்தான் முட்டுக்கட்டை ஏற்படும். முதலாவது காரியமுறை என்னவென்பதை இங்கே நான் விஸ்தரிப்பது அநாவசியம்; அதுஉங்கள் பெரியோர் வகுத்துள்ள வழியைப் பொருத்தது. ஒவ்வொரு மாணவனுக்கும் தேகபலமும், திட ஆரோக்கியமும், தூய நடத்தையும், அறிவு வேட்கையும், உயர்ந்த லக்ஷ்யமும் இருக்கவேண்டும். அப்படி உங்கள் பெரியோர்கள் இதற்கான வழியைக் கோலாமல் இருந்தால், நீங்களே இதைத் தேடிக்கொள்ளவேண்டும். இதற்குப் பெரியோர்கள் உத்ஸாஹம் ஊட்டினால் பின்னும் நன்மையே. இதற்குக் குறுக்காக நின்றால் அவர்களை லக்ஷ்யம் பண்ணமல் முன்னேறுங்கள். உங்கள் வாழ்வை நீங்கள் தானே சமைத்துக்கொள்ளவேண்டும்? யாருக்குச் சொந்தம் அது? அது மேன்மையுறும் மார்க்கத்தைத் தேடுவதன்றோ உங்கள் ஒவ்வொருவருடைய கடமை!

இதை ஒட்டி ஒன்று சொல்ல விரும்புகிறேன்: மாணவர் ஸங்கங்கள், கூட்டுறவு சுதேசிச் சாமான் கடைகள் ஏற்படுத்தி மாணவர்களுக்கு இவற்றின் மூலம் பல உபகாரங்களைச்செய்ய இயலுமென எனக்குப் படுகிறது. மாணவர்கள் இந்த மாதிரி ஸ்தாபனங்களை நேர்மையாக நடத்துவாராயின் இரண்டு காரியங்கள் சாத்தியமாகும். ஒன்று, மாணவர்கள் குறைந்த விலைக்குச் சுதேசிச் சாமான்களை வாங்கமுடியும். மற்றும், குடிசைத் தொழில்கள் விருத்தி அடையும். இரண்டாவது, கார்பார் செய்வதில் அனுபவம் வருவதோடு, வரும் லாபத்தை மாணவர் நலனுக்குச் செலவு செய்யலாம்.

மாணவர் நலனைக் கோரி, வியாயாம ஸமாஜங்கள் (தேகப்பயிற்சி செய்யும் இடங்கள்), வாசகசாலை, பிரசங்கங்கள் விவாதங்களும் நடத்தும் சபைகள், பத்திரிகைகள், சங்கீதக் கழகம், புஸ்தகசாலை, பொது நன்மைக்கான காரிய ஸ்தாபனங்கள் எல்லாம் ஏற்படுத்திக்கொள்ளலாம். இது ஒரு பக்கம்.

மறுபக்கமே இதைக் காட்டிலும் முக்கியமானது. பிற்காலத்தில் தேசத்தின் உண்மைப் புதல்வர்களாக விளங்குவதற்கு வேண்டிய பயிற்சி. இது எண்ணம், செயல் இவ்விரு திசையிலும் தோன்றவேண்டும். மாணவர் கண்முன் மனித ஸமூகத்தை உருவாக்கும் ஓர் ஆதர்சம் நிற்கவேண்டும். அதைத் தம் வாழ்விலும் செயலிலும் உண்மையாக்கி அதற்கான திட்டங்களை வகுத்து முடிந்த வரை அதைக் கடைப்பிடித்தலே கடமையாகும். இந்த நற்பணிக்குப் பெரியவர்கள் பலவிதமான இடையூறுகள் செய்யக்கூடும். துரதிருஷ்டவசத்தால் இந்த மாதிரி ஒரு விரோதம் மூளுமாயின், மாணவர்கள் அஞ்சா நெஞ்சினராய்க் கருமமே கருத்தாகச் சித்தம் குலையாமல் வருங் காலத்தை உன்னி எதற்கும் துணிய வேண்டியதுதான்.

கண்ணுங் கருத்துமாக நாம் போற்றி வளர்க்கும் ஓர் ஆதர்சத்தைக் குறித்து என் சொந்த அபிப்பிராயங்களைக் கூறுவதன்முன் ஒன்று சொல்ல விரும்புகிறேன்: ஐரோப்பாவின் காலின்கீழ்ச் சீர்குலைந்திருக்கும் ஆசியாவின் நிலையானது, ஒவ்வோர் ஆசியவாசியின் உள்ளத்திலும் சொல்லொணுத் துயரையும் அவமானத்தையும் உண்டு பண்ணியிருக்கிறது. ஆனுல் ஆசியா வெகுகாலமாக இந்த நிலையில்தான் இருந்ததென்று சொல்வது பெருந் தவறு. சரித்திரமே சான்று சொல்லும்: பண்டையில் ஆசியா ஐரோப்பிய நாடுகளை வென்று விசாலமான ஸாம்ராஜ்யங்களை ஸ்தாபனம் செய்திருக்கிறது. அந்தக் காலத்தில் ஆசியாவின் பெயரைக் கேட்டாலே ஐரோப்பா

நடுநடுங்கும். ஆனால் இன்றோ நிலை மாறிவிட்டது. இன்று தன் அடிமைத் தளையைப்போக்க ஆசியச்சிங்கம் பிடரியை அசைக்கிறது. இதோ சீக்கிரத்திலே ஒருநாள், மழுங்கி இருந்த தன் சக்தியும் கௌரவமும் பன்மடங்கு ஒளியுடன் தோன்றி, மற்றச் சுதந்திர நாடுகளிடையே அது தனக்குரிய இடத்தில் அமர்ந்து விளங்குமென்பதில் ஐயமே இல்லை.

மேல்நாட்டு விஷமக்காரர்கள் சிற்சில சமயம், உலகின் இந்தப் பழைய கிழக்குப்பாகம் எப்பொழுதும் 'பிற்போக்கான' இடமென்று கிண்டி விடுகிறார்கள். ஏன், கொஞ்ச நாட்களுக்கு முன்பு துருக்கியைக் கூடத் தான், 'ஐரோப்பாவின் நோயாளி' என்று ஏளனமாகச் சொன்னார்கள். ஆனால் இந்த நிந்தைக்கு ஆசிய நாடுகளோ துருக்கியோ அசைந்து போகா. கீழ்நாடெங்கும் இன்று புத்துயிரின் அமோக வன்மை ததும்புகிறது. எங்கே பார்த்தாலும் மாறுதல்கள், முன்னேற்றம் - ஸமூகங்களைத் தலைகீழாக்கும் சீர்திருத்த வெறி. கிழக்கு, பிற்போக்காகி இருந்திருக்கலாம்; ஆனால் ஒருதரம் மாறுதல் ஏற்பட்டவுடன், மேல் நாட்டையும்விட இது பல படிகள் முன்னுக்கு வரக்கூடியது. இன்று ஆசியாவில் இந்த அதிசயந்தான் நிகழ்கிறது.

நடுநடுவே சில சந்தேகப் பிராணிகள் கேள்விகள் போடுகிறார்கள்: "இன்று ஆசியாவில், முக்கியமாக இந்தியாவில் தோன்றியுள்ள பரபரப்பு உண்மையான புத்துயிரின் துடிப்பா அல்லது ஏதோ தூண்டுதலினால் விளைந்து விரைவில் மறையும் சஞ்சலமா?' என்கின்றனர். ஆனால் எனக்கு வேறுவிதமாகத்தான் படுகிறது. எத்துறையிலும் புதுமை தோன்றுவது நவஜீவனத்தின் லக்ஷணமே.

தற்காலம் இந்தக் கிளர்ச்சி புதிய வழியைக் கோலி நவநவமான படைப்பில் நிறை விசையுடன் செல்லுவதைப் பார்த்தால் ஸத்யமாக நம் ஜாதி புதிய விழிப்புக் கொண்

டிருக்கிறதென்றே கொள்ளவேண்டும். உண்மையில் தேசமக்களின் எண்ணத்துள் பாய்ந்த பெரிய அலையின் அதிர்ச்சியே இது.

பாரததேசத்தில் இன்று கண்டிருக்கும் ஒரு பாவப் பெருக்கின் சுழலில் சிக்கி நாம் சென்றுகொண்டிருக் கிறோம். நம்மைச் சுற்றிலும் அனுகூலமானதும் பிரதிகூல மானதுமான பல நீரோட்டங்கள். இந்தப் பெருங்குழப் பத்தில் எது நல்லது, எது கெட்டது என்று பகுத்தறியப் பொதுமக்களுக்குத் தெரியவில்லை. ஆனால் இன்று மழுங் கிய நம் நாட்டின் சக்தி மீண்டும் திரும்பவேண்டுமானால் லக்ஷ்யத்தை விட்டுப் பிறழாமல் மக்களை நாம் நடத்திச் செல்லவேண்டும். 'நம் லக்ஷ்யமென்ன? அந்த லக்ஷ்யம் எந்த இடத்தில் நம்மைக் கொண்டுவிடும்?' இதைப்பற்றி நமக்கு ஒரு தீர்மானம் இருக்கவேண்டும்.

இருள் கவிந்த ஒரு யுகத்திலிருந்து இன்று பாரத ஸமுதாயம் புதிய உதயத்தை நோக்கிச்செல்கிறது. பினிஷி யாவும், பாபிலனும் மறைந்துபோனதுபோல் இந்தப் பாரத ஸமுதாயமும் அழிவுறுமோவென்ற கவலை ஒரு காலத்தில் மூண்டிருந்தது. ஆனால் அந்தக் காலக் கொடுமையிலிருந்து தப்பித்துக்கொண்டது பாரதம். புதிதாக நாம் இவ்வுலகில் வாழவிரும்பினால் முதலில் நம் எண்ணங்களில், பாவனை களில் பெரும் புரட்சியை உண்டாக்கவேண்டும். புதிய ரத்தத்தை நம் உடலில் கலக்கவேண்டும். சரித்திர உண்மையிலும், சான்றோர் வாக்கிலும் நமக்கு நம்பிக்கை இருந்தால் இதை ஒப்புக்கொள்ளாமல் இருக்கமுடியாது. இந்த உபாயத்தினால்தான் முதுமை படர்ந்த ஸமுதாயங் களை மீண்டும் பலமுள்ளதாகச் செய்யமுடியும். என் வார்த்தையில் நம்பிக்கை இராதுபோனால் பெரிய ஸமுதாயங்கள் தோன்றி மறைந்த கதையை நீங்களே கவனித்துப் பாருங்கள். இந்த முறையே சரியானதென்று கண்டுகொண்டால் தேச மக்களுக்கும் இதை எடுத்துக்

கூறுங்கள். உன்னதமானதும், வன்மை உடையதுமான ஒருஜாதியை ஸ்ருஷ்டிக்கவேண்டுமானுல் எவ்வழியைக் கடைப்பிடிப்பதென்பதை அவர்களுக்கு எடுத்துரையுங்கள்.

பாவனை உலகில் புரட்சியை மூட்டுவதாயிருந்தால் தெளிவாக நாம் ஓர் ஆதர்சத்தை நம் எதிரே நிறுத்திக் கொண்டுதான் வேலையைத் தொடங்கவேண்டும். மின் சக்திபோல் பாய்ந்து நம்மிடத்தில் அழுந்தியிருக்கும் வன்மையை வெளிப்படுத்தும் சுதந்திரமே அந்த ஆதர்சமாகும். சுதந்திரத்திற்குப் பலர் பல பொருள் கூறுகிருர்கள். சுதந்திரமென்ருல் ஸமூகம், மனிதன், ஆண், பெண், பணக்காரன், ஏழை எல்லோருக்கும் சுதந்திரமென்றுதான் அர்த்தம். அரசியல் உலகில் சுயஆட்சி பெறுவது மட்டுமன்று. சமமான பணப்பங்கீடு, வகுப்பு வேற்றுமையையும் ஸமூக ஊழல்களையும் தொலைப்பது, கக்ஷிகளின் குறுகிய மனப்பான்மையையும் முரட்டுத்தனத்தையும் ஒழிப்பது இவைகளைத்தான் குறிக்கும். ஆய்ந்து பாராதவர்களுக்கு இந்த ஆதர்சத்தில் நம்பிக்கை குறைவு. இது நடக்காது என்பார்கள். ஆனுல் இது ஒன்றே தேசத்தில் தற்காலம் மூண்டிருக்கும் தாகத்தைத் தணிக்கவல்லது.

ஸமுதாய வாழ்வு எத்துறையில் புது உருவுகொண்டாலும் அவை அனைத்தும் சுதந்திரத்தின் பல வடிவங்களே. சுதந்திரமென்ருல் சிலர், அதன் ஒரு பகுதியைத்தான் புரிந்துகொள்ளுகிருர்கள். சுதந்திரத்திற்குள்ள இந்தக் குறுகிய கருத்தை ஒழித்து விரிந்ததொரு பொருளைக் கொள்ள நமக்கு இத்தனை காலமாயிற்று. சுயநலத்தின் முகத்தில் விழிக்காமல், சுதந்திரத்தின் பொருட்டே சுதந்திரத்தை நாம் விரும்புவதாய் இருந்தால், தெற்றென நமக்கு இதன் உண்மை வெளிச்சமாகும். உண்மையான சுதந்திரமென்ருல் ஒரு தனி ஆள்வரைக்குமல்ல; எல்லா ஸமூகங்களுக்குந்தான் என அர்த்தமாகிறது;

எல்லாவித கட்டுகளிலிருந்தும் விடுதலை அடைவதே அது இந்த யுகத்தின் ஆதர்சமும் அதுவே. முழுவதும் விடுதலையான பாரத நாட்டின் கல்பனு ரூபம் என் உள்ளத்தைக் கவர்ந்திருக்கிறது. சுதந்திரம் பெறுவதற்கு ஒரே உபாயம் சுயேச்சையான எண்ணங்களுக்கும் அனுபவங்களுக்கும் நாம் இடம் அளிப்பதுதான். புரட்சியின் வெள்ளம் நம் அகத்துள் பெருகி ஓடட்டும். சுதந்திரத்தின் மது வெறி நம் நரம்புக்குள் பாயட்டும். சுதந்திரம் பெறும் ஆவல் நம்மிடையே கண் திறக்கும்பொழுது, வேலையில் ஈடுபடுவதற்கான ஒரு பரபரப்பு தானுகவே நம் மனத்துள் குடிகொள்ளும். கோழைகள் கூறும் அதைரிய மொழிகள் நம்மை ஒருபோதும் கலைக்கா. ஸத்யமும் தீவிரமும் நம்மைச் சரியான இலக்கிற்குக் கொண்டு செல்லும்.

நண்பர்களே! நம் எண்ணங்களிலும் உணர்விலும் நம் செயலின் பின்னுலும் நின்று இயக்கும் அந்த ஆதர்சத்தைப்பற்றி உங்களுக்கு எடுத்துரைக்க முயன்றேன். உங்களுக்கு இது பிடிக்குமோ, பிடிக்காதோ எனக்கு எப்படித் தெரியும்? ஆனுல் ஒன்று மாத்திரம் அறிவேன். வாழ்வின் ஒரே லக்ஷ்யம், எல்லாத் தளைகளிலிருந்தும் முக்தி பெறுவதே. சுதந்திரத்திற்காகத் தீவிர ஆவலே வாழ்க்கையின் மூல ஸ்வரம். தாயின் கர்ப்பத்திலிருந்து கீழே விழுந்த சிசுவின் முதல் அழுகைக் குரல், இது; கட்டிலிருந்து விடுபடும் வீரமுழக்கம். உங்கள் மனத்துள்ளும் தேசத்தவர் உள்ளத்திலும் இந்த ஆர்வத்தை எழுப்புங்கள். பாருங்கள்: சில நாட்களுக்கெல்லாம் பாரததேசம் முற்றும் சுதந்திரம் பெறுகிறது.

இந்தியாவுக்குச் சுதந்திரம் வருமென்பதைப்பற்றி எள்ளளவும் சந்தேகமே இல்லை. இரவுக்குப்பின் பகல் வருவதுபோல அது வந்தே தீரும். பாரத நாட்டைக் கட்டிப் போடக்கூடிய வன்மை இந்த உலகில் எவருக்கும் இல்லை.

வாருங்கள், இத்தகைய மாண்புறு பாரதத்தை நாம் உருவாக்குவோம். அதன் பொருட்டு நமக்குள்ள அனைத்தையும் ஈந்து தன்யர்கள் ஆவோம். சுதந்திர பாரதம் தன் விடுதலை வாணியை ஜகமெங்கும் திசைக்குத் திசை முழக்கம் செய்யட்டும்.

நான் சொல்லுகிறேன்: பாரத நாடு உலகத்திற்கு ஓர் அருள்வாக்கைத் தரவும் வழியைக் காட்டவுமே பல நூற்றாண்டுகளாக அழியாமல் பிழைத்து இருக்கிறது. உலகம் சீர்படுவதற்கும் பிற ஸமுதாயங்கள் பயனுறுவதற்கும் பாரததேசம் ஒரு புது வரனைக் கொடுக்கத் தயாராக நிற்கிறது. தற்போதைய ஈனமான அடிமை நிலையிலும் அது தர இருக்கும் தானமோ அல்ப சொல்பமன்று. தத்தமக்குரிய வழியில் செல்ல ஸ்வாதீனம் ஏற்பட்டால் அந்தத் தானம் எவ்வளவு உயர்வானதாகும், மதிப்பிடுதற்கரிதாகும்; இதை யோசித்துப் பாருங்கள்.

நாட்டிலுள்ள பல பிரமுகர்கள் சுதந்திரத்திற்கு நான் கொடுக்கும் வியாக்கியானத்தை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். அவர்களைத் திருப்தி செய்வது ஆகாத காரியம். இதற்காக நான் வருந்துகிறேன். ஆனால் ஸத்யம், நியாயம், சமத்துவம் இவற்றின்மேல் நிறுத்திய ஆதர்சத்தை என்றென்றும் நாம் விடமாட்டோம். பிறர் நம்முடன் கலந்து வேலை செய்ய வராதுபோனால் போகட்டுமே. நாமாகவே செல்வோம். ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம். இந்தச் சுதந்திர யாத்திரையில் லக்ஷக் கணக்கானவர்கள் நம்முடன் சேருவார்கள். அநீதம், பந்தங்கள், சமத்துவத்திற்கு விரோதமான கொள்கை இவற்றுடன் சளைக்காமல் போராடுவோம், இறுதிவரைக்கும்.

நாட்டில் சுதந்திரத்திற்காக விழையும் மக்கள் யாவரும் சேர்ந்த ஒரு சுதந்திரப்படை திரட்டும் நாள் வந்துவிட்டது.

இவர்கள் வெறும் சுதந்திரத்திற்கு மட்டும் படையில் சேரவில்லை. சுதந்திரத்தின் திருவாசகத்தைத் திக்கெட்டும் கொட்டவும் செய்வார்கள். உங்களிட மிருந்தே இத் தகையதொரு சைனியம் சிருஷ்டியாக வேண்டும். ஊடுருவும் பிரசாரமும், தேசமெங்கும் சுயேச்சைத் தொண்டர்களைக் கூட்டுவதும் நமது காரிய நிகழ்முறையில் முக்கியமான இடம் பெறவேண்டும். நம் பிரசாரகர்கள், உழவாளி, ஆலைத் தொழிலாளி இவர்களை நெருங்கி இந்தப் புது வாணியைப் பரப்பவேண்டும். அவர்களே இளைஞருக்கும் அவர்களுடைய சங்கத்திற்கும் ஆதரவளிப்பவர்கள். கடைசியாக, தேசத்துப் பெண்பாலார் அனைவரையும் இந்த ஸேவைக்கு உதவிபுரியத் தூண்டவேண்டும். காரணம், இன்று மாதரும் ஆடவரும் சரிநிகராகத் தோளுக்குத் தோள் செருமுனையில் நிற்பவர்கள்.

அன்பர்களே, உங்களில் எத்தனையோ பேர் இப்பொழுது இந்திய காங்கிரஸ் இயக்கத்தில் சேர முனைந்துள்ளீர். காங்கிரஸ் ஒன்றே இப்பொழுது நம் நாட்டில் எல்லா மக்களின் கோரிக்கைகளையும் ஏற்றுக்கொள்ளும் பொது ஸ்தாபனம். நம் ஜாதி, ஸமூகம் யாவும் இதை நத்திக்கொண்டுதான் இருக்கின்றன. ஆனால், இதுமேலும் வீரியம்பெறுவதற்குத் தொழிளாளர் இயக்கம், இளைஞர் இயக்கம், கிருஷிகர்கள் எழுச்சி, மாதர் இயக்கம், மாணவர் இயக்கம் எல்லாம் அவசியமே. என்வரைக்கும் அதுவே நல்லது. தொழிலாளிகள், உழவர், தாழ்த்தப்பட்டோர், இளைஞர், மாணவர், மாதர் இவர்களுக்குச் சுதந்திரப் பற்று ஊட்ட முடிந்தால் காங்கிரஸ் மகா ஸபைக்கு அமோக பலம் வந்து நமக்குச் சுதந்தரத்தைக் கொண்டு தரும். உண்மையில் காங்கிரஸில் சேர்ந்து உழைக்க வேண்டுமென்ற அவா உங்களுக்கு இருந்தால் எல்லாவிதமான இயக்கங்களையும் நீங்கள் தட்டி எழுப்பவேண்டும்.

பாருங்கள், நம் அண்மையிலேயே சீனவை: அதன் சரித்திரத்திலேயே ஒரு புது யுகம் தோன்றியுள்ளது. தம் தாய் நாட்டிற்காகச் சீன இளைஞர் என்ன அரும்பாடு படுகிறார்கள். பாரத தேசத்திற்காக நாம் கொஞ்சமாவது அத்தகைய பாடு எடுத்துக் கொண்டிருக்கிறோமா? இன்றைய சீனவின் புது எழுச்சி யாரால் ஏற்பட்டது? மாணவர்களால்தான். கிராமம் கிராமமாகச் சென்று நகரத்தில் ஒவ்வொரு மூலையிலும் புகுந்து மக்களிடையே சுதந்திர வாஞ்சையை மூட்டினர். மறுபக்கம் தம் நாட்டின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் சங்கங்களை நிறுவினர். இந்தியாவிலும் நாம் இவ்வாறே செய்வது நலம். சுதந்திரத்தின் பாதையில் எவ்வளவோ முள், எவ்வளவோ விக்கினங்கள் இருக்கின்றன. அது சுலபமான வழி அல்ல, விபத்துக்கள் பல அதில் உண்டு. புகழும் அமர வாழ்வும் உண்டு. பழமையானது அடிக்கு அடி நமக்குப் பெருந் தடங்கல்களை விளைவிக்கும். அதை நாம் உடைத்தெறிந்து வைராகிகளாய்ச் சுதந்திரக் கோயிலை நோக்கிச் செல்வோம். வாருங்கள்; நாம் ஒன்றுகூடிச் சுதந்திரம் பெறப் பாடுபடுவோம். அந்தப் பெருமுயற்சியில் தம் ஆருயிரையும் ஈந்து நமனையும் வென்ற அந்த ஜதீந்த்ரநாத் தாஸின் தேசத்தில் பிறந்தவர்கள் நாம் என்று கொள்வோம். வந்தே மாதரம்.*



*1929-ஆம் ௵ அக்டோபர் 19-ஆம் உ லாஹோரில் நடந்த பஞ்சாப் மாணவர் சங்கத்தின் தலைமை உரை.

"முதுமை படரும் இந்நாட்டில் இளமையைக் கொண்டு வரவேண்டுமானால், நாம் எல்லோரும் இந்தியா மக்களாக வாழ வேண்டுமானால், இதுவரை நம்மிடையே வேர் ஊன்றியிருக்கும் சில எண்ணங்களை அடியோடு மாற்றி அமைப்பதுதான் அவசியம்.

மத்திய மாகாணத்தையும், பேராரையும் (விதர்ப்பம்) சேர்ந்த மாணவர்கள் நடத்தும் இந்த ஸம்மேளனத்தில் நான் கலந்துகொள்ள முடிந்ததைக் குறித்து அளவில்லா மகிழ்ச்சி அடைகிறேன். மகிழ்வெய்துவதோடு மட்டும் அல்ல; இளமை பொங்கும் இத்தகைய மாணவர்க் குழுவில் நானும் ஒருவனாக இருப்பது என் பாக்கியமென்றே கூறுவேன். முகஸ்துதிக்காக இதை நான் சொல்லவில்லை. உண்மையில் இது என் உள்ளத்திலிருந்து எழுந்த வார்த்தையே! தூக்கிவைத்துப் பேசவில்லை. மாணவர்களுடன் நான் நெருங்கிப் பழகும்போது என் உணர்ச்சி, சிந்தனையின் ஓட்டம் யாவும் தாமாகவே கிளம்புகின்றன. என்னுடைய தயக்கமெல்லாம் எங்கோ மறைந்துவிடுகிறது. நான் உள்ளத்துள் உணர்ந்த அனுபவங்களைக் கரவு ஒளிப்பாட்டமின்றிச் சொல்லத் துணிவு உண்டாகிறது.

நான் ஸர்வ கலாசாலையை விட்டுக் கிட்டத்தட்டப் பத்து வருஷங்களாகின்றன. இன்னமும் நான் ஒரு மாணவனென்ற நினைவே இருந்துவருகிறது. ஆனால் என்னை உருவாக்கிய ஒரு பல்கலை மன்றம் உங்களுடைய வித்யா பீடத்தைக் காட்டிலும் சற்றுப் பெரிது; விரிந்த நோக்குடையது. அதை 'வாழ்க்கையின் கல்லூரி' என்று சொன்னால் பொருந்தும். இப்பொழுது நான் வாழ்க்கைப் பெரும் போரில் இறங்கி இருக்கிறேன்; ஒவ்வொரு நாளும் புதுப் புது உண்மையும், விதவிதமான அனுபவமும் கண்டறி

வதே என் வேலையாகக் கொண்டுள்ளேன. இருந்தாலும் மாணவர் வாழ்க்கையின் ஒரு லக்ஷயம், அதன் விசித்திர மான கல்பனே, பாவங்கள் யாவும் என்னை விட்டுத் துளி யேனும் அகலவில்லை. ஆகவே, இன்று உங்கள் மனத்துள் குமுறும் குறைகள், கொதிப்பு, வேதனை, உத்ஸாஹம், ஆசை ஒவ்வொன்றையும் நான் அறிவேன். அதே துடிப்பு என் உணர்விலும். ஆனல் எனக்கொரு ஸந்தேகம்: மாண வர்கள் இயக்கும் ஒரு கூட்டத்தில் தலைமை வகிக்க எனக்கு யோக்கியதை உண்டா, இல்லையா என்பதுதான். காரணம், மாணவர்களென்ருல் "நல்ல பிள்ளைகள்" என்ற பொருளைக்கொண்டு யோசிக்குங்கால் என் மாணவப்பருவம் மாசுமறுவற்றதெனக் கூறவேமுடியாது. எனக்கு ஞாபகம் இருக்கிறது, அன்றொரு நாள் நடந்த விஷயம். பிரின்ஸிபால் துரையவர்கள் என்னைக் கூப் பிட்டு நான் செய்த ஏதோ ஒரு தவறுக்காகக் காலேஜிலிருந்து சில நாட்கள் வரை தள்ளி வைத்திருந் தார். அன்று அவர் கூறிய அந்த உக்கிரமான மொழி இன்னும் என் காதில் முழங்குகிறது. "காலேஜில் நீதான் எல்லாரையும் விட அடங்காப்பிடாரி" என்ருர். என் வாழ்வில் அதுவே என்றும் மறக்கமுடியாத ஒரு தினமா கும். சொல்லப்புகின், பல முகமாக அந்நாள் தொடங்கியே முற்றும் புதிதும், நிறைவானதுவான ஓர் இலக்கை நோக்கி விரைந்தது என் வாழ்க்கை; அந்நன்னுளிலேயே முதன்முதலாக எனக்கு ஒன்று அனுபவ ஸாத்யமாயிற்று- பெரியதொரு முயற்சியில் இறங்கி வேலை செய்பவனுக்கு இன்பமெல்லாம் இன்னல்களைத் தாங்குவதிலேதான். இந்த ஆனந்தத்திற்கு எதிரே வாழ்வின் எந்தவிதமான குதூஹலமோ களிப்போ நில்லா. இதன்முன் அவை மிகவும் துச்சம். ஆரம்பத்தில் ஆதர்சங்களின் உதவி யினுல் அறம் எது, தேசப்பற்று எது என்பதைப் புரிந்து கொண்டிருந்தேன்; ஆனல் மறக்கமுடியாத அந்தத்

தினமே என் கொள்கைக்குக் கடுமையான சோதனை - அக்கினி பரீக்ஷை - நடந்தது. இந்தக் கடினமான பரீக்ஷையில் தேறி நிமிர்ந்து நின்று பார்த்தேன். என் பிற்கால வாழ்க்கையின் போக்கும் தொழில் முறையும் ஓர் அளவிற்கு உருவெடுத்து என் கண்முன் நின்றன. அன்புடையீர்! ஒரு வேளை நீங்கள் ஏதடா 'இவன் ஒரு விந்தையான ஆளாயிருக்கிறனே. நமக்கு ஏதாவது விஷயங்களை விளக்குவானென்று எதிர்பார்த்தோம். ஆனால் தன்னைப்பற்றியே சொல் அளக்கிறனே' என்றெல்லாம் நினைக்கலாம். ஆனால் நான் ஒன்று கேட்கிறேன்: இங்கே நான் வந்தது எதற்காக? நான் வந்த காரியம், உத்தேசம் என்னவென்பதை நீங்கள் முதலில் தெரிந்து கொண்டீர்களா? உங்களுக்கு நீதிகளைப் போதிக்கவோ தேசாபிமானத்தைப்பற்றி நீண்ட சொற்பொழிவாற்றுவதற்கோ நான் இங்கு வரவில்லை. என் அனுபவங்களை ஒட்டிய சில ஆழ்ந்த கருத்துக்களை உங்கள் முன்னிலையில் வைக்கவே நான் வந்தேன். பல எதிர்ப்புக்கிடையே நீந்தி, அருமையாக நான் பெற்ற அனுபவங்களில் உண்மை எப்படி இல்லாமல் போகும்? அவை உங்கள் உள்ளத்தில் புகுந்து வேலை செய்யும். பாரத தேசமெங்கும் இன்று ஒரு பெரும் பரபரப்பு மூண்டிருக்கிறது. வெவ்வேறான பாவங்களும் லக்ஷ்யங்களும் ஒன்றோடொன்று மோதுகின்றன. கணக்கற்ற இயக்கங்களுக்கு அடிகோலுகிறார்கள் மக்கள். இவர்களுள் சிலர், ஸமூக சீர்திருத்தமே நோக்கமாகக் கொண்டவர். சிலர், ஸமூக வாழ்வை அடியோடு பெயர்த்தெறிய விரும்பும் நிர்மூல வாதிகள். இப்போதுள்ள நாட்டின் சீர்கேடான நிலைமையைப் போக்கிப் புத்துயிர் தர வேலை செய்பவர்கள் மற்றும் சிலர். இந்தப் பெரிய லக்ஷ்யக் குழப்பங்களுக்கிடையே நூதன பாரதம் மெல்லப் பிறக்கிறது. இத்தகைய பிரஸவ வேதனையில் பிற்காலத்தைக் குறியாகக்கொண்டு மக்கள் உயர்வார்களா தாழ்

வார்களா என்பதை முடிவாகக் கூறமுடியாது. இந்தப் பெரும் பணிக்கு உகந்தவர் யார்? இளமை மிக்கவரும் உன்னத லக்ஷ்யத்தைக்கொண்டு முன்னேறுபவரும் தீவிர மான தியாகிகளும் தேசவாசிகளின் சிந்தனை வெள்ளத் தோடு தம் பாவப்பெருக்கையும் இணைப்பதில் ஸமர்த் தரும் உண்மையான கல்வியும் அழிவற்ற உபதேசங் களும் பெற்ற நேர்மை பிறழாதவர்களுமேதான் இதற்குத் தகுதி உடையவர்கள். இந்த இருண்ட யுகத்தில் இவர் கள் அன்றோ விளக்கை ஏந்திச் செல்பவர்கள், வழிகாட்டி கள்!

இச்சமயம் பாரத நாட்டில் தோன்றியுள்ள கிளர்ச்சி களை ஒவ்வொன்ருக எடுத்துக்கொண்டு ஆய்ந்து பார்ப்ப தற்கும், ஒவ்வொன்றைக் குறித்தும் நம் அபிப்பிராயங் களை வெளிப்படுத்துவதற்கும் போதுமான அவகாசம் தேவை. இன்று நடக்கும் என் ஒரு பேச்சில் அதை விவ ரித்துவிடமுடியாது. நான் இன்று அந்த விஷயத்தை எடுத்துக் கொள்ளப் போவதில்லை. ஆனல் ஒன்றைமட்டும் நான் அழுத்திக் கூற விரும்புகிறேன். முதுமை படர்ந்த நம் நாட்டிடை. இளமையின் தென்பை மூட்டவேண்டு மானல், பாரதமெங்கும் ஒரே ஜாதியினரை உண்டாக்க வேண்டுமானல், இதுவரை நம்முள் உறைந்து போயிருக் கும் நல்லதும் தீயதுமான பல கொள்கைகளை அடியோடு புரட்டிப் புதிதாக அமைத்துக் கொள்ளவேண்டும். தத் துவ ரீதியான மொழியில் இதைச் சொல்லுவதாயிருந் தால், இத்தனை நாள் நாம் ஸமூகம், நீதி இவற்றின் அளவு கோலைக்கொண்டு மதிப்பிட்ட விஷயங்களைப் புதுமுறை யில், புதிய நோக்கிலிருந்து ஆராய்ந்து அவற்றிற்குள்ள மதிப்பைத் தரவேண்டும்.

இந்தக் காலத்தில் பெரும்பகுதியான கிளர்ச்சிகள் வெகுதூரம் பரவுவன அல்ல. இவை ஒவ்வொன்றும் ஆழ மற்றவை. தேசமக்கள் அனைவர் உள்ளத்திலும் அலையைக்

கிளப்பும் சக்தி இவற்றில் இல்லை. ஸமூகம், ஜாதிபோன்ற ஸமஸ்யைகளை மேல்வாரியாகத் தொட்டுவிட்டு அடங்கி விடுகின்றன. இத்தகைய கிளர்ச்சிகளால் பயன் எதுவுமே இல்லை என்று நான் கூறவில்லை, இவற்றின் மூலம் கிடைக்கும் பலன் சொற்பமே. மக்கள் மொத்தப்பேரும் விழித்தெழவேண்டும் பக்ஷத்தில், இவைபோன்ற ஆழம் இராத இயக்கங்களின் உதவியால் எந்தவிதமான முயற்சியும் கைகூடாது. நமக்கு வேண்டியது - மக்களின் எழுச்சி; வெளியில்மட்டும் அன்று, உள்ளத்திலும் அது மூள வேண்டும். தேசமே இந்த எழுச்சியில் துடிக்கவேண்டும். அற்பகாலத்திற்குள் இது எவ்வாறு நடக்கும்? இதுவே நம்மை முட்டும் ஒரு பெரிய கேள்வி. இதற்கு விடை தேடுவதே நம் வேலை.

உயிர் இருந்தும், உரிமை இன்றி நாம் வாழும் இந்த நாடு மிகப் பழமையானது, நம்முடைய ஸமுதாயமும் பண்டைப் பெருமை உடையது. இருந்தாலும் இதனுள் அடங்கி இருக்கும் சக்தியோ வேகமோ அடியோடு அழிந்துவிடவில்லை. வீரர்களாக நாம் எத்தனையோ அதிர்ச்சிகளையும் அடக்குமுறைகளையும் பல நூற்றாண்டுகளாகத் தாங்கி நின்றிருக்கிறோம். நடு நடுவே பெரிய அலைகள் நம்மை ஆழ்த்திய போதிலும் நமக்குள்ள மனிதத் தன்மை முடிவில் தலைதூக்கியே நின்றது. நாம் இன்றும் இந்திய மக்கள்தாம்; நிர்மூலமாகிவிடவில்லை. சளைத்துப் போயிருக்கலாம்; உறங்கி விட்டிருக்கலாம்; இதில் அதிசயமென்ன? அவமானப்படுவதற்கும் ஒன்றுமில்லை. வாழ்விற்கு உரம் தரச் சிற்சில சமயம் நித்திரையும் ஓய்வுந்தான் வேண்டியிருக்கின்றன. இன்று நாம் களைத்து, பின்னடைந்து பள்ளத்தில் விழுந்திருப்பினும் இந்திய மக்களென்ற பெருமை உடைய நாம் மரித்துவிடவில்லையே. சிந்தனையிலும் தொழிலிலும் சுய ஆற்றலும் ஆக்கமுமே உயிர் இருப்பதற்கு அடையாளம். இவற்றைக் கருதும்

பொழுது ஒரு ஜாதியார் என்ற முறையிலும், தனிப் பட்ட மனிதர் என்ற முறையிலும், பெருமை அடை வதற்கு நமக்கு அதிகாரம் உண்டு. நாம் மட்டிலும் இன் றளவும் நம் உயிரைக் காத்திராது போனேமாயின் உலக மக்களில் ஒருவராக விழித்தெழுந்து முன்னுக்குவரும் நம்பிக்கையே அவிந்துபோயிருக்கும். இன்னும் ஜீவித்துக் கொண்டிருக்கிறோம். மீண்டும் நம் ஜாதியை - நாட்டை - உயர்ந்த பதவிக்குக் கொண்டுவரும் ஸாதனங்கள் நம் மிடை அமோகமாய் இருக்கின்றன. அதனாலேயே வருங் காலத்தைக் குறித்து நாம் இன்பக் கனவுகள் காண முடிகிறது.

உள்ளத்திலிருந்து வரும் விழிப்பே - எழுச்சியே - சிறப்புடையது. அது ஒன்றுதான் நம் வாழ்வினை வேர் வரைக் கிளறி மாற்றி அமைக்கக்கூடியது. இங்கே கொஞ்சம், அங்கே கொஞ்சம், அரைகுறையாக வேலை செய்தால் மாத்திரம் போதாது. வெளிப் பூச்சு நாம் முனைந்திருக்கும் பணிக்கும் உதவாது. அடியோடு மாற வேண்டும். முற்றும் புதியவாழ்வை மேற்கொள்ள வேண்டியதே இந்தக் காலத்திற்கு அவசியம். வேண்டு மானால் 'நிறைவான புரட்சி' என்று இதைக் குறிப்பிட லாம்.

'புரட்சி' என்றதும் நீங்கள் திடுக்குறவேண்டாம். புரட்சியை உண்டாக்கும் முறையில் நமக்குள் எவ் வளவோ அபிப்பிராய பேதங்கள் ஏற்படலாம். ஆனல் புரட்சி மனப்பான்மையில் நம்பிக்கை இல்லாத ஓர் ஆத்மாவை இதுவரை நான் கண்டதில்லை. மொத்தத்தில் பரிணமம் (எவல்யூஷன்), புரட்சி (ரெவல்யூஷன்) இந்த இரண்டிற்கும் அப்படி அடிப்படையான வேற்றுமை இருப்பதாகத் தெரியவில்லை. எதிர்பாராதவிதம் சிறிய கால அளவிற்குள் ஸாத்யமாகும் பரிணமமே புரட்சி; படிப்படியாக நீடித்த காலம் நடக்கும் புரட்சிதான்

பரிணாமம். இந்த இரண்டு முறைகளில் அடங்கி இருக்கும் உட்பொருளாவது மாறுதல். இவ்வுலகில் இரண்டிற்கும் இடம் உண்டு; ஒன்றையொன்று விட்டு அகன்று நிற்க முடியாது. ஒன்று மற்றொன்றினுள் அடக்கம்.

நன்மை தீமை என்பவற்றைக் குறித்து நாம் கொண்டுள்ள எண்ணங்களை அடியோடு புரட்டி அமைத்துக் கொள்ளவேண்டுமென்று சொன்னேனா? இன்னும் ஒன்று கூறுவேன்: இன்று தேய்ந்த பழம் பாதையிலேயே செல்லும் நம் வாழ்க்கையைச் சீர்படுத்திக் கொள்வதும் அவசியம். உலகத்தார் முன் தலைதூக்கி நிற்க நாம் ஆசைப்பட்டால், இது ஒன்றுதான் மார்க்கம். புது வாழ்வில்தான் பயனைக் காணமுடியும். அதற்குத்தான் மதிப்புண்டு; பொருள் உண்டு. விரிந்த நோக்கமும் உயர்ந்த லக்ஷ்யங்களும் நிரம்பியதே அந்தப் புது வாழ்வு. முன்னேறவோ, உலக மகா சபையில் இடம்பெறவோ ஆவல் இராத மக்கள் உயிர் வைத்திருந்தும் என்ன பயன்? ஏன், அவர்கள் உயிர் வைத்திருக்க லாயக்கற்றவர்கள்! தந்நலம் கருதி, தனி அரசாக ஒரு ஜாதியினர் முன்னுக்கு வருவதைப்பற்றி நான் இங்கே குறிப்பிடவில்லை. மானிட ஸமுதாயத்தில் தாராளமும் பரந்ததுமான ஒருகொள்கையை நிறுவவே ஒவ்வொரு நாட்டினரும் முன்னேற வேண்டுவது நியாயம். உலக மக்கள் துயர் இன்றி இன்பவாழ்வு நடத்துவதற்கான நல் முயற்சியில் ஒவ்வொரு ஜாதியினரும் ஈடுபடுவதே உசிதம்.

ஒரு நாடு உன்னத நிலைக்கு வருவதற்கான ஸாதனங்கள் யாவும் பாரதத்திலும் உள்ளன. பொருளாதாரத்திலும் சரி, ஆத்ம விசாரணையிலும் சரி உபகரணங்களுக்கு என்ன குறை? இந்தியாவின் நடைப்பெருமை எத்தனை காலமானதென்று இன்னும் எவரும் ஒரு முடிவிற்கு வரவில்லை. அது இன்னும் சாகாமல் இருக்கிறது; இன்றும் பாரத நாட்டின் ஜீவநாடி ஓடிக்கொண்டுதான் இருக்

கிறது. அது உயிருடன் இருப்பது எதற்காக? திரும்பவும் அது பழைய கௌரவபீடத்தில் அமர்வதற்குத்தான். அழியாததும் மகோன்னதமானதுமான ஒரு தானத்தை உலகிற்கு வழங்கும் நிமித்தமே இந்த நாள்வரை ஜீவ வேகத்துடன் நிலவுகிறது.

பாரதத்தின் இலக்கு என்ன? அது ஆற்ற இருக்கும் பணிதான் என்ன? முதலில் தான் பிழைத்திருக்கவேண்டும்; அப்புறம் உலக ஸமுதாயத்தின் களஞ்சியத்திற்கு ஏதாவது அளிக்கவேண்டும். ஆயிரத்தெட்டு அசௌகரியங்களுக்கிடையே தவித்துக் கொண்டிருப்பினும் பாரத நாடு இன்று உலகிற்கு வழங்கிய தானம் அல்பசொல்பமா என்று கல்பனை செய்து பாருங்கள். பாரத நாடுமட்டும் தன் வழியே, தடங்கல் எதுவுமின்றி ஸ்வாதீனமாக மலர்ச்சி அடைந்து இருந்தால், மானிட வர்க்கத்திற்கு அது புகட்டும் ஞானமும், உலக பாண்டாரத்திற்கு அது செய்யும் கொடை மடமும் எத்தனை மடங்கு இருக்குமோ!

என் திடமான துணிபு இதுவே; சலிப்பில்லாத உழைப்பின் மூலமே பாரதமக்கள் செயற்கரிதான பெரிய ஸாதனைகளில் வெற்றிபெறுவர். ஜகத்திலுள்ள ஒவ்வொரு நாட்டினரையும் நல்ல வழிக்குத் திருப்பமுடியும். இன்னும் எனக்கு நம்பிக்கை உண்டு. இந்த இந்திய ஸமுதாயம் உறக்கம் நீங்கி விழித்தெழுமேயானால் இந்த யுகத்தில் எத்துறையிலும் தலை சிறந்துவிளங்கும் நாட்டினர், ஸமூகத்தினர் இவர்களைக் காட்டிலும் அதிசயங்கள் நிகழ்த்துமே. நமக்கு இச்சமயம் வேண்டியதெல்லாம் இந்த உறக்கத்திலிருந்து மீள்வதற்கான ஒரு மாயக்கோலே. அதைச் சுழற்றிய உடன் நம் ஸமுதாயமே எழுந்து அணிவகுத்து நிற்கும். பிரெஞ்சு தத்துவஞானியான பெர்க்ஸன் 'இலான் வைடல்' என உணர்ச்சி ஊட்டும் சக்தியைப் புகழ்கிறார். அந்தச் சக்தி ஒன்றே தொழில்வழியே திருப்பி முன்னேற்

றத்தின் மலை உச்சிக்குக்கொண்டு செல்லவல்லது. நம்முடைய வாழ்வில் உணர்வை ஊட்டும் அந்தச் சக்திப்பொறி எது? சுதந்திரத்திற்காகவும் ஆத்மாவின் மலர்ச்சிக்காகவும் எழும் ஓர் ஆர்வமே இந்த அபூர்வமான சக்தியாகும். ஒரு முனையில் இந்த ஆத்ம மலர்ச்சிக்கான முயற்சி, மற்றொரு முனையில் எந்தக் கட்டுத் திட்டங்களையும் தகர்த்தெறியும் புரட்சி! நீங்கள் விடுதலை பெறவேண்டின் உங்களைக் கவிந்துள்ள கட்டுகளைக் களையப் புரட்சி செய்ய வேண்டும். இந்தப் போராட்டத்தில் வெற்றி கிடைத்தால் உங்களுக்குச் சுதந்திரம் திண்ணம்.

ஆத்மாவையோ, சுயமதிப்பையோ அறிவையோ ஒரே அடியாய்த் தொலைத்துக்கொண்டவர்களைப்பற்றி நான் சிந்திக்கவில்லை. இவர்கள் அன்றி எஞ்சி நிற்கும் மற்றவர்க்கு அடிமை வாழ்வும் அவமானமும் கொஞ்சமாவது உறுத்தாமல் போகா. இந்த வேதனையும் அனுபவமும் தீவிரமாகும்பொழுது அடிமைத்தளை பொறுக்கமுடியாமல் போய் விடுகிறது. மனிதன் அந்த நிலையில்தான் இந்த விலங்கை உடைத்தெறிய வெய்துயிர்க்கிறான். இந்த ஏக்கம் வளர வளர ஏதாவது ஒரு வழியில் உண்மையான சுதந்திரத்தின் இன்சுவையை நுகர்கிறான். இந்தவிதமாக ஸ்வாதீனம் பெற்ற மக்களின் போராட்டங்களையும் அவர்களது வீர சரிதையையும் கேட்டும் மனக்கண்ணால் கண்டும் பிற மனிதருக்கும் திடம் பிறக்கிறது. தேசத்தின் விடுதலையைக் கருதுவோர் கடுமையாகத் தவம் இருக்கவேண்டும். அந்தத் தவம் யாது? நம்மிடையே உள்ள லஜ்ஜைக்குரிய குற்றங் குறைகள், வகுப்பு வர்ண வேற்றுமை, மத பேதங்கள் இவை செய்யும் விஷமங்களை நாம் உணர உணரச் சுதந்திரத்தின்பொருட்டு ஆவலும் தீவிரமும் அதிகரிக்கும். நம் அன்னை பாரதபூமியின் கைத்தளைகளை நீக்கவேண்டுமானால் கடுமையான தவமே நாம் மேற்கொள்ளவேண்டும், உலக சரித்திரத்தைப் படித்தும்,

இன்று நாம் அடைந்திருக்கும் இழிவான நிலையை உன்னியும், வாழ்க்கையில் அழியாத லக்ஷ்யங்களை கடைப்பிடித்தும், சுதந்திர நாட்டு நடப்புடன் நம் நாட்டின் நிலையை ஒப்பு நோக்கியும் வேலை செய்தால் கட்டாயம் நாம் விடுதலை பெறுவதற்கான உணர்வு எழும்.

'பாப்டிஸம்' 'இனிஷியேஷன்' (தீக்ஷை) இவைகளுக்குச் சரியானபொருள் ஒன்றே என்பது என் கருத்து. சுதந்திரத்தின் வேள்விக் களத்தில் நம் வாழ்வை அர்ப்பணம் செய்வதுதான் அது; பூர்ணமான ஆத்ம தியாகம் ஒரே நாளில் ஆகக்கூடிய காரியமல்ல. சுதந்திரத்திற்காக நம் உள்ளம் நெக்குருக நெக்குருகத்தான் அதிலுள்ள ஆனந்தம் எத்தகையதென்று ஒருவாறு புலப்படும். இது சொல்லற்கரிய ஓர் அனுபூதி. அப்பொழுதுதான் வெளிச்சமாகும், வாழ்வின் உண்மைப்போருள், அதன் பிரயோஜனம் யாவும். அதனுடனேயே புரட்சிக்கு அடிகோலவேண்டும். நம் எண்ணங்கள், நம் அனுபவங்கள், ஆசை, அவா, எதுவும் அன்றுதான் புத்துருவம் கொள்ளும். அச்சமயம் ஒன்றே நம் வாழ்வில் உயர்வுடையதாகத் தோன்றும். சுதந்திரத்தின் உபாஸனையே நம் மனப்போக்கு முழுவதையும் மாற்றிவிடவேண்டும். ஆதர்சத்தைப் பின்பற்றியே அது செல்லவேண்டும், சற்றும் நழுவாமல். கிரமமாக ஏற்படும் இந்த மாறுதலினுல் விளையும் அனுபவங்களை எங்ஙனம் இயம்புவது? இந்த மாறுதல் நிறைவானதுமே நாம் மறு பிறப்பு எடுக்கிறோம். அன்றுதான் நாம் அனைவரும் உண்மையான 'த்விஜ' - இரு பிறப்பாளராவோம். அப்புறம் நம் சிந்தனை யாவும் சுதந்திரத்தைப்பற்றியதாகவே இருக்கும். விடுதலையின் ஸாரத்தை மாந்துவோம். சுதந்திரத்தின் திவ்ய கதைகளையே கனவில் காண்போம். நம் உழைப்பிலும் அலுவலிலும் அந்த இனிய மணமே பரவி நிற்கும். சுதந்திரத்தில் வெறி கொள்ளவேண்டும்.

சுதந்திரமே நமக்கு எல்லாம் என்ற நினைவே நிலைத்திருக்க வேண்டும்.

உள்ளத்தில் இந்தச் சுதந்திரப்பற்று சுடர்விடவேண்டுமானல் அதை நடைமுறையில் காட்ட உபாயங்களைத் தேடுவதே முறையாகும், இதற்காக நம் உடல்வன்மை மனேசக்தி, ஆத்மபலம் அறத்திட்பம் எதையும் பிரயோகம் செய்யவேண்டும். நாம் இதுவரை கற்றதைக்கூட மறக்கவேண்டிய நிலை ஏற்படும். கல்லாத பல புது விஷயங்களை முதன் முதலாகப் பயிலவும் சந்தர்ப்பம் வரும். விடுதலை பெறும் இந்தப் பொறுப்புள்ள கடமையை ஏற்றுக்கொள்வதற்கு நம் உடலையும் உள்ளத்தையும் தூய்மை ஆக்கிக்கொள்ளவேண்டும், நம் வாழ்வின் வெளிவேஷத்தை விலக்கவேண்டி வரும். களிப்பாட்டம், ஆடம்பரம் இவற்றை வெறுக்கவேண்டும். புதுவாழ்வின் பயணத்தைத் தொடங்குதற்குத் திட்டங்கள் வகுக்கவேண்டும். இந்த முறையில் வாழ்வைப் பரிபூர்ணமாக்கி மாசறக் கழுவிச் சுதந்திரம் அடைவதற்கு நம்மைத் தகுதியுள்ளவர்களாகச் செய்துகொள்வோம்.

ஆராயுங்கால் மனிதன் ஒரு ஸமூகப்பிராணி. ஸமூகத்திலிருந்து பெயர்த்துவைத்தால் அவனுடைய ஆத்மா மலர்ச்சியே அடையாது. வாழ்வின் ஒவ்வோர் அவயவமும் வளர்வதற்கும் திரள்வதற்கும் புஷ்டியாவதற்கும் ஒவ்வொரு மனிதனும் பெரும்பாலும் ஸமுதாயத்தைத்தான் எதிர்நோக்கவேண்டும். அதுபோலவே ஸமூகமும் தனிப்பட்ட ஒருவனையோ ஒரு சாராரையோ நீக்கிவிட்டு நீடித்திருக்க முடியாது. இன்னுமொன்று கவனமாக மனத்தில் கொள்வது அவசியம். ஒரு ஸமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு வழி திறக்காதுபோனல் ஒரு மனிதன் ஓங்கி எவ்வளவு முயன்றுலும் அவன் செயல்கள் வீண்போகும். யோகி, ஸந்யாஸி இவர்கள் காட்டும் லக்ஷ்யங்கள் நம் ஸமுதாயம் கடைப்பிடிப்பதற்குத் தகுதியற்றவை. ஸமூகத்

தோடு ஒட்டிவாழாதாருடைய ஆதர்சங்களுக்குச் சிறப்போ மதிப்போ இருப்பதாக நான் நினைக்கவில்லை. சுதந்திரத்தை நம் வாழ்வின் மூல மந்திரமாகக் கொண்டோமானால், நம் செயல், ஆற்றல் எதிலும் அதையே தூண்டிடும் சக்தியாகக் கருதுவோமானால் ஸமூகத்தின் சீர்திருத்தத் திட்டங்களைக்கூடச் சுதந்திரத்தின் அஸ்திவாரத்தின்மீது நிறுவுவதே அவசியம். அந்த நோக்கிலிருந்து பார்த்தால் சுதந்திரத்தின் நீதிமுறை வேறொன்றுமில்லை; சமூகப் புரட்சியே.

எல்லா ஸமுதாயத்திற்கும் சுயேச்சை என்றால் பெண், ஆண் இவர்கள் இருவருக்கும் சுதந்திரம் என்றுதான் அர்த்தம். இந்தச் சுதந்திரப் பங்கீட்டில் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வித்தியாசம் இருக்கக்கூடாது. பணக்காரன், ஏழை; இளைஞன், கிழவன் - எல்லாக் கக்ஷியினரும், பெரும்பான்மையோர் சிறுபான்மையோர் வகுப்பு அனைத்தும், ஒவ்வோர் ஆளும் ஸ்வாதீனத்தை அடையவேண்டும்.

ஆராய்ந்து பார்த்தால் ஸ்வாதீனமே - ஸமத்துவமே - ஸகோதரத்துவமென்று தெற்றெனப் புரியும்.

ஸமூகத்தைத் தளைகளிலிருந்து மீட்கவேண்டுமானால் ஒவ்வொரு ஸமூக நிர்வாகத்திலும், சட்ட நிர்மாணத்திலும் ஆண்களுக்குச் சரிசமமாகப் பெண்பாலாருக்கும் உரிமைவழங்கவேண்டும். ஒரு ஸமுதாயம் அதன் கட்டு திட்டங்களினால், பிறப்பிலோ வகுப்பிலோ இழிவானவரென்று ஒருவனையோ அல்லது ஒரு சாராரையோ சிறுமைப் படுத்துவதாயிருந்தால் சற்றும் கூசாமல் நெஞ்சு இளக்கமின்றி அந்த இடையூறுகளை நிர்மூலமாக்க வேண்டும். ஒவ்வொருவரும் கல்வியிலும், மனிதத் தன்மையிலும் மேலோங்குவதற்கு வாய்ப்பு அளித்தாகவேண்டும். இளைஞனை உடலிலோ, அறிவிலோ சிறியனென்று அசட்டை செய்யக் கூடாது. ஸமூகத்தைச் சீர்படுத்தவும் நாடாளவும் இளைஞருக்கும் பங்கு தரவேண்டும். ஸமூகம்,

அரசியல், பொருளாதாரம், இந்த ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொருவருக்கும் சமான அதிகாரமே தேவை. ஏற்றத் தாழ்வு இருந்தால் அவலமாகும். நாம் நிருமிக்கும் புதிய சமுதாயத்தில் சகலருக்கும் சம உரிமை, சமானமான சந்தர்ப்பம், உடைமையில் சம அதிகாரம், சம அந்தஸ்து, வித்தியாசத்தை மூட்டும் முறைகளை ஒழித்தல், நிற பேதமோ வகுப்பு பேதமோ எதையும் விலக்குதல், வெளியார் ஆளுகையிலிருந்து விடுதலை பெறுவது யாவும் அதன் தலைமையான கொள்கையாக அமையவேண்டும்.

நண்பர்களே! நீங்கள் ஒருவேளை இதெல்லாம் நான் குடிக்கும் மனப்பால் என்று எண்ணிக்கொள்ளலாம். உங்களில் சிலர் நினைக்கலாம் - இவன் கனவு உலகில் திரிகிறான். தற்போது உலகிற்கு ஒவ்வாத பிதற்றல் இவன் கூறுவது என்றெல்லாம், இவ்வாறு நீங்கள் கருதுவீராயின் நான் ஓர் உதவாக்கரையே. பிழைகளை ஒப்புக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. நான் கனவு காண்பவன்தான், ஆனால் இந்த ஸ்வப்னமே எனக்குப் பிடித்திருக்கிறது. என்வரைக்கும் இந்தக் கனவுமுழுதும் கடின ஸாத்யமாகவே தோன்றுகிறது. இந்த ஆகாயக் கோட்டையே எனக்கு உணர்வூட்டி என் முயற்சிக்கு அரணாக நிற்கிறது. வாழ்வில் தென்பை மூட்டுகிறது. இந்தக் கனவுகள் மறையுமாயின் என்னால் உயிர் வைத்திருக்க முடியாது. இந்த ஆசைகள் சுருங்கிப்போனால் வாழ்க்கையில் இனிமையே தலைகாட்டாது. இந்தக் கனவே என் ஏமப்புணை. அதில் ஏறினால்தான் என்னால் கரை காணமுடியும்.

நான் காண்பது சுதந்திர பாரதத்தின் ஸ்வப்னமே! - தன் மகிமையிலேயே ஒளிவிடும் பாரதத்தின் இன்பக் கனவு. என் கோரிக்கை: இந்தப் பாரத நாடு தன் சொந்தக் குடித்தனத்திற்கு அதிதேவதையாக விளங்கவேண்டும். ஆட்படை கப்பற்படை, விமானதளம் ஆகிய எல்லாம்

அதன் ஆதிக்கியத்திற்குள் இருக்கவேண்டும். உலகில் ஒவ்வொரு நாட்டிற்கும் ஸ்வாதீனமான பாரத தூதர்களை அனுப்பவேண்டும். நான் மனமார விரும்புவது, கீழ்நாடுகளிலும் மேல்நாடுகளிலும் உள்ள நல்ல பண்புகளை ஏற்றுக் கௌரவம் நிரம்பிய பீடத்தில் அமர்ந்து பாரத அன்னை எட்டு ஐசுவரியங்களும் வாய்த்தவளாக வீற்றிருக்கவேண்டும் என்பதே. நான் விழைவது, தேசங்கள் தோறும் ஸத்யத்தின் மந்திரத்தையே - நிறைவான சுதந்திரத்தின் வீரிய வாசகத்தையே - அவள் பரப்பவேண்டும் என்பதே!

மாணவ நேயர்களே! இன்று மாணவர்களாயிருப்பினும் நீங்களே வருங்கால பாரதத்தின் தீபச்சுடர்கள். இந்தத் தேசத்தின் பிந்திய நாட்கள் ஒளிர்வதும் ஒடுங்குவதும் உங்களைப் பொறுத்ததே. சுதந்திர இந்தியாவின் உண்மை வம்சத்தாரும் நீங்கள்தாம். உங்களை நான் பரிவுடன் அழைக்கிறேன். வருவீராக! என் ஆசையிலும் என் கனவிலும் சிறிதளவு பங்கு எடுத்துக்கொள்ளுங்கள். இதற்குமேல் என்ன இருக்கிறது? உங்களுக்குத் தரக்கூடிய தானம் வேறு என்னிடம் ஏது? இதை நீங்கள் பெற்று மகிழ்வீர்களா? வயதில் இளையோராகிய உங்கள் இதயத்துள் வெளிப்படாத அவாக்கள் பொங்குகின்றன. உங்கள் முன்னிலையில்தான் இந்த மகத்தான லக்ஷ்யத்தை நான் ஸ்தாபிக்கவேண்டும். இந்த ஆதர்சம் எவ்வளவு மேன்மை அடைகிறதோ அவ்வளவு உள்ளே பதுங்கி இருக்கும் சக்திகள் வெளியே சீறி எழும். மாணவ கணங்களே! எழுவீர்! முன்னேகுவீர்! வெறும் வயிறு வளர்ப்பதற்கல்ல நீங்கள் படிக்கும், பயிலும் கல்வி. அதைவிட மகத்தானதொரு ஸாதனைக்கென்றே நீங்கள் வாழவேண்டும். காரணம், உண்டு உடுத்துவதோடு நிற்கவில்லை இந்த மனித வாழ்வு. உங்கள் எதிரே வருங்காலத்தின் ஒரு சித்திரத்தை நிறுத்துகிறேன். வரப்போகும் ஒரு புது

யுகத்திற்கு முன்னேற்பாடு செய்வது உங்கள் வேலை. அதற்கெனக் கொஞ்சம் தியாகம் செய்துதான் ஆகவேண்டும். வருங்காலத்திற்கு வசதியாக உங்கள் மனோவாக்கு காயங்களை செம்மைப்படுத்திக் கொள்வீராக. நீங்கள் பெறும் கல்வியையும் தீக்ஷையையும் இந்த லக்ஷ்யப் பாதையிலேயே, சுதந்திர ஒளிபடரும் புது வழியிலேயே செல்ல விடுங்கள்.

உங்கள் முன்னிலையில் நான் பிரிக்கும் இந்தச் சித்திரம் உங்களுக்கு அச்சத்தையும் தயக்கத்தையும் தரக்கூடும். இதை நான் ஒப்புக்கொள்ளாமல் இல்லை. இன்னும் ஒன்று ஆனந்தமும் இதில் காணலாம். நான் உங்களுக்குக் காட்டும் பாதை முள்ளடர்ந்ததாக இருக்கலாம். ஆனால் அந்த வழி ஒன்றல்லவோ கௌரவமான வழி? உங்களை அழைக்கிறேன். நாமெல்லாம் ஒரு குழுவினராகக் கூடிக் கைகோத்துக் கொண்டு புறப்படுவோம். இதனால் நம் மனித வாழ்வு பயனுறும். கஷ்ட நிஷ்டுரம், துன்பம், நிராசை, இருள் எது குறுக்கிட்டாலும் காலின் கீழ் நசுக்கிவிட்டு மேலே செல்லுவோம். கடைசியில் அழிவற்றதும் முடிவானதுமான குறியை வந்தடைவோம். இன்பத்தை நுகர்வோம். அமரநிலை வந்தெய்தும். வாரீர். - வந்தே மாதரம்.*



*1929 டிஸம்பர் முதல் தேதியன்று அமராவதியில் கூடிய மத்திய மாகாண - பேரார் மாணவ ஸம்மேளனத்தில் நிகழ்த்திய தலைமை உரை.

2. இளைஞர் எழுச்சி

"ஸ்வாதீன மனப்பாங்கோ, புத்துணர்வோ அடிப்படையாக இராத எந்த ஸ்தாபனத்திற்கும், எந்த எழுச்சிக்கும் இளைஞரது இயக்கமென்று சொல்லிக்கொள்ளும் பெருமை வாய்க்காது."

பாப்ன ஜில்லா இளைஞர் கழகம் என்னை அக்ராஸனம்வகிக்க அழைத்துப் பெருமைப் படுத்தியதற்காக என் மனமார்ந்த வந்தனம். நீங்கள் வாழும் இந்தப் பிரஸித்தமான நகருக்கு வரும் பாக்கியம் இதற்குமுன் எனக்குக் கிடைக்கவில்லை. எனக்கு மாத்திரம் இங்கு ஒருமுறை வரவேண்டு மென்ற ஆசை வெகுநாளாக மனசுக்குள் இருந்து வந்தது. அந்த ஆசை இன்று நிறைவேறியதைக் குறித்து நான் பரம ஸந்தோஷம் அடைகிறேன். வங்காளத்தின் அரசியல் கொள்கைகளில் சிக்கல்கள் வலுத்த பொழுதும், கக்ஷி வாதங்கள் பெரும் பகையாகவும் மனஸ்தாபங்களாவும் மாறிய சமயங்களிலும் புகழெய்திய இந் நகரில்தான் பலதடவை அவை முடிவிற்கு வந்து தீர்ந்தன. இன்று நாடு வந்திருக்கும் ஒரு நிலைமையில், பெருஞ் சிக்கல்களை விடுத்த அறிவாளிகளும் அனுபவசாலிகளுமான பாப்ன ஜில்லாவாசிகளே, நீங்கள் தேசத்திற்கு நலம் புரியும் பெரும் பணிகளில் முன்னணியில் நின்றுகொண்டு மற்றவர்களுக்கு வழி காட்டுவீர்களென்று நம்புகிறேன்.

கண்களைத் திறந்து பிற நாடுகளைக் கூர்ந்து கவனிப்போமாயின் தென்படுவது என்ன? நாலுபக்கமும் ஜீவவேகமும், விழிப்பின் அறிகுறியும், புதுப் புது ஸ்ருஷ்டிகளும் மறு மலர்ச்சியுந்தான். மாநிலத்தில் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலைவரைக்கும் இளைஞரின் பிராணன் துள்ளிக் குதிக்கிறது. பலஹீனம், அவநம்பிக்கை, பேடிமை யாவையும் உதறித் தள்ளிவிட்டு இளைஞர் தம் காலிலேயே நிற்கப்

பாடுபடுவதைப் பாருங்கள். பிற்காலத்தின் உரிமையாளர்களான இந்த இள வர்க்கத்தினர் இன்று சும்மா கிடக்கவில்லை. இன்று தம் அதிகாரத்தைப் பெறக் கச்சை கட்டிக் கொண்டு விட்டனர். அதைக் காக்கவல்ல தகுதியையும் சம்பாதித்துக் கொள்ளுகிறார்கள், இளைஞரின் இந்த எழுச்சி உலக சரித்திரத்தில் ஒன்றும் புதிய நிகழ்ச்சியே அன்று. மேல் நாட்டினர் காட்டும் முறை என்று இதைச் சொல்வது பொருத்தம் இராத விஷயம். எல்லாத் தேசத்திலும் எந்த யுகத்திலும், புதியன அமைக்க வேண்டிய நிர்ப்பந்தம் மூளும்பொழுது, இளைஞரின் ஆத்மா முன்னால் விழித்துக்கொள்ளும். குருக்ஷேத்திரச் சமர்முனையில் கிருஷ்ணன் இடிக்குரலில் "க்லைப்யம் மாஸ்ம கம: பார்த்த" என்று கூறியபொழுது மறலியை வெல்லும் வன்மைமிக்க இளமையின் வாணியல்லவோ தொனித்தது! போன வருஷம் நாகபூர் இளைஞர் கூட்டிய சபை ஒன்றில் "கிருஷ்ணனுடைய வாக்கு, அழியா இளமையின் அறைகூவலே" என்றேன். அழிவின் கோர சித்திரத்தைக் கண்ணுற்று அர்ஜுனன் விலவிலத்துப் போனான். தவிர அழிவிலிருந்துதானே புதிய படைப்பு வெளிவருமென்பதை அவன் கண நேரம் மறந்துவிட்டான். அருள் வாக்கான பகவத்கீதையின் உதவியால் கிருஷ்ண பரமாத்மா குருக்ஷேத்திர மயானத்தின் பேரில்தான் தர்மராஜ்யத்தை எழுப்ப முடியமென்ற விஷயத்தை அவனுக்குத் தெள்ளெனப் புரியவைத்தார்.

இப்பொழுது கேள்வி பிறக்கிறது: இளைஞரது ஆதர்சம் என்ன? தற்போதுள்ள கட்டுப்பாடுகள், அட்டூழியங்கள், அநீதம், துராசாரம் யாவையும் வீழ்த்திப் புதிய ஸமுதாயத்தை, புதிய நாட்டை நிருமிப்போம். தடுத்திடும் புராதனமான நெடிய மதிள்களைத் தாண்டித் தொலைவிலுள்ள ஒரு ஸத்தியத்தை நோக்கியே ஆதிகாலம் தொட்டு மனிதன் கண்ணைச் செலுத்துகிறான். அது

மட்டுமோ? தொலைவில் நழுவும் ஒரு ஸ்வப்னத்தை உரு வாக்க மனித இனம் அடிக்கடி முயன்று வருகிறது. இந்தத் தூண்டுதலின் பேரில் மிகவும் பழமையான யுகத்தில் பாரத நாட்டில், கௌதம புத்தர் தோன்றினர்; புராதனமான கிரேக்க நாட்டில் ஸாக்ரதீஸ், ப்ளேடோ போன்ற மகான்கள் உதித்தனர்.

இளைஞர் உண்டாக்கிய எந்த ஸ்தாபனத்தையும், அதாவது ஸேவாசிரமம், வாலிபர் மன்றம், எதையும் இளைஞர் சங்கமென்று சொல்லத் தகுமென்று நாம் நினைக்கலாம்; ஆனல் இந்த நினைப்பு தவருனதே. ஸ்வாதீன மனப்பான்மையோ புத்துணர்ச்சியோ அடிப்படையாக இராத எந்த ஸ்தாபனத்திற்கும், எந்த எழுச்சிக்கும், இளைஞரது இயக்கம்என்று சொல்லிக்கொள்ளும் பெருமை வாய்க்காது. இளமையின் ஜீவசக்திக்குள்ள லக்ஷணந் தான் என்ன? இந்தக் காலத்தை - இப்பொழுதுள்ள நிலைமையை - பிளவுபடாத ஒரு நிறைவான ஸத்யமென்று எடுத்துக்கொள்ளாத தன்மையும், எந்த முட்டுக் கட்டைக்கும், எந்த அநீதத்திற்கும் எதிரிடையாக நின்று போர் முரசுகொட்டும் தன்மையும், மயானப் புழுதியில் புது ஸ்ருஷ்டியின் தாண்டவத்தைக் கொண்டுவரும் வண்மையுமே அதன் லக்ஷணங்கள். அழித்தல், ஆக்கல் இவற்றின் இடையே மெய்ம்மறந்து நடம்புரியும் ஒருவனே இளைஞனுவான். இளமை மிக்கவன் துவம்ஸத்தையோ வெஞ் சமரையோ அஞ்சான். புதியன படைப்பதில் பராமுகமாயும் இரான். முதுமையினுல் உடல் தளர்ந்தாலும் உள்ளத்தில் இளமையைப் பச்சென்று வைத்திருக்க அவனுல் ஆகும். இள வயதானுலும் சிலர் மனத்துள் கிழவராகவே இருப்பார்கள். அந்த நிலையைத்தான் 'வ்ருத்தத்வம் ஜரஸா விநா' (நரை இல்லாத விருத்தாப்பியம்) என்பார்கள். வெகு நாளாக இதைப்போலத்தான் இளஞ் சக்தி தன்னை மறந்து இருந்து செக்கு மாட்டைப்போல்

பிறருடைய சவுக்கடிகளை முதுகில் வாங்கிக்கொண்டு ஒரே வழியில் சுழன்றது. பொறுப்பை எல்லாம் அந்நியர் கைக்கு விட்டுக் குருடரென ஊழியம் செய்துவருகிறார்கள் இளைஞர்கள். இந்தச் சூழ் நிலையில் தேசமோ ஸமூகமோ ஓரளவு முன்னுக்கு வந்தாலும் மாறுதல்கள் அப்படி விசேஷமாக மூளவில்லை. ஆனால் தலைவர்கள் அயோக்கி யர்களாக மாறி, ஸமுதாயம் ஜாதி இவற்றின் அழிவிற்குக் காரணமாய் நின்றபொழுது இளையோர் எதிர்த்துக்கொண் டிருக்கிறார்கள். ஸுல்தான் வசத்தில் எல்லா விதமான ராஜ்ய பாரத்தையும் அர்ப்பணம் செய்ததனால் துருக்கி ஜாதியார் படிப்படியாக அடிமட்டத்திற்கு வந்தனர். அப்பொழுது புரட்சி மனப்பான்மையுள்ள துருக்கி இளை ஞரே நவீன துருக்கி தளத்தை ஸ்தாபித்தனர். கெய்ஸரும் அவனுடைய ஆலோசனையாளர்களும், ராணுவ அதிகாரி களிடம் நாட்டின் பொறுப்பை எல்லாம் ஒப்படைத்த போது இள ஜர்மானியர் சும்மா இருக்கவில்லை. அதுவும், இத்தகையோர் தலைமையின்கீழ் மூண்ட ஒரு கடும்போர் ஜர்மன் நாகரிகத்தையே பாழாக்கி, தேசத்தைத் தோல்விக் கும் அவமானத்திற்கும் உட்படுத்தியதைப் பார்த்தபின் ஜர் மனியில் மூண்ட இளைஞர் எழுச்சி பன்மடங்கு வீறி வளர்ந் தது. மஞ்சு ராஜவம்சத்தவர்களின் பரிபாலனத்திற்குத் தன்னை ஆளாக்கியதன் பயனாகச் சீன ஜாதி சௌரியத் தையும் வீரியத்தையும், சுதந்திரத்தையும் செல்வாக்கை யும் இழக்க நேர்ந்தது. அந்த ஸமயந்தான் சீனாவிலும் இளைஞர் எழுந்தனர். எந்த அளவிற்கு இள வர்க்கத்தி னர் தந்நம்பிக்கையுடன் நின்றார்களோ, தம் பொறுப்பை உணர்ந்தார்களோ, முழுவதும் தம் பலத்திலேயே ஊன்றிச் சொந்த நாட்டைமீட்கும் பெரும் பணியைப் பூண்டனரோ, அந்த அளவுக்கு அவர்களது கிளர்ச்சி பெருகிப் பரவியது. இன்று பாரதத்தின் ஒரு கோடியிலிருந்து மறு கோடி வரைக்கும் இளைஞர் விழித்துக்கொள்வதைப் பார்க்

கிறேம். அதன் அர்த்தம் என்ன? பாரத நாட்டின் இளைஞர் தமக்குள்ள சக்தியை உணர்கின்றனர். தம் ஸமூகத்தை உத்தாரணம் செய்யும் பொறுப்பை ஏற்கின்றனர். கடுமையான விரதங்களை நெஞ்சம் கலங்காமல் கொள்கின்றனர்.

சிலர் விஷயம் அறியாமல் சொல்லலாம், இந்த இளைஞர் எழுச்சி அரசியல் தொடர்புடைய ஒரு கிளர்ச்சியின் மாறுபெயரென்று. ஆனால் இந்தக் கூற்று உண்மையல்ல. பூ பூக்கிறது. அதன் ஒவ்வோர் இதழிலுந்தான் மணமும் வண்ணமும் வெளிப்படுகின்றன. நீண்ட நாள் படுக்கையில் கிடந்த பிறகு மனிதனுக்குத் தன் பழைய ஆரோக்கியம் திரும்பியபோது அவனுடைய ஒவ்வொர் உறுப்பிலுந்தான் பிராண சக்தி துள்ளி விரையும்.

குழந்தைப் பிராயம் வாலிபம் இவற்றைக் கடந்து நாம் இளமையை உட்கொள்ளும் பருவத்தில் இயற்கை அன்னை நமக்கு எல்லா விதச் செல்வங்களையும் வழங்குகிறாள். உறுதியான தேகம், சோர்வில்லாத மனோசக்தி, அறத்திண்மை எல்லாம். மனிதர்களாகிறோம் எத்துறையிலும். தனி ஒருவனுக்கு எந்த எந்தத் துறைகள் உண்டோ ஸமூக வாழ்விற்கு என்ன என்ன திக்குகள் இருக்குமோ அவ்வளவும் இந்த இளைஞர் எழுச்சிக்கும் உண்டென்பது நிச்சயம். இந்த விசித்திரமான எழுச்சி எடுக்கும் பல வடிவங்களில் ஒன்றேனும் குரூபமானதன்று. இந்த வடிவத்தொகுதியில் புலப்படும் ஸ்ருஷ்டியின் அழகைத் தான் யுவர்கள் நச்சுவார்கள். இளைஞர் எழுச்சி அரசியல் கிளர்ச்சியே அன்று. அப்படிச் சொல்வதனாலேயே அது அரசியலுக்குப் புறம்பானதென்பதாகாது. அரசியலை அறவே துறப்பது இந்த எழுச்சியின் உத்தேசமல்ல; இதில் அரசியலுக்கும் இடம் உண்டு. எப்படி ஒரு நாட்டின் கிளர்ச்சியில் அரசியலும் தன் பங்கைச் செய்

கிறதோ அந்த விதமாகத்தான். ஆனால் இதைக் கொண்டு எந்தக் கிளர்ச்சியையும் அரசியல் கிளர்ச்சி யென்று நாம் சொல்லிவிட முடியாது.

காவியம், இலக்கியம், சில்பம், கலை, தத்துவம், விஞ்ஞானம், வாணிபம், வியாயாமம், ஸமூகசேவை, அரசியல் தொண்டு இவற்றின் மூலம் நாட்டின் வாழ்வு மலர்ச்சியுறும். ஆனபடியால் இவற்றின் வழியாகவே இளைஞரின் ஜீவசக்தி வெளிப்படுகிறது. உள்ளத்துள் எப்பொழுது இந்தச் சக்தியின் ஊற்று சுரக்கிறதோ அன்றே பலமுகமாக அது மேலுக்குக் கிளம்பி வழிந்தோடும். உறங்கியிருக்கும் இந்தச் சக்தி ஊற்றைக் கிளப்பும் மந்திரத்தைத்தான் நாம் கண்டுபிடிக்கவேண்டும்.

பலபேருடைய எண்ணம் இது: பொது மக்களையோ இள வர்க்கத்தையோ தூண்ட வேண்டுமானால் அரசியல் அல்லது ஸமூதாயக் கொள்கையின்படி செய்தால் தான் முடியும். ஸமுதாயம், அரசியல் இவை எந்த ஆதர்சத்தின்படி அமையவேண்டும் என்பதைக் குறித்துப் பல அபிப்பிராயப் பேதங்கள் உலவுகின்றன: அனார்க்கிஸம் (அராஜகம்), ஸோஷியாலிஸம் (ஸமூக வாதம்), கம்யூனிஸம் (பாட்டாளி நாயகம்), 'ஸின்டிகாலிஸம்' (சங்க நிர்வாகாதிகாரம்), 'ரிபப்ளிகானிஸம்' (ஜனநாயகம்) 'கான்ஸ்டிட்யூஷனல் மானர்க்கி' (சட்டத்திற்குட்பட்ட அரசாட்சி) 'பாஸிஸம்' என்றெல்லாம் ஒவ்வொரு கொள்கையினரும் தம்முடைய முறைகளிலேயே துன்பத்தை உலகிலிருந்து நீக்கிவிட முடியுமென்று பறை சாத்துகிறார்கள். இதனாலேயே இந்தக் காலத்தில் பேதித்த வாதங்கள் ஒன்றை ஒன்று அமுத்தப் பார்க்கின்றன. என்னுடைய துணிவு என்னவென்றால், நாம் மனிதத் தன்மையும் நேர்மையும் அடையாதவரை எந்த வாதத்தினாலும் எந்தக் கொள்கையினாலும் மனிதஜாதிக்கு ஒரு நன்மையும் ஏற்படாது. ஸ்வாமி விவேகானந்தர்

'மனிதனுக்குவதே எனது வேலை' என்பார். ஜாதியின் உயர்வுக்கோ கொள்கையின் மேன்மைக்கோ அஸ்திவாரமாக இருப்பது அசல்மனிதத் தன்மையே. இந்தத் தன்மையை உண்டாக்குவதுதான் இளைஞர் எழுச்சியின் முக்கிய நோக்கம். அத்தகைய மனிதன் எந்தத் துறையிலும் பூர்ண வளர்ச்சி அடைந்தவனு யிருக்கவேண்டும். இதிலிருந்து அனுமானம் பண்ணலாம், இளைஞர் எழுச்சிக்கும் ஸாம்ய வாதத்திற்கும் ஒரு வித்தியாசமுமில்லை என்று. இது சரியல்ல. எல்லாக் கொள்கைகளுக்கும் மையமாக நிற்கும் ஒரு ஸமஸ்யைக்கு விடை தேடுவதுதான் இளைஞர் எழுச்சியின் ஆதர்சமாகும்.

இளைஞர் எழுச்சி இருமுகமானது. ஸர்வதேசக் கொள்கை ஒருமுகம், மற்ருென்று தேசீயம். ஸர்வதேச சம்பந்தமாக இந்த எழுச்சியின் நோக்கம், உலக மாந்தரை ஒரே சகோதரத்துவப் பிணையால் கட்டுவதே ஆகும்; விதேசி, அயலான் என்ற விகற்பமின்றி உடன்பிறந்தவர்கள்போல் எல்லாரும் பழகுவதே. இந்த பாவம் இளைஞர் எழுச்சியின்மூலமே வெளிப்படுகிறது. ஸர்வதேச யுவர் சங்கம் இந்த உணர்வைப் பரவச்செய்ய அனுகூலமாயிருக்கிறது. இன்று ஸ்வயம்பிரகாசமான இளைஞர் வர்க்கம் காண்பதென்ன? எல்லாத் தேசத்திலும், எந்தக் காலத்திலும் இளைஞரது ஆதர்சமோ, உள்ளக்கிளர்ச்சியோ, ஸாதனையோ அனுபவமோ அடிப்படையில் ஒன்றே. உலகத்து இளைஞரிடையே இந்த நெருங்கிய உறவும் பேதமின்மையும் ஊறஊற இதன் ஒளி எவ்வளவு தூரம் பரவி நிற்குமென்பதை நீங்களே சிந்தித்துப் பாருங்கள்.

ஜாதிக்குள்ளேயே பொருமையும் பகையும் கனன்று புகைந்துகொண்டிருக்கின்றன. அவற்றை அவிக்கவேண்டுமானுல் ஒவ்வொரு நாட்டிலும் இந்தக் கிளர்ச்சியைப் பரப்புவது அவசியம். சண்டை சச்சரவுகளைத் தொலைக்கவும், உலகத்தில் அமைதியை நிலைநாட்டவும், பல நாடுகளில்

இளைஞர் கட்டுப்பாடாக வேலைசெய்து வருகிறார்கள். இத்தனை நாட்களுக்குப் பின்னரே அவர்களுக்குப் புரிபட்டது, தாம் சூழ்ச்சிக்கார அரசியல் வாதிகள் ஆட்டி வைக்கும் பொம்மைகள் என்பது. பீரங்கி வாய்க்கெதிரே சென்று ஆருயிரை ஈந்து மாண்டோர் இந்த இளைஞரே. ஆனால் யுத்தப்பேயை எழுப்பிய பெருமை எல்லாம் அந்தச் சூழ்ச்சிக்காரக் கும்பலைத்தான் சாரும். அவர்கள் மட்டும் அந்தப் பேய்க்கு இரையாகாமல் நின்றனர். நாட்டின் உண்மையான நலத்தைக் கோராத இந்தப் பாபிகள் உலகில் அமைதி நிலைத்திட எவ்வளவு பாடுபட்டாலும் விருதாவாகும். காரணம், இன்று பல நாடுகள் தளைகளில் கட்டுண்டு இருக்கின்றன; பிறர் ஆதிக்கியத்தின் கீழ் அழுந்திப் பெருமூச்சுவிடுகின்றன. இவை ஸ்வாதீனம் பெறுதவரைக்கும் உலக அமைதி யென்றெல்லாம் சொல்வதில் அர்த்தமே இல்லை. அந்த அமைதிக்கும், அடிமை வாழ்விற்கும் ஒரு வித்தியாசமும் இல்லை. இருந்தாலும் இதை மட்டும் மறுக்கமுடியாது; என்றைக்காவது அமைதி ஏற்பட்டே தீரும். அதை செய்யக்கூடியவர்கள் இந்த உலகத்து இளைஞர் ஸமூகமே.

அமைதியை நிலைநாட்டுவதோடு, இன்னும் பல வழிகளில் தேச விதேசங்களிலுள்ள இளையோர் கட்டுப்பாடாக வேலைசெய்யக் கற்றுக்கொள்ளவேண்டும். மொத்தத்தில் மனிதர் இயல்பு எந்த நாட்டிலும் ஒரே மாதிரிதான். மனித வாழ்க்கை ஸம்பந்தமான சிக்கல்கள் எந்தக் காலத்திலும் எந்த இடத்திலும் ஒரே விதமாகத்தான் இருக்கும். இங்கிலையில் பல்வேறு நாட்டைச் சேர்ந்த இளையோர் ஸர்வதேச ஸூத்ரத்தோடு ஒட்டிக்கொண்டால் ஒருவருக்கொருவர் உதவியாக இருப்பார்கள். இதன் நன்மையை நாம் எளிதில் உணரலாம்.

தேசியத்தின் நோக்கிலிருந்து இளைஞரின் கிளர்ச்சியின் உத்தேசம் என்னவென்பதைப் பார்ப்போம். புதிய

ஆதர்சத்தைப் பின்பற்றிப் புதிய ஜாதியை உருவாக்குவதே அந்த உத்தேசம். புதிய ஜாதியை உருவாக்குவதற்கு முன் ஜாதிகள் எவ்வாறு எழுந்தன, வீழ்ந்தன என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். தொன்றுதொட்டு வெவ்வேறு ஜாதிகள் தோன்றி மறைந்துபோனதை நாம் படித்திருக்கிறோம். இதை விதிவசம் என்று சொல்வதற்கில்லை. இந்த விஷயமாக மேல்நாடுகளில் சிந்தனையும் ஆழ்ந்த ஆராய்ச்சியும் நடந்தேறி இருக்கின்றன. இப்படி ஜாதிகள் உதயமாகி அஸ்தமிப்பதற்கு விஞ்ஞான ரீதியான காரணங்களையும் காட்டியுள்ளனர். அவர்கள் ஆராய்ந்த உண்மையின் சாரம் இதுவே. தனி ஒருவனுக்கு வாழ்வும் சாவும் எவ்வாறு ஏற்படுகிறதோ அதேபோல் ஜாதிகளுக்கும் உண்டு ஏற்றத் தாழ்வு. ஜீவ சக்தி குறைந்தால் மனிதன் மரணத்தை நோக்கி விரைகிறான். ஜாதியும் அவ்வாறே மரித்தொழிகிறது. சில ஸமயம் ஏதாவது ஒரு ஜாதியினர் மண்ணுலகைவிட்டு இருந்த இடம் தெரியாமல் அழிந்துபோகிறார்கள். சரித்திரத்தில் இரண்டே பக்கங்கள் அவர்கள் இருந்ததற்கு அத்தாட்சியாக நிலவும். சில ஜாதியினர் மனிதப்பிறவி எடுத்தாலும் காட்டுவிலங்குகள்போலவே உயிர் வைத்துக் கொண்டு திரிகிறார்கள். அதிர்ஷ்டம் பண்ண ஜாதி எது? மரணத்தின் வாயில் வரைக்கும் வந்தபொழுதும் புனர் ஜன்மம் எடுத்து மீளும் ஜாதிதான். எந்த நிலையில் இந்த மறுபிறப்பு சம்பவிக்குமென்பதைக்கூட விஞ்ஞானிகள் சிலர் காட்ட முயன்றார்கள். ரத்தக் கலப்பினாலும், சால்புகள் ஒன்றோடு ஒன்று இழைவதாலும், ஜாதிகள் மறுபிறப்பு எடுக்கின்றன; அழிவதில்லை. மேல்நாட்டு விஞ்ஞானிகளின் கூற்றை நாம் ஆமோதிக்கிறோமோ இல்லையோ, ஒன்றை மட்டும் ஒப்புக்கொண்டாகவேண்டும். பாரத நாட்டில் பல ஜாதிகளின் குழப்பம் இருக்கிறது. பல்வேறு ஜாதியினர் தோன்றியதன் விளைவாக

இந்தியா பல திறப்பட்ட பண்புகள் ஒன்று கூடும் இட மாகத் திகழ்கிறது. இந்தக் கலப்பினுலோ என்னவோ பாரத மக்களும் அவர்களது ஒப்பற்ற ஸமுதாயமும் அடிக் கடி சாவளவுக்கு வரினும் ஒவ்வொரு தடவையும் புனர் ஜன்மமே ஏற்படுகிறது. இன்னும் இந்தப் புராதன ஜாதியினர் உலகில் அழிவின்றி வாழ்ந்துவருகிருர்கள். இது கலப்பின் மகிமைதானே?

வெவ்வேறு ஜாதி, விதவித வர்ணத்தவர் இவரிடையே ரத்தக் கலப்பினுல் வரும் மாறுதல்களைப்பற்றி நம்முடைய கொள்கை எதுவாய் இருப்பினும் ஒரு விஷயத்தை மட்டும் யாராலும் மறுக்கமுடியாது. முரணுன இரு ஸமூகங்கள், பண்புகள் புணர்வதனுல் சிந்தனை உலகில் புரட்சி மூள் கிறது. இந்தப் புரட்சியே ஜாதியின் அறிவு விகாசமாவ தன் லக்ஷணம். இங்கிலீஷ் ஜாதியார் இந்த நாட்டில் காலை வைத்த பிறகு நம் சிந்தனை உலகில் தலைகீழான மாறுதல்கள் நிகழ்ந்திருக்கின்றன. இதுவே இந்த யுகத் தின் புத்தம்புது விழிப்பின் ஸூசகம். இது முதற் கொண்டே நாம் உள்நோக்குடையவர்களானேம். நாம் இருக்கும் நிலையை அலசிப் பார்த்துக்கொண்டு கண்பெற் ேரும். பழைய நிலையுடன் இன்றைய போக்கை ஒத்திட் டோம்; மற்றைய நாடுகளின் சுயேச்சை வாழ்வையும் ஒரு வாறு ஊகித்துக் கொண்டோம். நாம் இன்று இருக்கும் இழிவான நிலைமையையும், நடத்தும் அவகேடான வாழ் வினையும் ஓர்ந்து கெளரவம் நிரம்பிய வருங்காலத்தைக் கனவிலாவது காணக் கற்றுக் கொண்டோமே! பெருமை படக்கூடிய நம்முடைய ஆதி சரித்திரத்தைவிடப் பிற்கா லம் பின்னும் பிரகாசமாகவே இருக்கும்! இந்தக் கனவுக் குள்தான், இந்த ஆதர்சத்தின் வர்ணச் சிப்பிக்குள்தான், சிருஷ்டியின் வித்தாகிய அரிய முத்து அடங்கி இருக் கிறது. நம் ஜாதி விழித்தெழ வேண்டுமானுல் நமக்கு இன்றைய நிலைமைமீது அதிருப்தியும் வெறுப்பும்

உண்டாக வேண்டும். ஒன்ருனதும் உயர்வானது மான ஆதர்சத்தையே தியானம் பண்ணவேண்டும். நம் இளைஞர் இயக்கத்தின் ஒரு முனையில் அதிருப்தியும் மற்ருெரு முனையில் ஆதர்சத்தின் ஆகர்ஷணையும் வேண்டும்.

ஏதாவது ஒரு கொள்கையைப் பற்றுக்கோலாகக் கொண்டு நாம் ஒரு புதிய ஸமுதாயத்தை நிறுவ முயல்வதைக் குறித்துச் சர்ச்சைகள் அநேகம் நிகழ்ந்தன. இன்னும் நடக்கின்றன. இந்த இடத்தில் இதைப்பற்றி ஆலோசிக்க நான் புகவில்லை. மூல ஆதர்சத்தைக் குறித்தே உங்கள் நோக்கைத் திருப்ப விரும்புகிறேன். நீங்கள் எந்த வாதத்தை வேண்டுமானுலும் கொள்ளுங்கள்; இன்றேல் தள்ளுங்கள். உங்கள் முயற்சி பயனுற வேண்டின், பழைய சரித்திரப் போக்கையும் நம்முடைய சூழ்நிலையையும் நினைவில் கொண்டே தொழில்புரிவது உசிதம். இதற்கு எடுத்துக்காட்டாக நான் ஒன்று கூற விரும்புகிறேன்: கார்ல் மார்க்ஸின் வாதத்தை நடைமுறையில் கொண்டுவரும் ஸமயம் ருஷ்யர் அதாவது பால்ஷிவிக் கக்ஷியார் செய்துள்ள மாறுதல் கார்ல் மார்க்ஸ் காட்டிய மார்க்கத்திற்கே நேர் விரோதமாக இருக்கிறது. 'ஸோஷியலிஸமோ' 'ரிபப்ளிகானிஸமோ' எதுவும், மேனுட்டுச் சரக்கென்பது பெரும்பாலோர் எண்ணம். இந்த முடிவு எவ்வளவு தவருனது! 'ஸோஷியலிஸமோ' 'ரிபப்ளிகானிஸமோ' புராதன இந்தியா அறியாத விஷயமன்று. அவ்வளவேன்? இன்றும் இந்தியாவின் சில மூலை முடுக்குகளில் இதற்குச் சான்றுகள் கிடைக்காமற் போகா.

இந்த மாதிரிக் கொள்கையோ வாதமோ, நீதியோ, ஸ்தாபனமோ கீழ்நாட்டினருக்கோ மேல்நாட்டிருக்கோ ஏகபோக உரிமை அல்ல. இவை ஸகலமான மனிதருக்கும் சொந்தமே. பாரத நாடு இன்று காய மனோவாக்காக ஸோஷியலிஸத்தைக் கைகொள்ள ஸங்கல்பம்

கொண்டால், பிற நாட்டு பாவனை, சிந்தனைகளின் சாயமே இதற்கு ஏறிவிடுமென்ற அச்சம் எனக்கு இல்லை. இந்தக் கொள்கையை நாம் வகிக்கிறோமோ இல்லையோ, சரித்திரத்தின் போக்கையோ, இன்றைய அவசியத்தையோ புறக்கணித்தால் நம் படைப்புத் தொழில் ஒரு போதும் நிறைவேறாது. இன்று பாரத தேசத்திற்கு இவ்வளவு அவகேடான நிலைமை ஏன்? இந்தப் பொன்னாட்டிற்கு என்னதான் இல்லை? இயற்கை வளம், அழகு, உடல் உறுதி, கல்வி, தீக்ஷை, வீரியம், கலை, அறிவு எதில் வறுமை? இந்த உபகரணங்களைக் கொண்டு ஓர் அழகிய உருவை உண்டாக்கி விடலாம், ஆனால் உயிர்ப் பொறியை அதனுள் பாய்ச்சுவதெப்படி? இந்தப் பிராணப் பிரதிஷ்டை என்று நடை பெறுகிறதோ அன்று அனைவர் உள்ளத்திலும் விடுதலை பெறும் பேரவா சுடர் விட வேண்டும். அமுத கலசத்தைக் கொண்டுவந்து சாம்பலாகிக் கிடக்கும் நம் உள்ளங்களில் தெளித்து உயிரூட்டும் அந்தப் பகீரதன் எங்கே? விடுதலையின் இன்பத்தை நுகர்ந்தவன், விடுதலைக்கே பித்துப் பிடித்து அலைபவன், பிறரை அந்த விடுதலை மந்திரத்துள் கட்டுவிப்பவன் எவனோ அவனே இந்த மாபெரும் வேள்விக்குக் கர்த்தாவாகத் தகுதி உடையவன். இந்த மாதிரி புரோகிதர்களை ஆயிரக்கணக்கில் இந்த இளைஞர் இயக்கம் உண்டுபண்ணட்டும்!

நமக்கு எல்லாந்தான் இருக்கின்றன - ஒன்று மட்டும் இல்லை - முழுத்தியாகம், ஆத்ம ஸமர்ப்பணந்தான் சூன்யம். எல்லா இடையூறுகளையும் கடந்து, ஆபத்துக்களைத் துச்சமெனக் கருதி ஓர் ஆதர்சத்தின் பின்னால் வாழ்வைச் செலுத்தும் ஆற்றல்தான் இல்லை. இந்தப் பிடிவாதம் நமக்கு இராததே பெருங்குறை. இங்கிலீஷ்காரரிடம் அது அமோகமாய் உண்டு. அதனால்தான் அவர்கள் உயர்ந்தார்கள்; நாம் தாழ்ந்தோம்; நாம்

உள்ளூர நம் தாயகத்தின்மீது ஆசை வைக்கவில்லை; நம் இனத்தவரிடமும் அன்பு செலுத்தவில்லை. நமக்குள் சண்டை இட்டுக் கொள்கிறோம். நம்மிடத்திலேயே துரோகிகளான மீர்ஜாபரும் உமிசந்தும் இருக்கிறார்கள். இன்றும் அவர்கள் மரித்தபாடில்லை. அவர்களுடைய வழித் தோன்றல்கள் நாளுக்குநாள் விருத்தி யடைகிறார்கள். நம் தாய்நாட்டை என்று போற்றுகிறோமோ, உயிரையும் தந்து நம் அன்னையின் கண்ணீரை எந்த நாள் துடைக்கிறோமோ, அன்றுதான் நமக்கு உரமும் எந்த வினையையும் சீராக முடிக்கும் ஆற்றலும் திரும்பும். இவை எங்கே கிடைக்கும்? மலையிலும் காடுகளிலும் தவங் கிடந்தாலும் வருவன அல்ல. பற்று அற்ற வினையில் வாழ்வைச் சொரிந்தால்தான், சலிப்படையாமல் போரில் ஈடுபட்டால்தான், நமக்கு இந்தப் பெற்றி கிடைக்கும். வீட்டுக்குள் மூலையில் எந்தத் தெய்வத்தை வழிபட்டாலும் சரி, இல்லறத்தைத் துறந்தாலும் சரி, இந்த அபூர்வ ஸாதனை - சக்தி - நமக்கு எட்டாத கனியே.

"சக்திபூஜா கதார் கதா நா
யதி கதார் கதா ஹதோ தபே சிரதின பாரத
சக்திபூஜே சக்திஹீன கபூ ஹதோ நா" *

இந்த ஸாதனை என்னவென்பதை ஸ்வாமி விவேகானந்தர் தம் வழியில் விலக்குகிறார்.

---

* சக்தி வழிபாடு வெறும் வாய்ப்பேச்சு அல்ல. அது அவ்வளவு எளிதானால், இப்படி என்றென்றுமே பாரதம் வலிமையற்றுக் கிடக்குமா?

பூஜா தார் ஸங்க்ராம அபார,
ஸதா பராஜய,
தாஹா 'கா டராக் தோமா
ஹ்ருதய ச்மசான,
நாசுக் தாஹாதே ச்யாமா **

இந்த வினைப்போரிலே சற்றும் பின்னடையாமல் உள்ளம் வைத்தோமானுல் நமக்குச் சக்தி பிறக்கும். இத்தகைய சமரின் மூலமே உலகிலுள்ள ஒவ்வொரு ஸ்வாதீன ஜாதியாரும் வலிமை மிக்கவராயினர். பாரதத்தின் இள வர்க்கத்தினர் இந்த வழியிலேயே செல்வாராக. அப்பொழுதுதான் இழந்த கௌரவம் மீண்டும் நமக்கு வரும், நம் பழைய பெருமை அன்றுதான் உலகத்தவருக்குப் புரியும். நம் ஐசுவரியம் அனைத்தும் திரும்பப் பெறுவோம். இந்த மகா தேசங்களுக்கிடையே ஒருவராகத் தலை நிமிர்ந்து சுதந்திர மானிடராய் முன் செல்வோம்.*

*[பாப்னு, யுவ-ஸம்மேளனத்தில் ஆற்றிய தலைமைப் பிரசங்கம்].



** வெஞ்சமரே அவளுக்குரிய பூஜை. எப்பொழுதும் தோல்வியே. அதனுல் நீ திடுக்கிட்டுப் போகாதே. உள்ளமே சுடுகாடு. அங்கே சியாமா நடமாடுகிருள்.

2

"சமூக முன்னேற்றமோ, அரசியல் வளர்ச்சியோ - ஒருபுறம் தனி மனிதனின் வலிமையைக்கொண்டும், மறுபுறம் சங்கங்களின் ஐக்கிய பலத்தினுலுமே ஆகும். புதிய பாரதத்தை நாம் நிர்மாணம் செய்யவேண்டுமானுல் உண்மையான மானிடனை முதலில் படைத்தால்தான் முடியும். உடனடியாக நாம் எந்த எந்தத் துறையிலும் சங்கங்கள் நிறுவிக் கட்டுப்படாத தொழில் புரிவதற்கு உபாயங்களையும் தழுவவேண்டும்."

இன்று நான் உங்களில் ஒருவனுக இந்தக் கூட்டத்திற்கு வந்துள்ளேன், போதிய அறிவோ திறனோ எனக்கு இல்லை. வயதிற்கு ஏற்றவாறு மனிதன், அனுபவமும், முன் ஜாக்கிரதையும் நுண்மை அறிவும் பெறுகிறுன். அந்தப் பெருமைகூட எனக்கு இல்லை. ஆகவே, உங்களுக்கு முதுமொழிகள் சொல்ல நான் வந்திருப்பதாக எண்ணுதீர்கள். ஆயினும் தலை நரைக்காதவர்களுக்கு அரிய செயல்கள் இயற்றும் ஆற்றல் போதாதென்பதை நான் நம்பாதவன். இதை நம்புவோரும் இருக்கலாம். அவ்வளவு ஏன்? இப்போது இங்கிலாந்தில் பிரதம மந்திரியாகப் பதவி வகிக்கும் மிஸ்டர் ராம்ஸே மாக்டோனுல்ட் தம் ஆலோசனைக்குத் தேர்ந்தெடுக்கும் அமைச்சர்கள் யாவரும் ஐம்பது வயதிற்கு மேற்பட்டவர்களே; நரை மூதாளர்கள்தாம். ஆனுல் இதே இங்கிலாந்தின் சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால், மிகவும் நெருக்கடியான சமயங்களில் இள வயதினர் ஓரிருவர் பொறுப்பான அமைச்சுத் தொழில் புரிந்திருக்கிருர்கள். இந்தக் காலத்தை நோக்குவோம்: துருக்கி, இத்தாலி, சீனம் போன்ற புத்தெழுச்சி அடைந்த பல தேசங்களில்

யுவகர்கள் கையிலேயே ஸமூகமும் அரசாங்கமும் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.

ஒன்றை அழிக்கவோ, ஒன்றை உண்டாக்கவோ சமயம் வரும்பொழுது இஷ்டப்படுகிருேமோ இல்லையோ யுவகர்களை நம்பித்தான் ஆகவேண்டும். அவர்களிடமே பொறுப்பையும் நடைமுறைகளையும் விட்டுவிடுவதுதான் நலன். பிற்போக்கு எங்கேயோ, ராஜதந்திரத்தின் மூலம் உளுத்துப்போன பழங்கொள்கைகளைக் காக்கும் இடம் எதுவோ அங்கெல்லாம் மூதாளர்களும் தலைநரைத்த பொக்கைவாய்க் கிழங்களும் ராஜ்யம் நடத்தட்டுமே. நம் தேசம், நம் ஜாதி, எத்தனையோ பிரளயக் கூத்துக்களையும் படைப்பின் விசித்திரங்களையும் பார்த்திருக்கிறது. பசுமை மிக்கவர்களுக்கும், புதுமையை நாடுபவர்களுக்கும், முற்ருத பிஞ்சானவர்களுக்கும் பாக்கிய தேவதை வெறுத்தவர்களுக்கும் கூப்பாடு வந்திருக்கிறது.

இளமையைக் குற்றம் எனக் கருதுவோர் நம்மிடைப் பலபேர் இருப்பதில் அதிசயமில்லை. இத்தகைய மனப் பான்மை முற்றும் மாறவேண்டும். அப்பொழுதுதான் இளமை குறையும் இழுக்கும் நிரம்பியது என்ற குற்றம் நீங்கும். ஸேவை, தியாகம் சலிப்பில்லாத உழைப்பு, நேர்மையான சுபாவம் இவையே வேண்டும்.

இன்று வயதானவர்கள் இளையவர்களை அறிவிலிகள், உதவாக்கறைகள் என்றெல்லாம் அவமதிப்புடன் நோக்க லாம். ஆனுல் மாசற்ற தகைமையினுலும் உண்மை உழைப்பினுலும் பெரியவர்கள் மனத்தைக் கவர்ந்து, அவர் களுடைய மதிப்பையும் ஆதரவையும் பெற முயன்ருல் எந்தத் தடைதான் குறுக்கிடும்?

உலகிடை ஓங்கிய இந்த இளைஞர் இயக்கம் எத்தகையது, அதன் நோக்கம் யாது, நடைமுறை என்ன - இவை பற்றிய தெளிவு எவருக்கும் இல்லை. யுவகர்களும் யுவதிகளும் குழுமி நடத்தும் ஓர் எழுச்சியை 'இளைஞர் இயக்க

மென்று சொல்லிவிட முடியாது. இன்றைய நிலைமையைப் பார்த்து அதிருப்தி அடைந்து கடுமையான சூழ்நிலையில் மூண்ட வெறுப்பிலிருந்தே இந்த இளைஞர் எழுச்சி உருவெடுக்கிறது. இளம் ஜீவன்கள் ஒருகாலும் இன்றைய போக்கையும் இந்த யுகத்து உண்மைகளையும் முடிவானவையென்று கருதுவன அல்ல. முக்கியமாக அநீதமும் அட்டூழியமும் எங்கெல்லாம் தலைவிரித்துத் தாண்டவம் ஆடுகின்றனவோ, அங்கெல்லாம் இளையோரது பிராணன் எதிர்த்துப் போராடுகிறது. குழப்பத்தின் மையத்திலிருந்தே நிலைமையை வேரோடு துண்டிக்கும் தீரம் உண்டாகிறது. இளைஞர் இயக்கத்தின் உற்பத்தி அதிருப்தியிலிருந்துதான் ஆரம்பிக்கிறது. இதன் நோக்கம், ஒவ்வொரு மனிதனுக்கும் சமூகத்திற்கும் ஆட்சிக்கும் புதிய ஆதர்சங்களைக் காட்டிப் புது வழியில் திருப்புவதுதான். ஆதலால் ஆதர்சமே இளைஞர் இயக்கத்தின் பிராணன்.

இந்தக் காலத்தில் இளைஞர் செய்யவேண்டியதென்ன? இதைக் குறித்து உங்கள் முன்னிலையில் ஒரு பெரிய திட்டம் வகுத்து உங்கள் ஆற்றலைக் குறைவு படுத்த நான் விரும்பவில்லை. அடிப்படையான சில கருத்துக்களை வெளியிட்டதும் என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன். சமூக முன்னேற்றமோ, அரசியல் வளர்ச்சியோ ஒருபுறம் தனி மனிதனின் வலிமையைக் கொண்டும், மறுபுறம் சங்கங்களின் ஐக்கிய பலத்தினுலுமே ஆகும். புதிய பாரத நாட்டை நாம் நிர்மாணம் செய்யவேண்டுமானுல் உண்மை மனிதனை முதலில் படைத்தால்தான் முடியும். உடனடியாக எந்த எந்தத் துறையிலும் சங்கங்கள் நிறுவிக் கட்டுப்பாடாகத் தொழில் புரிவதற்கு உபாயங்களையும் தழுவவேண்டும். மனிதத் தன்மை விகாசமானுல் தான் சமூக உணர்ச்சியும் விருத்தியடையும் என்ற எண்ணம் கொள்வது உசிதமல்ல. மனிதனுக்குத் தன் இயல்பை

நன்ருக மலரச்செய்வதற்கு எவ்வளவு கடின ஸாதனை அவசியமோ, சமூக வளர்ச்சிக்கும் அவ்வளவு ஸாதனை அவசியமானதே. பாரத மக்கள் பிறநாட்டாருடன் போட்டியில் தோல்வியுற்றுத் தம் சுதந்திரத்தை இழந்த தற்குப் பிரதான காரணம் சமூக உணர்ச்சி இல்லாத குறையே. நம் ஸமுதாயத்தில் சிற்சில பிற்போக்கான கொள்கைகள், புல்லுருவி போலப் புகுந்துவிட்டன. அதன் விளைவாக ஒன்றுகூடி இணைந்து வேலை செய்யும் சக்தியையும் பழக்கத்தையும் தொலைத்துக்கொண்டோம். இதற்கு ஒரு சான்று: ஸம்ஸாரத்தை வெறுத்து ஸந்யாஸம் கொள்வதுபோன்ற துறவு மனப்பான்மை, என்று தோன்றியதோ அன்றே நம் ஸமுதாயம், அரசியல் யாவும் கலகலத்துப் போகத் தலைப்பட்டன. பலருக்குப் பயன் படும் சமூகம், ஆட்சிமுறை இவை முன்னேறுவதைவிடத் தனி ஒருவன் மோக்ஷம் பெறுவதே மேலான விஷயமாக மாறிவிட்டது.

தன்னலம், பிறர் பொருளாசை, ஒற்றுமையின்மை போன்ற சமூக வளர்ச்சிக்கு விரோதமான சில தீமைகளால் நாம் ஒன்றுகூடி வேலை செய்ய முடியாமலும் நிற்கிருேம். இந்தக் கோளாற்றினுலுல் எந்தத் துறையிலும் முன்னணிக்கு வர முடியவில்லை. நம் ஜாதி இப்படி வீழ்ச்சியுற்றதற்கு நான் சொல்லும் காரணங்களையும் என் அபிப்பிராயங்களையும் கண்மூடித்தனமாக நீங்கள் கொள்ள வேண்டுமென்பது என் விருப்பம் அல்ல. பல தேசத்துச் சரித்திரங்களைப் பக்கத்தில் பக்கத்தில் வைத்துக்கொண்டே ஆராயுங்கள். அதிலிருந்து நாம் இவ்வளவு தாழ்ந்திருப்பதன் காரணம் நன்கு விளங்கும். தம்மிடத்தில் உள்ள குற்றங் குறைகள் வெளிப்படின் கண்ணுக்குப் புலனுனல், அதுவே எந்தத் தேசமும், எந்த ஸமுதாயமும் விழித்துக்கொள்ளும் எச்சரிக்கையாகி விடும்.

உலகின் போக்கிலாகட்டும், மனித வாழ்விலாகட்டும் நிகழ்ச்சிச் சூழலின் மறைவில், கண்ணில் படாததொரு நியதி உலவுகிறது. இதை வெகுவாய் யாருமே கவனிப்ப தில்லை. மேல்நாட்டு அறிஞர் எந்த நிகழ்ச்சியையும் 'எதிர் பாராதது', 'ஊழ்வினை', 'தெய்வச் செயல்' என்று சொல்லமாட்டார்கள். அவரவர் தம்மைத் தம் ஜாதியின் ஆதர்சத்தின் கழலடியில் அர்ப்பணம் செய்துகொள்ள வேண்டும். இதையே குறிக்கோளாக ஏற்றுத் தம்மையே முழுவதும் பிறர்க்கென வழங்கவேண்டும். ஆதர்சத்தின் பீடத்தில் தன்னைப் பலியிட்டுக் கொண்டால் மனித னுடைய சிந்தை, பேச்சு, காரியம் எல்லாம் ஒரே சுருதியில் லயிக்கும். அவனுடைய உள்ளும் புறமும் ஒத்திருக்கும். அவன் வாழ்வு ஒரே விதக் கோப்பாகும். அப்பொழுது தான் வாழ்வில் புதிய சுவை, புது இன்பம், புதிய பொருள் யாவும் கிட்டும். மலர்தலை உலகமே அவனுக்குப் புதுமை ஒளியுடன் திகழும்.

இன்றைய பேச்சில் என் சொந்த அனுபவங்களையோ நான் செய்த ஸாதனைகளைப் பற்றியோ உறுத்திச் சொல்ல விரும்பவில்லை. அதற்குக் காரணம், பாரத நாட்டான் என்றுமே உறுதி பிறழாதவன்; தன் ஸாதனையை மறவாதவன். ஆத்ம விகாசத்திற்கான முயற்சிகளை நாம் கைவிடாதவர்கள். பிறநாட்டு ஒருவ னுடைய தனி ஆதர்சமும் நம்மில் தனி மனிதனின் ஆதர்சமும் ஒன்றல்ல. ஆனால் இன்று நம் அடிமை வாழ்விலும், பலவித சங்கடங்களுக்கிடையிலும் அவ் வப்பொழுது மஹா புருஷர்கள் தோன்றுகிறார்கள். அதற்கு முக்கிய காரணம்: உண்மை மனிதனை உண் டாக்கும் ஆற்றலை நம் நாடு ஒருபோதும் இழக்கவில்லை; மறக்கவும் இல்லை. ஆனால் ஐக்கிய ஸாதனையைத்தான் மறந்து நிற்கிறோம். கூட்டு உணர்ச்சி இராத ஒரு ஸாதனை பயன்படாதென்பதை நாம் மறந்தே போய்விட்டோம்.

ஆகவே, சமூக வளர்ச்சியைக் கொல்லும் சில தீய மனப்பான்மைகள் நம்மிடைத் தோன்றியுள்ளன; பயிருக்குப் புல் பூண்டுகள் போல் நம் தேசீய வாழ்வைக் கெடுக்கின்றன. இன்று வங்க ஸமூகம் ஸம்ஹார வடிவம் எடுத்து ஸமூகத்தைப் பாழாக்கும் இந்தக் குருட்டு ஆசாரங்களை விஷமென அகற்றட்டும்; சமூகத்தை அடியில் கல்லும் இந்தப் பகைமையை நிர்மூலமாக்குவோம் என்று நாம் ஆர்ப்பரிக்கவேண்டும்.

தனி ஒருவனது விகாசத்தைக் குறித்து, நான் ஒரே வார்த்தை சொல்லுவேன்: 'ஸாதனை' என்பதைப் பலபேர் பலவிதமாகப் புரிந்து கொண்டிருப்பீர்கள். அதற்கு வெவ்வேறான வியாக்கியானங்கள் பகர்வாரும் உண்டு. மனித வாழ்விற்கு வேற்று உருவம் கொடுப்பதே இந்த ஸாதனையின் உட்கருத்து. இந்த உருவ மாற்றத்திற்கு வெளியிலிருந்து மட்டும் வேலை செய்தால் போதாது. மனித ஜீவனமே புதிய ஆதர்சத்தின் துடிப்பாக அமைய வேண்டும்.

இந்த யுகத்திற்கு ஏற்ற ஸாதனையில் இறங்கவேண்டுமானால் நம் நாடு, நம் ஸமூகம் என்ற பேதம் (உணர்வு) அத்யாவசியம். இதற்கு அனுகூலமானவற்றை ஏற்பதும், பிரதிகூலமானவற்றை ஒதுக்குவதும் நலம்.

இந்தப் புதுமையான ஆதர்சத்தைக் கொண்டு நம் வாழ்வினைச் சமைக்க வேண்டின் இதுவரை வழக்கத்தில் இருந்த பாதையைவிட்டு அறவே விலகிவிடவேண்டும். பழைய முறைகளைக் களைந்து புதுமையிலேயே கண்ணோட்டம்வைத்து நடந்ததனால் அல்லவோ மேல்நாட்டினர் உன்னத நிலைக்கு வந்திருக்கிறார்கள்? நாமோ, 'என்னவோ, எப்படியாகுமோ' என்று பயந்து சாகிறோம். வெளியைக் காட்டிலும் வீட்டையே கட்டிக்கொண்டு அழுகிறோம். அதனாலேயே நமக்குத் துணிச்சல் குறைவு. ஆனால் இந்தத் துணிச்சலே எல்லா சுதந்திரமக்களையும் தட்டி எழுப்

பியது. வங்க இளைஞர்களுக்கு நான் சொல்வதென்ன? வெளியுலகைக் காண விழையுங்கள். வீட்டு மூலையில் பதுங்கிக்கொண்டு இராதீர்கள். கண்டறியாத ஒரு புதுமையில் பித்தம் கொள்ளுங்கள். குறுகிய எல்லைக்குள் அடங்கி இராதீர்கள் - அது வீடானாலும் சரி, சுய நாடானாலும் சரி. யாதும் ஊரே யாவரும் கேளிரெனப் பாவித்து விசித்திர அனுபவங்களால் நம் நாட்டை இன்னும் ஞானக் களஞ்சியமாக்குங்கள்.

நமக்கோ அளவற்ற சக்தி இன்னும் இருக்கிறது; நம்மிடத்தில் நம்பிக்கை விழாத குறை ஒன்றுதான். நாட்டு மக்களை உள்ளூற நேசிக்க வேண்டும். மனமார நாம் அவாவிய பொருள், பெற்றி, ஒருநாள் அல்லது வேறு ஒருநாள் நமக்குக் கிடைத்தே தீரும்.

சுதந்திரப்பற்று வெறி கொள்ளும் நிலையில்தான் நம்முள் உறங்கும் சக்தி வெளிக்கிளம்பும். நாமே வியப்போம், இவ்வளவு பலம் எங்கே இத்தனைநாள் மறைந்து கிடந்ததென்று. புதிய விழிப்பினால் ஏற்பட்ட இந்தப் பலம் நமக்குச் சுதந்திரத்தை அளிக்கும்.

'நான் ஸ்வாதீன மனிதன்' - இந்த மந்திரத்தை எவனும் உள்ளூற உச்சரிக்கவேண்டும். இதைத் தியானம் செய்யச் செய்ய அச்சம் விலகி விடுகிறது. நிர்ப்பயமே எந்தக் கடினமான தளையையும் பிளக்க வல்லது. எந்த இடும்பையும் அதற்குமேல் நம்மை வழி மறிக்காது.

யஷோர் - குல்னாவாசிகளான என் சகோதரர்களே! ஒன்று சேர்ந்து உரைப்போம் வாரீர்: "நாம் மனிதர்களாவோம். நமனையும் அஞ்சாத விடுதலை விரும்பும் உண்மை மனிதர்களாவோம். புதிய பாரதத்தை நாம், தியாகத்தின் மூலம், ஸாதனையின் மூலம், தளரா முயற்சியின் மூலம் சமைப்போம். நம் பாரத மாதா மீண்டும் ராஜராஜேசுவரியாக விளங்குவாள். அவளுக்குப் பெருமை வந்தால் நமக்கும் பெருமைதானே.

எதற்கும் பணியோம். யார்க்கும் குடியல்லோம். புதுமையைத் தேடி, புலனுகாத ஓர் உண்மையைப் பிடிக்க விரைவோம். நாட்டை உத்தரிக்கும் பெரும் பொறுப்பை ஊக்கத்துடனும் வணக்கத்துடனும் ஏற்போம். இந்த நோன்பினுல் நம் வாழ்வு புனிதமடையும். திரும்பவும் உலகமே போற்றும் உயர்ந்த பீடத்தில் பாரத தேசத்தை அமர்த்திடுவோம்.''

தம்பிமாரே, எழுவீர். சிறிதும் தயக்கமின்றித் தலைகளைத் தாழ்த்திக் கைகுவித்து நம் அன்னையின் திருவடிகளைத் தொட்டு, "பூஜைக்குச் சித்தமாக நிற்கிறோம். தாயே! கடைக்கண்ணுல் பாராய், தேசமாதா!'' என்போம்.



[1929-ஆம் ஹு ஜூன்மீ 23உ யஷோர் - குல்ஞ யுவகர் சங்கத்தில் நேதாஜி நடத்திய பிரசங்கம்].

3

"எல்லா நாட்டிலும் இளையோர் சமூகம் அதிருப்தியையும், பரபரப்பையும் அடைந்திருக்கிறது. அவர்கள் விரும்புவது கிடைப்பதில்லை. அவர்கள் வழிபடும் ஓர் ஆதர்சத்தை வாஸ்தவ உருவில் நிறுத்தமுடியாமல் இருக்கிறார்கள். அதனால்தான் எதையும் எதிர்த்துப் போராடுகிறார்கள். தங்களை முன்னால் தள்ளி மறைவிலிருந்து ஆட்டிவைக்கும் மனிதர்களையும் தொழில் முறைகளையும் தொலைத்திடவே கங்கணம் கட்டிக்கொண்டு விட்டார்கள்."

இன்று நீங்கள் மேதினீபுர ஜில்லாவைச் சேர்ந்த யுவகர்கள் என்ற ஹோதாவில் இந்தக் கூட்டத்தை நடத்த முன்வந்து, அதற்கு அக்கிராசனம் வகிக்க என்னை அழைத்திருக்கிறீர்கள். உங்கள் அழைப்பிற்கு இணங்கி மகிழ்ச்சியுடன் அதை ஏற்றுக்கொள்கிறேன்.

இந்த ஸம்மேளனத்தைக் கூட்டுமுன், அரசியல் மகாநாடாக இதை நடத்தாமல், இளைஞரது இயக்கமாக ஆக்கியதன் காரணம் என்னவென்பதை யோசித்தீர்களா? இந்தக் காலத்தில்தான் தேச விதேசங்களில் எத்தனையோ ஸ்தாபனங்கள் - இயக்கங்கள் - ஏற்கனவே இருக்கின்றன. புதிதாக இளைஞர் கிளர்ச்சி யொன்றை நடத்துவானேன்? இதற்குக் காரணம் காட்டுவது மிகவும் சுலபம். சூழ்நிலை, வயதில் பெரியவர்களான தலைவர்கள் மீது படரும் அவநம்பிக்கை, புதிய ஆக்கங்களில் பற்று, இவை யாவும் ஒன்றாகக் கலக்கவே இளைஞர் இயக்கம் எழுந்தது.

யுவகர் சங்கங்களை உருவாக்கும் காரியங்களில் இந்தக் காலத்தில் பலர் இறங்கியுள்ளனர். ஆனால் இளைஞர் இயக்கத்தின் ஆதர்சம், அதன் இலக்கு, காரிய

முறை இவற்றை முழுவதும் தெரிந்து கொண்டிருப்பவர்கள் எத்தனை பேர்? இளைஞர் சங்கங்களை ஸேவா சங்கங்களென்று நினைப்பது தவறே. காங்கிரஸ் கமிட்டியின் பெயரையும் 'லேபிளை'யும் மாற்றி யுவர் சங்கங்களை உண்டுபண்ணுவதிலும் அர்த்தமில்லை. உண்மையில் இளைஞர் இயக்கம் அலாதியானதே. இதற்கெனத் தனி ஆதர்சம் ஒன்று இருக்கிறது. தனிவழி, காரியமுறை எல்லாம் உண்டு. காங்கிரஸ் ஸ்தாபனத்தில் ஒரு பதவியோ அதிகாரமோ பெறுவதற்கு வழி இராது போகவே சிலர் இளைஞரை நடத்தும் தலைவர்களாக வேஷம் போடுகிறார்கள். யாதொரு நன்மையும் இத்தகையோர் மூலம் விளையாது. மணல் குதிரையை நம்பி நட்டாற்றில் இறங்கின கதையாகத்தான் முடியும். கண்ணெதிரே புதிய கிளர்ச்சி யொன்று மூள்வதைப் பார்த்து இருப்புக் கொள்ளாமல் சிலர் இதற்கு ஆதரவு அளிக்கிறார்கள். இவர்களால் எந்த நலனும் கைகூடாது. சமயத்தில் காலை வாரி இழுத்துவிடுவார்கள்.

உங்களை ஒன்று கேட்கிறேன்: வங்காளத்தின் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலை வரைக்கும் கண்ணை ஓட்டிச் சொல்லுங்கள்: இந்த இயக்கத்தில் கலந்து கொண்டவர்களில் எத்தனை பேர் உண்மையான உழைப்பாளிகள்? இந்த இயக்கத்திற்கென்றே ஊதியத்தை எதிர்பாராமல் பணி செய்ய முன் வந்தவர்களைக் கணக்கிடுங்கள். இளைஞர் இயக்கத்தின் கருத்தும், அதன் காரிய முறைகளும் எவ்வளவு பரவுகின்றனவோ, அவ்வளவுக்கு எழுச்சியும் வளரத் தொடங்கும்.

ஆரம்பத்தில் ஒரு விஷயத்தை மட்டும் அடிக்கடி வற்புறுத்திச் சொல்லுகிறேன். இளைஞர் சங்கங்கள் ஒரு போதும் காங்கிரஸ், ஸேவா ஸமாஜம் இவற்றின் கிளை ஸ்தாபனங்கள் ஆகா. இளைஞர் இயக்கத்தின் குறிக்கோள்,

புதுமையைத் தேடுவது; புதிய சமூகம், புதிய ஆட்சி முறை, புதிய பொருளாதாரம், மனிதரிடையே சிறப்பான ஆதர்சங்களைப் புகுத்தல், மனிதத்தன்மையின் உயர்ந்த படிக்கு அவர்களைக் கொண்டு விடுதல் இவையே இந்த எழுச்சியின் நோக்கம். இதை உணர்ந்தவர்கள் இந்தப் புது வாழ்வைக் காண உன்மத்தம் கொள்வார்கள். சும்மா உட்கார்ந்திருக்கமாட்டார்கள். அடங்கி ஒடுங்கி இருக்க மாட்டார்கள், ஒரு மூலையில். பரபரப்பும், அதிருப்தியும் எதிர்ப்பும் கொழுந்துவிடும் மனத்தினரே இந்தக் காலத்தில் உண்மையை மறைத்திடும் திரையை விலக்கிப் பெரு வாழ்வைக் காண்கின்றனர்; அதன் சுவையை அறிகின்றனர். இளைஞர் இயக்கத்தின் கருத்தைஉள்ளூற உணர்ந்தவர்களே யுவர் சங்கங்களை நிறுவ அதிகாரம் படைத்தவர்கள்.

இதற்கு முன் உண்டான இயக்கங்கள் மூலம் நம் உள்ளத்தில் மூண்ட வேட்கை தணிந்திருந்தால், வாழ்வின் கோரிக்கைகள் ஈடேறி இருக்குமேயானால், இளைஞரது இயக்கம் தோன்றியே இராது. குறுகிய நோக்கங்களும் முயற்சி இன்மையுமே இந்த இயக்கத்திற்கு அடிகோலின. பிறர் கண்காணிப்பில் தம் பொறுப்பைப் போட்டுவிட்டு இளைஞர் சமூகம் கடைசியில் பார்த்தபோது, தம் ஆசைகள், லக்ஷ்யங்கள் எவையும் கைகூடாமல் போனதை உணரலாயிற்று. ஆகவே இளைஞர்களால் இருக்க முடியவில்லை. பேடிமையை உதறித் தள்ளிவிட்டுப் பொறுப்பைத் தாமே ஏற்றால் விளைவென்னவாகும்? இந்தத் தீவிர உறுதியினால் நன்மையேதான் உண்டாகி யிருக்கும். வெற்றி எய்திய பின்னர் இந்தப் பூலோகத்தையே கட்டி ஆள முடியும். அப்படி இந்த முயற்சியில் நாம் உயிரை இழக்க நேருமாயின் வீரசுவர்க்கத்தில் இடம் பெறுவோம்: 'ஹதோ வா ப்ராப்யஸி ஸ்வர்க்கம் ஜித்வா வா போக்ஷ்யஸே மஹீம்'.

இளைஞர் இயக்கமென்பது யுவகர் யுவதியரின் எழுச்சியுந்தான். மனிதனை, மனித சமூகத்தை, மனித வர்க்கத்தின் நாகரிகத்தை, மூப்பு சாக்காட்டிலிருந்து காப்பதே இதன் நோக்கம். மனிதனின் இள்மை அழியாமல் இருப்பதற்கே இது வழி தேடுகிறது. இயற்கையில் நித்திய பசுமையான தாவரங்கள் இருப்பதுபோல மனிதனின் உள்ளத்தில் இந்த இளமையின் பசுமையும் நிலைத்திருக்க வேண்டும். ஒவ்வொரு யுகத்திலும் இளைஞரின் ஆன்மா, முதுமையை எதிர்த்தும், வறட்டு ஒழுக்கங்களைக் கண்டித்தும் அச்சம், பேடிமை, குருட்டு நம்பிக்கை, மற்றுமுள்ள தடங்கல் யாவையும் எதிர்த்தும் போராடி வருகிறது. கீதையில் முழங்கும் கிருஷ்ணனின் வாக்கு இளைஞரின் அமரவாணியே.

இளைஞரின் இயக்கம் சமுத்திரத்தைத் தாண்டி வந்த ஓர் அன்னிய நாட்டுச் சரக்கென்று கருதுவோர், 1897 - ஆம் கிறிஸ்துவ ஆண்டில் அது பிறந்ததென்றும் அதைப் பிறப்பித்தவன் ஜர்மானியனான கார்ல் பிஷரென்றும் கூறுவார்கள். ஆனால், இந்த உலகில் முதுமை எத்தனை நாளாக இருக்கிறதோ அத்தனை நாளாக இளைஞர் இயக்கமும் இருந்து வருகிறது. இது புதிதல்ல. தொன்றுதொட்டுவரும் விஷயம். ஆனால் இந்தக் காலத்தில் அந்த எழுச்சி பெரிய உருவில் வளர்ந்திருப்பதென்னவோ உண்மை. அதன் பின்னால் மகத்தான ஆதர்சம் ஒன்று வேலை செய்கிறது. இந்த ஆதர்சம் புதியதானாலும் வெகு நாளையது. யுகந்தோறும் இந்த ஆதர்சம் ஒன்றே பிராணனைத் தளிர்க்கச் செய்து புதிய தென்பை ஊட்டியிருக்கிறது. மிகப் பழமையான காலந் தொடங்கி, இந்தத் தேசத்தில் மனிதர் 'தர்மராஜ்ய'த்தைக் கனவில் கண்டு வருகிறார்கள். அந்த அந்தக் காலத்து ஸமூகங்களையும் ஆட்சிமுறையையும் உடைத்து, 'தர்மராஜ்ய' ஸ்தாபனத்தை விரும்பினார்கள். புராதன கிரேக்க நாட்டில்,

அங்குள்ள ஞானிகள் லக்ஷ்யக் குடியரசைக் காண விரும்பினர். இவ்வாறு ஒவ்வொரு யுகத்திலும், ஒவ்வொரு தேசத்திலும் மேதாவிகள் கனவுகண்ட 'யுடோபியா'க்கள் எத்தனையோ! சிலர் புது யுகத்தைப்பற்றி எழுதியுள்ளனர்; சிலர் விசால சமுதாயம் என்று குறிப்பிட்டனர்; சிலர் 'மில்லெனியம்' (புத்தாண்டு) என்றும், ஸத்யயுகமென்றும் 'ஸோஷலிஸ்ட் ஸ்டேட் (ஸமத்துவ ஆட்சி) என்றும் சொல்லி இருக்கிறார்கள். பல திசையாகவும் பல உருவங்களிலும், பல பாவங்களின் மூலமும் இளம் ஜீவன்கள் யுக யுகமாக ஓர் ஆதர்ச சமூகத்தையும், ஒரு லக்ஷ்ய புருஷனையும் அடையச் சொப்பனம் காண்கின்றன. முடிந்தவரை அதை உருவாக்கவும் பாடுபடுகின்றன. இந்த யுகத்தில், கிழக்கேயாகிலும் மேற்கேயாகிலும் 'ஸுபர்மான்' (அவதார புருஷனைப்) பற்றி வார்த்தைகள் உலாவுகின்றன. இந்த அவதார வாதத்தைச் சிலர் எள்ளி நகைக்கலாம். ஆனால் வாஸ்தவத்தில் இது கேலி செய்வதற்கான விஷயமன்று. 'ஸுபர்மான்' யார் என்பதை ஜர்மன் தத்துவஞானி 'நீட்ஷே' விவரித்துள்ளார்; நம் நாட்டு ஞானிகளும் இதை அறிவித்துள்ளனர். அதை நீங்கள் முழு உண்மையென்று அங்கீகரிக்காமல் இருக்கலாம். ஆனால் அவர்களது கோரிக்கை மனித ஜாதிக்கு நலனைத் தேடுவதுதான். அதற்காக அவர்கள் ஆற்றிய பணிகள் புகழ்தற்குரியன; இதில் சந்தேகமே இல்லை. எந்த ஜாதியின் அறிவாளிகள் 'ஸுபர்மானை' (அவதார புருஷனை)க் கனவில் காணவில்லையோ அந்த ஜாதிக்கு ஓர் ஆதர்சம் எங்கிருந்து வரப்போகிறது? எந்த ஜாதிக்கு ஆதர்சம் இல்லையோ அது உயிர் அற்றதே; எந்தவிதமான பேர் ஆற்றலுக்கும் அது தகுதி வாய்ந்ததல்ல.

மனிதனின் பிராண சக்தியைக் கிளப்ப வேண்டுமானால் அவனுடைய ரத்தத் துளியிலும் அம்ருத

ஸஞ்ஜீவினியைக் கொட்டவேண்டும். அவனுள் அடங்கியிருக்கும் வன்மைகள் கிளைத்தெழ வேண்டுமானால் மகத்தானதோர் ஆதர்சத்தின் சுவையை அவனுக்கு ஊட்டியே ஆகவேண்டும். கிறிஸ்துவர்களின் சமயநூலான விவிலியத்தில் அரிய வாக்கொன்று வருகிறது: "வெறும் வயிற்றுச் சோற்றுக்கு மட்டும் மனிதர் உயிர் வாழவில்லை. வேறுவிதமான உணவும் வேண்டியிருக்கிறது." வாழ்வின் மூலக் கருத்தென்பதை அறிய ஆவல் பிறக்கிறது மனிதனுக்கு. எதற்காக உயிர் வைத்திருக்கவேண்டும் என்ற கேள்வி எழுகிறது. இதற்குத் தகுந்த சமாதானம் கிடைக்காதுபோனால் அவன் பிராணனில் சக்தியின் மூச்சுப் பிறக்காது; தன் வாழ்வு வீணென்றே நினைத்துவிடுகிறான். உள்ளத்துள் பொதிந்திருக்கும் சக்திகளை எழுப்ப அவன் ஸாதனை புரியாமலிருக்கிறான். ஆனால் இந்த ஆதர்சத்தின் தனிச்சுவையையோ, அனுபவத்தையோ வலிய வந்து எவரும் நமக்குப் புகட்ட மாட்டார்கள். நாமே ஊற்றைக் கிளறி உட்கொள்ள வேண்டும், நம் பிரயத்தனத்தினாலேயே! இதைப் பெறாதவன் பிறனுக்கு எப்படி அதன் இனிமையை எடுத்துச் சொல்ல முடியும்?

எவ்வளவோ கனவுகள், எத்தனையோ பேருக்கு. அமரர் உலகில் வாழும் நம் தலைவர் தேசபந்து சித்தரஞ்ஜன் தாஸ் அவர்களுக்கும் ஒரு சொப்பனம் இருந்தது. அதுவே அவருக்குச் சக்தியைக் கொடுத்த ஊற்று. அன்னாருக்கு இன்பத்தைத் தந்த அருவி அதுவே. அவர் கண்ட சொப்பன லோகத்தின் உரிமையாளர்கள் நாம் இன்று. ஆகவே நமக்கும் ஒரு கனவு உண்டு. நாம் எழுவது, நடமாடுவது, பேசுவது, வினை செய்வது யாவும் அதன் தூண்டுதலினாலேயே. அந்தக் கனவு அல்லது ஆதர்சத்தின் நோக்கம் யாது? எத்திசையிலும் விடுதலை அடைந்த ஒரு பூரண சமுதாயமும், ஸ்வாதீனம்

உள்ள ஆட்சி முறையுமே. நாரியரும் சரிசமமாக ஆண்களுடன் ஸ்வாதீனம் பெற்று, தேசத்திற்குப் புரியும் தொண்டுகளில் தம் பங்கைச் செலுத்தும் காலம் வந்தால் பொருளாதாரத்தில் எந்த விதமான வேற்றுமையும் தலை காட்டாது. எந்த ஸமுதாயத்தில் ஒவ்வொருவனுக்குப் படிப்பும் சம உரிமையும் வாய்க்குமோ அதில் உண்மை உழைப்பாளிகளுக்கு மதிப்பு ஏற்படும். சோம்பித் திரிபவர்களுக்கு அதில் இடமே இராது. அன்னியர் ஆதிக்கியத்திலிருந்து எல்லா விஷயத்திலும் எந்த ஸமுதாயம் விடுபட்டு நிற்கிறதோ, நம் சொந்த முன்னேற்றத்திற்கு எந்த ஆட்சி முறையின் யந்திரம் சுழலுகிறதோ, பாரத மக்களின் குறைகளை நீக்கி அவர்களது ஆதர்சத்தை நிறைவாக்க எந்த ஸமூகம் தயங்காமல் நிற்கிறதோ, அத்தகையதோர் ஆதர்ச நாட்டை - ஸமூகத்தை - ஆட்சியை - நான் சொப்பனத்தில் காண்கின்றேன். என் மட்டில் இந்தக் கனவு பொய்யன்று, அவ்வளவும் ஸத்யம். இதற்கென்று எதை வேண்டுமானாலும் செய்வேன்; உயிரையே! ஈடுவைப்பேன்; துன்பங்களை ஏற்பேன். அது நிறைவேறுவதற்காக மரணத்தையும் வரிப்பேன். என் இள நேயர்களே! உங்களுக்கு அளிக்கத் தகுதியான உயர்ந்த பொருள் என்னிடத்தில் ஒன்றும் இல்லை, இருப்பதெல்லாம் இந்தக் கனவே. இதுவே எனக்கு அளவற்ற சக்தியும் உத்ஸாஹமும் கொடுத்து என் சிறிய வாழ்வினைப் பயனுறச் செய்தது. இந்தச் சொப்பனத்தை உங்களுக்குப் பரிசாக அளிக்கிறேன்; ஏற்பீர்.

இந்தக் காலத்தில் அரசியல் துறையில் பதவி தமான அக்கப்போரும் வசையும் நம் காதில் அடிபடுகின்றன. இதில் ஒரு புகார், நாங்களெல்லாம் 'யுவர் சங்கங்களைக் கைப்பற்ற முயல்கிறோம்' என்பதுதான். இதைக் கேட்கச் சிரிப்பு வருகிறது. எந்த ஒரு ஸ்தாபனத்திற்கு -

இயக்கத்திற்கு - யாரொருவர் துணைபுரிகிருர்களோ அவர் களுக்குத்தான் இந்த மாதிரி திட்டெல்லாம். நான் கேட் கிறேன், இப்போது: இத்தனை நாட்கள் இந்தப் பேர் வழிகள் எங்கிருந்தார்களோ? வாழ்வெல்லாம் இந்த இயக்கத்திற்கென அரும்பாடு பட்டவர்கள் இந்த இயக்கத்தை நடத்தும் ஸ்தாபனங்களைக் கைப்பற்றுவது பெறுந் தவறுதான்! உதவிக்கு விரலைக்கூடத் தூக்கா மல் இதைக் கவரும் பேர்வழிகள் ஸமூகத்திற்கு இதம் செய்பவர்களே! கடந்து சென்ற கல்கக்தா காங்கிரஸ் கூட்டத்திற்குப் பிறகு வங்க மாகாண காங்கிரஸ் சபையின் ஒரு சாதாரணக் கூட்டத்தில், என் காரிய முறைகளை வகுத்து ஸமர்ப்பித்திருந்தேன். அந்தக் காரிய நிரலில் ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளேன்:- மாணவர் இயக்கத்திற்கும் இளைஞர் கிளர்ச்சிக்கும், வியாயாம சங்கங்களை நிறுவுவதற்கும் துணைபுரிய வேண்டும்'' என்றவாறு. பத்திரிகைகளில் இது பிரசுரமாகி இருக்கிறது. ஒவ்வொரு ஜில்லா காங்கிரஸ் கமிட்டிக்கும் இதை அறிவித்துள்ளோம். முதலில் ஒரு மறுப்பும் வரவே இல்லை. எல்லோரும் ஆமோதித்தனர். ஆனால் ஆண்டு இறுதியில் கக்ஷிச் சண்டைக்காக மற்றவனை இழிவுபடுத்த வேண்டிய ஸந்தர்ப்பம் மூண்டது. அப்போது இந்தப் புகார் எழுந்தது. நாங்கள் யுவர்களை மயக்கி அவர்களு டைய சங்கங்களை ஆக்கிரமித்துக் கொள்கிறேமென்றனர். நாங்கள்தாம் இளைஞர் இயக்கத்திற்கு ஒருவிதமான உதவியும் செய்யாதவர்கள்; இருக்கட்டுமே. இப்பொழுது வங்காளத்தில் ஒவ்வொரு ஜில்லாவிலும் யுவர்கள் சங்கங் கள் வேலை செய்கின்றனவே; அதற்கு நாயகமாக நின்று நடத்தும் அறிஞர்கள் என்ன சாதித்துவிட்டார்கள் பார்ப் போம்: சிலர் இந்த இளைஞர் இயக்கத்திற்கெனப் பலவித மாகப் பிரசாரங்கள் செய்திருக்கிருர்கள். அவர்களைக் குறிப்பிடவில்லை நான். ஆனால் அந்தச் சபையினர்

களுள் பெரும்பாலோர் அப்படி என்ன நடத்திவிட்டார்களோ? சில இடங்களில் யுவ சமிதிகள் தீவிரமாகவும் உத்ஸாகத்துடனும் வேலை செய்கின்றன. ஆனாலும் ஏதோ ஒன்று இந்த இயக்கத்தின் சுரப்பு வாயைப் பொத்திவிட்டது. இதன் ஊற்றிலிருந்து நடுநடுவே கொப்புளித்தெழும் வாசகங்கள் பெரும்பாலும் காங்கிரஸ் கொள்கைக்கு நேர்விரோதமாகவே இருக்கின்றன.

மற்றொரு திட்டு எங்கள் செவியில் படுகிறது. பிறரை இந்த மாதிரிக் காரியங்களில் கலந்துகொள்ள இடம் தருவதில்லையாம் நாங்கள். காரியம் செய்வதற்கு யார் அனுமதி தேவை? யாருக்கு யார் தருவது? நாங்கள் புகுந்து வேலை செய்வது யார் அனுமதியின்பேரில்? தம்மிடத்தில் மனிதத் தன்மை மிகுந்தவரே இந்தக் காரியத்தில் தாமாக இறங்கினார்கள். குழந்தையின் வாயில் தாய் ஊட்டுவது போன்றதன்று இது. அரசியல் துறையில் பக்குவமடையாதவர்களென்பதனால் எங்களுக்குச் சமமான சந்தர்ப்பம் இவர்கள் அளிக்கவில்லையென்று சொல்லுகிறோம். இப்படி அக்கப்போரை அடுக்குபவன் தனக்கு உரிய ஸ்தானத்தை இழப்பதோடு ஆதர்சத்தையும் இழந்துவிடுகிறான். வங்காள இளைஞர் இயக்கத்தைச் சில வருஷங்களாகப் பொறுப்புடன் நடத்தும் நண்பர்கள் காரியம் செய்வதற்குச் சௌகரியமோ, இடமோ பெருமலா இருந்தார்கள்?

வங்காளத்தில் இன்று வாதப் பிரதிவாதங்கள், போட்டா போட்டி, சண்டை சச்சரவுதான் எங்கே பார்த்தாலும். இத்தகைய நிலை வருந்தத்தக்கதே. இந்தக் கக்ஷிச் சண்டைகளினால் அதிகமாகப் பாதிக்கப்படுபவர்கள் நாங்களே. ஏனெனில், பெருமக்களின் பண உதவியையும் அவர்களது நல்லுணர்ச்சியையும் நாங்கள் எதிர்நோக்கி இருப்பவர்கள். இப்படிக் கக்ஷிக் கலகங்கள் இருந்துவந்தால் அணுவளவும் பொதுஜனத்தின் உதவி நமக்குக்

கிடைக்காது. பணத்திற்குப் பதிலாக, ஒவ்வொருவரிடமும் வசையே வாங்கிக்கொள்கிறோம். விவாதங்கள் நீடிக்குமாயின் நாம் முனைந்துள்ள ஓர் அரும் பணி பாதி வழியிலேயே நிற்கவேண்டியதுதான். இது வெறும் வார்த்தையன்று. நிலவரம் அந்த மாதிரி ஆகிக்கொண்டு வருகிறது. ஆகவே, இந்த மாதிரி கக்ஷியில் வேற்றுமையை அகற்றுவதற்கு நாங்களே முக்கியமாக ஊக்கம் கொண்டுள்ளோம். ஆனால் சில சாரார் எங்களைச் சண்டைக் காரக் கும்பலென்றும் காரியங்களை விட்டு இதற்கென்றே கச்சை கட்டிக்கொண்டு வருபவர்களென்றும் நினைக்கிறார்கள். காங்கிரஸ் ஓர் அரசியல் ஸ்தாபனம். அது ஸமூக ஸேவா ஸங்கம் ஆகாது. அரசியல் துறையில் பலருக்குப் பலவிதமான ஆதர்சங்கள் இருப்பது சுபாவமே. காரிய முறையிலும் கொள்கைகளிலும் பேதம் இருக்கலாம். அதை யாராலும் தடுக்கமுடியாது. கொள்கைகள் மாறுபட்டால் வழிகளும் வேறாகின்றன. தனிப்பட ஒருவருக்கொருவர் விரோதம் இராதுபோனாலும், அரசியல் விஷயங்களில் பேதம் இருந்தே தீரும். அந்தப் பேதமே பிற்பாடு மனத்தாங்கலாகவும் மாறிப்போகும். அதற்குமேல் ஒருவன் தான் பிடித்த பிடியை ஸ்தாபிக்க மும்முரமாக வேலையில் இறங்கித் தன் கௌரவத்தை நாட்டும்பொழுதே மற்றச் சாரார் பிய்த்துக்கொள்கிறார்கள். கடைசியில் அடிதடி வரைக்கும் வந்துவிடுகிறது விஷயம். ஆனால் இந்தக் கக்ஷிப் பூசல்களுக்கு யார் மூல கர்த்தா என்று கண்டறியாமலே பழியை ஒருவர்மீது சுமத்துவது அழகல்ல. இந்தச் சண்டைகளுக்குக் காத தூரம் நிற்பவர்களான நிரபராதிகளை இந்தப் பழிக்கு உட்படுத்துவது அநீதம். அரசியல் துறையில் அபிப்பிராய பேதம் உண்டாவது தடுத்தற்கரிய விஷயம். கொள்கை வேறுபாட்டினால் சண்டை மூள்வதைத் தடுப்பதும் முடியாத காரியந்தான். கொள்கை வேறு

பாடு மனஸ்தாபத்திற்கும் ஆளைத் திட்டும் அளவிற்கும் வராமல் காத்துக்கொள்வதே நம்முடைய வேலை. குடிகளின் எழுச்சியில் கலந்துகொள்ளும் சமயம் இந்த மாதிரி விஷயங்களில் நாம் பராக்காக இருந்தால் போட்டி முற்றிப்போய் ஈட்டியும் கத்தியும் ஏந்தி விளையாடும் நிலை வந்துவிடும். அப்புறம் தேசமே ரத்தவெறி பிடித்து ஆடும். ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டந்தானே! அன்றொரு நாள் கல்கத்தாவில் கூடிய ஒரு மாணவர்க் குழுவினரின் காரியங்களைக் கெடுக்கும் நிமித்தமாகவே வெளியூர் ஆசாமிகள் சிலரும் மாணவர்களும் உள்ளே புகுந்து செய்த ஆர்ப்பாட்டம் மிகவும் வெட்கக்கேடாக இருந்தது. அதற்கு முன்னால் சட்டக்கிராமத்தில் (சிட்டகாங்) இத்தகைய மோசடி ஒன்று நடந்தது. இதன் விளைவாகப் பதினான்கு வயது பாலகனான ஸ்ரீ ஸுகேந்து விகாச தத்தன் உயிரை இழக்க நேர்ந்தது. அதை எப்படி நாம் மறக்கமுடியும்? இந்தமாதிரி போக்கிலித்தனங்களுக்கு யார் பொறுப்பாளி? அந்தக் குண்டாக்களைத் தேடிப் பிடிக்கவேண்டியது நம் கடமையாகும். இதையெல்லாம் ஆராய்ந்த பின்னர் நாம் ஒரு வழியை அமைத்துக்கொள்ள வேண்டும். மிருகங்கள்கூடச் செய்வதற்கு நாணும் இந்த மாதிரியான கொடூரங்களை இலேசில் விடக்கூடாது; அம்பலமாக்கவேண்டும். மழுப்புவதில் பயனில்லை. ஸமூகத்தில் தோய்ந்திருக்கும் இந்தக் கறையை நாம் அகற்றவேண்டியது அவசியம். அஞ்சினால் நம் உயிர்க்கே இறுதியாகும்.

குண்டாக்களைக் கொண்டு வேலை செய்பவர்கள், 'இது எவ்வளவு தூரத்திற்குக் கொண்டுவிடும்? இதனால் என்ன விளையும்?' என்பதையெல்லாம் உணராமல் இருக்கிறார்களே! இந்தப் போக்கிலி வேலையை ஒருவன் செய்து விட்டுத் தப்பித்துக் கொள்ளலாம். நாளைக்கு இவன் மண்டையைப் பிளக்க இன்னொரு குண்டா பூதம்

கிளம்புமே! மனிதன் எப்பொழுதும் பொறுமைசாலி யல்ல; அவனுக்கும் உக்கிரம் பிறந்துவிடும்; பழிதீர்த்துக் கொள்வான். மேலும் நம் நாட்டினர் ஸாத்விகத்தை விரும்புவோர். கொடுஞ் செயலாளர்களை மதிப்பவரல்ல. ஆகவே, இந்த அறிவிலிகளை ஸமயம் பார்த்துக் காலைவாரி இழுத்து விடுவார்கள். கொலை பாதகர்கள் தமக்கே நாசத்தைத் தேடிக்கொள்வார்கள், நிச்சயமாக.

இந்தக் காலத்தில், இளைஞர் இயக்கத்தைக் குறித்து வெளியாகும் நூல்கள் வறட்டு மேல்வாரியான விஷயங்களையே கொண்டுள்ளன. வழிகாட்டியாக எதுவுமே இல்லை. இதன் பலன், இள வர்க்கத்தவரிடையே விஷமமே அதிகமாகப் பரவுகிறது. பொருளற்ற விவாத புத்தியையும் ஒழுங்கின்மையையுமே மேற்கண்ட நூல்கள் போதிக்கின்றன. குற்றம், கோளாறு இவற்றைச் சுட்டுகின்றனவே ஒழியக் கடைப்பிடிக்கும் வழி என்னவென்பதை அவை உபதேசிக்கவில்லை. எந்த லக்ஷ்யத்தைக் கொள்வது, யாரைப் பின்பற்றுவது என்ற கேள்விக்குப் பதில் சொல்லாமல் இருக்கின்றன. இந்த விஷயத்தை ஒட்டி, 'தாதா கம்பெனி'யின் பெயர் அதிகமாக அடிபடுகிறது. இதற்கும் எனக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. எந்தக் காலத்திலும் இராதென்றே நம்புகிறேன். ஆனால் இந்தக் கம்பெனியில் ஒரு ஸமயம் அங்கத்தினர்களாக இருந்தவர்கள் இதை இப்பொழுது ஏளனப் படுத்துவதன் காரணந்தான் எனக்கு விளங்கவில்லை. தம் சொந்தக் கார்பார் திவாலாகி விட்டதனாலா அல்லது தாம் எந்தக் காரியத்திற்கும் உதவாத தாத்தாக்களாக மாறினதாலா இந்தமாதிரி பொருமுகிறார்கள், பாவம்? இதற்கு யார் என்ன செய்வது? இதற்கெல்லாம் யார் ஜவாப்தாரி?

இன்று வங்க அரசியல் அரங்கில் கக்ஷிப்பூசல் பயங்கர உருவம் எடுத்துள்ளது. இதற்காக உள்ளூற வருந்தாதவர், கவலை கொள்ளாதவர் வங்காளத்தில் ஒருவருமே

இல்லை. அங்ஙனம் யாராவது இருந்தால் அவர்கள் மனித இனத்தைச் சேர்ந்தவர்களல்ல. ஆனால் இடி விழுந்து போவதற்கு இதில் காரணம் இருப்பதாக எனக் குப் படவில்லை. என்னுடைய எட்டு ஒன்பது வருஷ அனுபவத்தில் இந்தமாதிரி கக்ஷிப்போர் மூன்று தடவை வங்காளத்தின் அரசியல் வாழ்வைச் சேற்றுக் குழியில் கொண்டுவிட்டிருக்கிறது. இதன் முதல் அதிர்ச்சியை ஏற்றுக்கொண்டவர் சித்தரஞ்ஜன் தாஸ். நாங்கள் அப் பொழுது அவருக்குப் பக்கத்திலும் பின்னாலும் நின்றத னால் எங்களையும் சற்று உலுக்கியது, அந்தத் தாக்குதல். தேசபந்துவின் சத்துருக்கள் என்ன சரடு விட்டுக்கொண்டு திரிந்தார்கள் தெரியுமா? மாதம் ஐம்பதினாயிரம் ரூபாய் வருமானமுள்ள தம் பாரிஸ்டர் தொழிலைத் துறந்தவர் ஐயாயிரம் ரூபாய்க்கு ஆசைப்பட்டு மந்திரிப் பதவி ஏற்க அலையாய் அலைகிறாரென்றுதான்! அவரை வங்கத்தை விட்டே வெருட்டிவிடப் போவதாகவும் வதந்திகள் உலா வின. ஆம்; கடைசியில் சித்தரஞ்ஜனரை வெருட்டியே அடித்தார்கள்! தேசவாசிகளென்று சொல்லிக்கொள்ளும் இந்தச் சத்துருக்களுடன் மல்லுக்கு நின்று நின்று அவர் அகால மரணத்திற்கு ஆளானார்; உலகத்தை விட்டே அவரை அனுப்பி விட்டார்கள்!

இரண்டாவது அடி உண்டவர் ஸ்ரீயுத ஸேன்குப்தர் போன்ற தலைவர்கள். அச்சமயம் நாங்கள் தொலைவில் இருக்க நேர்ந்தது. சிறையின் மறைவில் இருந்தாலும், இதன் விளைவு என்ன ஆகுமென்று ஆவலுடன் எதிர் பார்த்தோம். விளைவென்ன? காங்கிரஸ் வெற்றி அடைந் தது. மூன்றாவது தாக்குதலை நாங்கள் நேரிடையாகவே இதோ தாங்கிக்கொள்கிறோமே. விளைவென்னவாகும்? இரண்டு தடவைகளில் என்ன நேர்ந்ததோ அதேதான். காங்கிரஸுக்கே ஜயம்; சந்தேகமே இல்லை. இது ஒரு முடிவிற்கு வருவதற்குள் பல அவதூறுகளுக்கு நாங்கள்

ஆளாக வேண்டியிருப்பதுதான் துயரைத் தருகிறது. எவ்வளவு கஷ்ட நிஷ்டுரங்களை நாங்கள் சகித்துக்கொள்ள வேண்டி வருகிறது! இந்த விரோதங்களின் மறைவில் மூன்றுவது ஆளின் கைவேலை இராது போனுல் இவ்வளவு துன்பங்களை அனுபவித்து இருக்கமாட்டோம்.

இன்னுமோர் அபவாதம்: 'இந்தக் காங்கிரஸ் இத்தனை நாட்கள் சண்டை சச்சரவைத் தவிர வேறு என்ன காரியத்தை ஸாதித்துவிட்டது?'—அரசியல் அறிவு படைத்தவர்கள் இந்தக் கேள்வியைக் கிளப்பவில்லை. ஆஸ்பத்திரி கட்டுவது, ஸேவாச்ரமங்கள் ஏற்படுத்துவது, பஞ்ச நிவாரணத்திற்காக உழைப்பது இவை தாம் தேசத் தொண்டாகு மென்பவர்களே இந்தக் கேள்வியைக் கிளப்புபவர். ஆஸ்பத்திரிக்காக அவர்கள் வேண்டுமானுல் ஒரு லக்ஷங்கூடச் செலவு பண்ணுவார்கள். சுதந்திரப் போருக்காக ஒரு காலணு தாராளமாய், மனமாரக் கொடுக்க மாட்டார்கள். 'பலான ஆஸ்பத்திரியில் அத்தனை படுக்கைகளுக்கு ஏற்பாடு செய்தோம். உங்கள் காங்கிரஸ் என்ன கிழித்துவிட்டது?' என்பார்கள். ஆனுல் இந்த ஈயாப் பத்தர்களுக்கு யார் எடுத்துரைப்பது? எல்லா ரோகத்திற்கும் மூலகாரணமான அடிமை ரோகத்தைப் போக்கும் பெரும் சேவையைத் தலைமேல் போட்டுக்கொண்டு காங்கிரஸ் வேலை செய்கிறது. இந்த வியாதி தீராது போனுல் நீங்கள் எவ்வளவு சிகித்ஸை செய்தாலும் என்ன? நம் வறுமை, துர்த்தசைக்கெல்லாம் ஒரே காரணம் பராதீனம். பிறன் தயையை நாடும் அடிமைகள் நாம். இதைத்தானே முன்னுல் ஒழிக்கவேண்டும்! நமக்குள்ள சக்தி, முயற்சி, பொருள் யாவும் இந்த இனிய சுதந்திரத்தைப் பெறுவதற்காகவே நாம் செலவு செய்ய வேண்டும். நாம் எவ்வளவு தூரம் இந்த முயற்சியில் முன்னேறி

யுள்ளோமென்று அளவிட்டுச் சொல்வது இயலாத கரியம். ஓர் ஆஸ்பத்திரி அடைந்திருக்கும் அபிவிருத்தியையோ ஒரு கலாசாலையின் வளர்ச்சியையோ சுலபமாகச் சொல்லிவிடமுடியும். இந்த விந்தையான ஆத்மாக்கள் என்ன நினைக்கிருர்கள்? 'இந்த ஸ்வராஜ்யப் பயல்கள் பணத்தை வீண் செலவு செய்கிருர்கள். தண்டவேலைகளில் பொழுதைப் போக்குகிருர்கள்' என்றுதான். மக்களிடையே ஆதர்சத்தைப் புகுத்தாது போனுல் அரசியல் உணர்ச்சி தலைதூக்காது. அரசியல் உணர்வு எழுந்தால்தான் இந்தப் பெரும் போராட்டத்தின் உண்மைப் பொருள் எவருக்கும் விளங்கும். அதனுல் என்ன பயன் வரும் என்பதை அவர்கள் அறியாத வரைக்கும் இந்தச் சுயராஜ்ய இயக்கத்திற்குப் பொருளையோ, உதவியையோ தாராளமாக வழங்கமாட்டார்கள். எல்லாவற்றையும் பணயமாக வைத்தால்தான் தேசம் விடுதலை பெறும்.

அதனுலேயே நம் ஜாதியாருக்கு அரசியல் மனப்பான்மை துளியேனும் இல்லை என்று அடிக்கடி படுகிறது எனக்கு. இந்தப் புத்தியை, மனேபாவத்தை உண்டாக்குவதே காங்கிரஸின் நோக்கங்களில் ஒன்ருகும். மக்களிடத்தில் நுட்ப அறிவும், ஆராயும் ஆற்றலும் இராது போனுல் அவர்கள் வெறுங் கானல் நீரைச் சுதந்திரமென்று எண்ணி ஏமாற்றமடைவார்கள். இந்த அறிவு எப்படி வரும்? ஒரே உபாயம்: மக்களின் உள்ளத்தில் ஆதர்சம் ஆழப் பதியவேண்டும். இதற்காக மக்களின் ஜீவநாடியை அசைத்துப் பார்க்க வேண்டும். தம்மை வெளிப்படுத்திக் கொள்ளும் நசையைக் கிளப்பவேண்டும். சுதந்திர தாகம் மூண்டு வாழ்வைத் துச்சமென்று எண்ணி ஸாதனை புரியவேண்டும். என்று மக்கள் நெக்குருகத் தவம் புரிவார்களோ அன்றே சுதந்திரம் உதயமாவதைக் காண்பார்கள்.

என் நண்பர் ஒருவர் அன்று என்னைக் கேட்டார்: ‘இந்த இரண்டு வருஷங்களாக நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்?’ - இதற்கு விடை பகரவேண்டுமானால் இதற்கு முன்னால் மற்றப் பிரதேசங்களில் நடந்தேறிய காரியங்களோடு இதை ஒப்புநோக்கவேண்டும். இந்த இரண்டு வருஷகாலம் பிற மாகாணங்களில் என்ன நடந்ததோ, என்ன நடக்கவில்லையோ, ஒன்றுமட்டும் நிச்சயம்; அரசியல் போராட்டமென்றால் எதைக் குறிக்குமோ அது வங்காளத்திலும் பாஞ்சாலத்திலுமே நடந்தது. அப்படி அந்த இயக்கம் ஜோராக நடந்திராது போனால் இன்று ஒவ்வொரு வங்காளியைப் பார்க்கும்பொழுதும் அதிகார வர்க்கத்தின் கண்கள் சிவப்பாவானேன்?

இந்த இரண்டு ஆண்டுகளாக நாங்கள் இயற்றிய காரியம் எங்களுக்குப் பெருமையே தருகிறது. எவ்வளவு தூரம் காங்கிரஸின் அடியை ஒற்றிச் சென்றோமென்பதை ஆராய்ந்தால், கூடியமட்டும் அதன் லக்ஷ்யத்திலிருந்து நழுவாமல் எங்கள் கடமையைச் செய்திருப்பது புலனாகும். 1927-ஆம் வருஷம் வங்காளக் காங்கிரஸ் கமிட்டியின் நிலை, கலைந்து போகும் சந்தைக் கூட்டம்போலவே இருந்தது. இந்தியா வெங்கும் அச்சமயம் ஒத்துழையாமையின் பெருக்கு எடுத்தோடியது. அதற்குமேல் வங்கத்தில் மூண்ட பயங்கரமான கக்ஷிச் சண்டையினால் காங்கிரஸ் கமிட்டி வலிமை குன்றியிருந்தது. தேசத்தின் தேர்ந்த உழைப்பாளிகள் யாவரும் சிறையினுள் கிடந்தார்கள் இந்தத் துர்ப்பாக்கியத்தின் நடுவே நின்று மெல்ல மெல்ல மீண்டும் உத்ஸாஹமும் சக்தியும் பெற முயன்றோம்.

இன்று இரண்டு யுகங்களின் சந்திப்புக்கிடையே வந்திருக்கிறோம். இந்த நிலையில் காங்கிரஸின் பொறுப்பை ஒருவன் ஏற்றுக்கொள்ள வேண்டுமானால், ஒருபுறம் அதை மராமத்துச் செய்து நிறைவான ஒரு நடைமுறையை

அனுசரித்துக் காரியங்களைச் செய்யத் தூண்டவேண்டும்; கூடவே, பிற்காலத்தை நினைவில் கொண்டு பின்னால் வர இருக்கும் ஒரு பெரும் போருக்குத் தேசத்தை இப்பொழுதே சித்தமாக்கவேண்டும். 1921-ஆம் வருஷத்திலிருந்து இதுவரை நாம் வகுத்த திட்டத்தின்படி வேலை செய்தது போதாது. இந்தச் சில காலமாக நாம் மக்களிடையே சுதந்திரப் பற்றை மூட்டுவதற்குச் செய்த முயற்சிகளும் போதா. இப்போது வேண்டியது புதிய திட்டமே. ஆனால், இதை வகுப்பதன்முன் இதன்படி ஒழுகும் புது ஆளைத் தேட வேண்டுமல்லவா? இப்பொழுதுள்ள காங்கிரஸில் நீங்கள் புதிய திட்டத்தை ஸமர்ப்பியுங்கள். அதை யாரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். கொண்டாலும் காரியத்திற்கு உதவாதபடி செய்வார்கள். அதாவது உள்ளூற அங்கீகாரம் செய்ய மாட்டார்கள். நம்மிடையே 'ப்ரோக்ராம், ப்ரோக்ராம்' என்று கூச்சலிடுவோர் சிலர் இருக்கிறார்கள். அவர்கள் புகுந்து பார்ப்பதில்லை. புதிய மனிதனை இதற்கெனத் தயார் படுத்தினால்தானே இந்தத் திட்டத்திற்குள்ள மதிப்பு வெளிப்படும்? அது யாருக்குத் தெரியப்போகிறது? 1927-ஆம் ஆண்டு தொடங்கி இந்தக் கேள்வியே என் மனத்தை அசைத்துக் கொண்டிருக்கிறது. புதிய திட்டம் ஒன்று நமக்கும் உண்டு. ஆனால், அந்தத் திட்டத்தை வெளியிடும் நாள் இன்னும் வரவில்லை. என்று வருமோ அன்று புதிய மனிதனும் தோன்றுவான். அதை உணர்ந்து அதன்படி வேலை செய்யும் உண்மை ஊழியன் வருவான். இச்சமயம் நான் அத்தகைய ஆட்களைத் தேடும் முயற்சியைத்தான் கைக்கொண்டுள்ளேன். ஆகவே இந்த இரண்டு வருஷங்களாக மாணவர் இயக்கம், இளைஞர் இயக்கம், பெண்கள் இயக்கம் போன்ற எழுச்சிகளுக்கு வழிகோலி வருகிறேன். இந்த இயக்கங்களின் மூலம் புது மனிதர்கள் - ஆண்களும் பெண்களும் - சித்த

மாவார்கள். அவர்களிடம் புதிய திட்டத்தை ஒப்படைத்தால் நிச்சயம் எதிர்பார்த்ததற்குமேல் அது பலன் தரும்.

இந்த மாதிரி இயக்கங்களுக்குப் பிராண சக்தியைப் புகுத்த வேண்டுமானால் ஒரு புது ஆதர்சத்தை முன்னால் நிறுத்துவது முக்கியம். என் ஆதர்சம், தேசம், ஸமூகம் இவற்றின் பூர்ண விடுதலையே. இந்த முக்தி மந்திரம் ஊர் ஊராக, நகரந்தோறும் வீட்டுக்கு வீடு பரவவேண்டும். சுதந்திரத்தின் உண்மை ரூபத்தை எல்லோருக்கும் காட்டவேண்டும். இந்த ஸ்வாதீனத்தின் பிளவுபடாத உருவை நம்மில் பெரும்பான்மையோர் இன்னும் அறிந்து கொள்ளாமல் இருக்கிறார்கள். அகண்ட ரூபமான இந்த உணர்வு மக்களின் மனக்கண்முன் திடீரென ஒருநாள் தோன்றும் காட்சி அன்று. தவத்தின்மூலமும், கடினமான ஸாதனை வழியாகவும் துண்டு துண்டாக நுகர்ந்தபின்பே நிறைவான எழிலைக் காண்போம். என்று இந்த அவா அடக்கமுடியாமல் துள்ளுமோ அன்றே சுதந்திரப் பித்தர்களாவோம்.

பூர்ண சமத்துவக் கொள்கைமீதே புதிய ஸமூகத்தை எழுப்பவேண்டும். வகுப்பு வேற்றுமை, ஜாதிபேதமென்னும் நெடிய மதில்களைத் தகர்த்துப் பொடி சூர்ணமாக்குங்கள். பெண்மைக்கு மரியாதை செய்யுங்கள். நாரியரைச் சரிக்கொத்த தோழர்களாகப் பாவியுங்கள். ஸமூகத்திலும் ஆட்சிமுறையிலும் எல்லாத் துறையிலும் சம உரிமை வழங்குங்கள். பொருளாதாரத்தில் ஏற்றத்தாழ்வையே ஒழித்துவிடவேண்டும். நிறம், சமயம் இந்தப் பேதங்களைப் பாராமல் எல்லா மக்களுக்கும் கல்வியும் முன்னுக்குவரச் சௌகரியங்களும் அளிக்கவேண்டும். ஸோஷலிஸத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு நிறைவான, சுதந்திரமுள்ள ஆட்சி, பலமான அஸ்திவாரத்தின் மீது நிற்பதற்கான முயற்சிகள் செய்யவேண்டும்.

இதைப் போன்ற புதுமை பாரதத்தில் பிறந்தவர்கள், உலக சுதந்திர மக்கள் கூடும் சபையில் கௌரவமான இடத்தைப் பெறுவார்கள். இந்தியா மீண்டும், விஞ்ஞானம், தத்துவம், கலை, வீர்யம் இத்தகைய ஒப்பற்ற பண்புகளுடன் பேரரசுகள் முடிவணங்கும் நாடாக விளங்கும்.

நம் கடமை என்னவென்பதை இன்னும் எப்படித் தெளிவாகக் கூறுவது? நாமல்லவோ புது பாரதத்தின் சிருஷ்டிகர்த்தர்கள். ஆகவே, ஒன்று சேர்ந்து இந்தப் புனிதமான அன்னையின் வேள்வியில் ஈடுபடுவோம். நம் அன்னை மீண்டும் ராஜராஜேசுவரியாக அரியாசனத்தில் அமருவாள். இன்று நாம் காணும் அந்தப் பிச்சைக்காரி, மறுபடியும் பத்துத் திசையும் பரந்த தோளுடன், மங்களங்கள் பொருந்திய திவ்விய மூர்த்தியாக நம் கண்களைக் குளிர்விப்பாள்; நம் வாழ்வு பயனுறும். வாரீர், என் சகோதர மணிகளே! கணமேனும் தயங்காமல், அனைத்தும் தாயின் சேவடிக்கீழ் அர்ப்பணம் செய்வீர்.*



* 1927-ஆம் ஸ்ரீ டிஸம்பர்மீ 29உ மேதினீபுர யுவ ஸம்மேளனத்தில் பேசியது.

"எல்லோருடைய ஒத்துழைப்பினலுந்தான் பாரத தேசத்தில் புதிய ஜாதீயத்தை நிறுவமுடியும். மேல்நாட்டு ஆசாரம் நம் ஸமூகத்துள் குறுக்கும் நெடுக்குமாகப் புகுந்து நம் கலே, செல்வம் அனைத்தையும் பாழாக்கி அழித்துவிடப் பார்க்கிறது. வாணிபம், தர்மம், சிற்பம், பொருளாதாரம் யாவும் மங்கிப் போகின்றன. ஆதலால் வாழ்க்கையின் ஒவ்வோர் உறுப்பிலும் புதுப் பொலிவைத் தரும் ஸஞ்ஜீவியைப் புகட்டவேண்டும். இந்த அம்ருத கலசத்தைக் கொண்டு வரக்கூடிய பகீரதர்கள் எங்கே?"

என் தம்பிமார்களே, தங்கைமாரே! இளைஞர் கூட்டிய இந்தப் பரிஷத்திற்கு என்னைத் தலைவனாகத் தேர்ந்தெடுத்து எனக்குக் காட்டிய பேரன்பிற்குப் பிரதியாக என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று மண்ணகத்தின் மூலைக்கு மூலை இளையோர் விழித்துக் கொண்டதன் கோஷம் கேட்கிறது. உலகம் பரவிய இந்த எழுச்சியின் வசத்தால் நாங்களும் இன்று உங்களுடன் சேர்ந்தே வாழ்வின் பெரிய சிக்கல்களை விடுக்க முயல்வோம்.

ஏறக்குறைய இரண்டரை வருஷங்கள் சிறைக் கூடத்தின் வெறித்த சுவரை நோக்கிய பிறகு இன்று வெளியுலகத்தில் காலை வைத்தபோது நான் காண்பதென்ன? எவ்வளவோ இடும்பைகள் குறுக்கிட்டதனாலும் துரதிர்ஷ்டவசத்தினாலும் பெரிய விஷயங்களைக் குறித்துச் சிந்திக்கும் திறமையையும் தொலைவில் தென்படும் உண்மைகளை முன் கூட்டியே காணும் ஆற்றலையும் இழந்துவிட்டோம். இதன் பயனாக நம் ஸமுதாயத்தில் இழிவுப்பான்மையும் தன்னலமும், குட்டிக் கலங்க

களுமே மலிந்துவிட்டன. அஸத்யத்தை ஸத்யமாகப் பாவித்து, நிச்சயத்தை விட்டு நிழலின் பின்னல் திரி கிறோம். ஆனல், ஒரு நல்ல செய்தி. இந்த மோகம் வர வர விலகிக்கொண்டே வருகிறது. நமக்குச் சொந்தப் பார்வை திரும்பி வருகிறது. இளையோன் உள்ளத்தில் ஆத்ம ஒளி மீண்டும் தோன்றியுள்ளது. தன்மீது ஒரு பெரும் பொறுப்பு விழுந்திருப்பதை அவன் உணர்ந்து வருகிறன். பிற்காலம் அவனலேயே சிறப்படைய வேண்டியிருப்பதும் அவனுக்குத் தெரியும். அது மாத் திரமா? இளஞ்சமுதாயம், தனக்குள்ளேயே அமோக சக்தி யின் ஊற்று இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து விட்டது. எக்காலத்திலும், எந்த நாட்டிலும் நமனையும் எள்ளும் இளையவரது வன்மையே விடுதலையின் சரித் திரத்தை வரைகிறது. இன்று நம் தேசத்திலும் இந்தத் தருணர்களின் சக்தியே தன் என்புதோல் உடலினையும் கொடுத்து வஜ்ரக் கோட்டையை நிர்மாணம் செய்யும் ஸாதனமார்க்கத்தில் செல்கிறது!

நம் நாட்டைக் குழப்பும் ஸமஸ்யைகளைப்பற்றி எவ்வளவோ சொல்லிக்கொண்டு போகலாம். ஒரு நாள் பேச்சில் இதை விளக்குவது எளிதல்ல. அதற்கு நான் முயலவும் இல்லை. விரிவான விஷயத்தில் தலையிடாமல், ஸாராம்சமாக மேற்படி ஸமஸ்யைகளைக் குறித்துச் சற்றுக் கூறியதும் அடங்கிவிடுகிறேன்.

உலக சரித்திரத்திலே எத்தனையோ நாகரிக ஸமு தாயங்கள் தோன்றிப் பெருகிப் மறைந்துள்ளன. ஒரு சமயம் நாமும் சுதந்திரத்துடன் வாழ்ந்திருந்தோம். தருமம், இலக்கியம், வாணிபம், சிற்பம், ராஜதந்திரம், யுத்தமுறை எல்லாவற்றிலும் நம் இஷ்டப்படியே சென் ருேம். கால சக்கரத்தின் சுழற்சியினல் நாம் பழைய கௌரவத்தை இன்று இழந்து அடிமைகளாக உழல்

கின்றோம். பிறர் ஆட்சிக்கு அடங்கிக் கிடப்பவர்கள் மட்டும் அல்ல நாம். விதேசிகள் எய்யும் மோஹனாஸ்திரத்தால் கட்டுண்டு நம் ஜீவ உணர்ச்சியையும் தருமத்தையுங் கூட இழந்து நிற்கின்றோம். ஒரு சந்தோஷம்: இந்த அஞ்ஞான இருள் - இந்த மயக்கம் - தெளிந்துகொண்டு வருகிறது. தேசீயத்தின் உணர்வு மெல்ல உதயமாகிறது.

ஒருதரம் வீழ்ச்சி அடைந்த பின்னர் எந்த ஸமூகமும் மறுபடியும் தலை தூக்குமென்று சொல்வதற்கில்லை. இறைவனது திருவருளால் மீண்டும் நம் நாடு மறுபிறப் பெடுக்கிறது. இந்தத் தேசீய எழுச்சி வெறும் வெளியில் தோன்றும் துடிப்பு மட்டுமன்று. இது நம் தேசத்தின் அந்தராத்மாவே விழித்தெழுவதன் ஸூசகம். நான் கூறுவது உண்மை. அத்தாட்சி: இந்தப் புத்தெழுச்சி இடையே வாழ்வின் வெவ்வேறு துறையிலும் புதுப் புது சிருஷ்டிகள் ஆரம்பித்துவிட்டன. படைப்புத் தொழிலே தேசத்தின் ஜீவசக்தி மழுங்கவில்லை என்பதற்கு அறிகுறி. உலக நிகழ்ச்சியில் புதியதோர் படலத்தைத் திறக்கும் நாள் நம் கண்முன் தெரிகிறது. விஞ்ஞானிகளின் கூற்று இது: ஒரு நாகரிக ஸமுதாயம் அழிந்துபோனால் அதன் படைப்பாற்றலும் நசித்துவிடுகிறதாம். அதன் சிந்தனைச் சக்தியும் செயலும் பழைய தூர்ந்த வழியிலேயே செல்லுமாம். அந்த ஜாதியார் உள்ளத்திலிருந்து ஸாஹஸம் போன்ற உயர்ந்த பண்புகள் அறவே மறைந் தொழிகின்றன. மென்றதையே மெல்லுவது போல, உளுத்துப்போன பழங் கொள்கைகளைப் புரட்டிப் புரட்டி ஒளி இழந்துபோகும் இந்த நிலையில் மாறுதல் தோன்றுவதற்கு ஒரு நாட்டின் சித்த உலகை அடியோடு சீர்திருத்த வேண்டும். ஜீவ உலகில் ரத்தக் கலப்பு மிக அவசியம். நான் விஞ்ஞானி அல்ல. இதற்குச் சித்தாந்தமாக ஒரு சமாதானமும் கூற என்னால் ஆகாது. புதிய ஸமுதாயத்தைப்

படைப்பதற்குக் கொஞ்சம் ரத்தக்கலப்பு அவசியமே. அன்னிய நாட்டாருடன் ரத்த ஸம்பந்தம் வைத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லவில்லை. இந்தமாதிரி ரத்தக்கலப்பு கட்டுக்கு மீறிச் சென்றால் அதனால் நாட்டிற்குத் தீமையே விளையுமென்ற பயம் எனக்கும் உண்டு. இதற்குச் சான்று பர்மா தேசம். ஆனால் பாரத நாட்டில் பல வர்ணத்தாரான ஹிந்துக்களுக்குள் ரத்தக் கலப்பு ஏற்பட்டால் அதன் விளைவு நன்மையாகவே இருக்கும்.

நம் தேசம் கீழ்நிலைக்கு வந்ததன் காரணங்கள் பல. அவற்றுள் முக்கியமானது, நம்மவரிடையே முற்போக்கு உணர்வு குறைந்திருப்பதே. ஒருவர் நம்மைத் தட்டி எழுப்பினால்தான், முதுகில் கசை அடி விழுந்தால்தான் கண் திறக்கிறது. இன்றைய நிலையைப் பொருட்படுத்தாமல் பிற்காலத்தைக் குறிக்கோளாகக் கொண்டு, எவ்வளவோ வேலை செய்யவேண்டியிருக்கிறது. இன்று நம் கண்ணெதிரே நிலவும் நல்குரவினால் இடிவிழுந்து போகாமல் ஆதர்சம் காட்டும் வெளிச்சத்தில் இன்முகமாகவே வாழ்வை அர்ப்பணம் செய்யவேண்டும். ஆனால் செயலுக்குக் கொண்டுவரும்போது இதை நாம் ஒப்புக் கொள்ளாமல் பின்னடைகிறோம். ஊக்கம் இராத குறையினால் நம்முடைய இச்சாசக்தியும் ஜாதீய உணர்ச்சியும் வரவரக் குன்றியும் மழுங்கியும் வருகின்றன. இந்த இச்சா சக்தியைத் திரும்பவும் எழுப்பாது போனால் அரிய செயல்கள் எவையும் இயற்ற நம்மால் ஆகாது போகும். ஆதர்சம் ஒன்றே இத்தகைய இச்சாசக்தியைக் கிளப்பவல்லது. நாம் எம்மாத்திரமென்ற இழிவு மனப்பான்மையை அறவே அகற்றி, சொந்த வாழ்வை ஆதர்சத்தின் வழியே நிறுத்துவோமானால், நம்முள் உறங்கும் முற்போக்குச் சக்திகள் தாமாகவே பொங்கிடும். இந்த

ஊக்க வலிமையே சித்தசக்திக்கும், கிரியாசக்திக்கும் புது உரமேத் தரும்.

ஸமூகத்தை மீண்டும் கலகலக்காமல் நிலைநாட்டுவதற்காக மேலை நாடுகளில் பலமாதிரியான கொள்கைகளும் காரியமுறைகளும் பயன்படுகின்றன: 'ஸோஷலிஸம்,' 'ஸ்டேட் ஸோஷலிஸம்,' 'கில்ட் ஸோஷலிஸம்,' 'ஸிண்டிகாலிஸம்' 'பிலஸாபிகல் ஆனர்க்கிஸம்,' 'போல்ஷிவிஸம்,' 'பாஸிஸம்,' 'பார்லிமெண்டரி டெமாக்ரஸி', 'அரிஸ்டாக்ரஸி', 'அப்ஸல்யூட் மானர்க்கி', 'லிமிடெட் மானர்க்கி', 'டிக்டேட்டர்ஷிப்', என்றெல்லாம். இந்தக் கொள்கைகளைப்பற்றித் தெளிவாக நான் இரண்டொரு வார்த்தை கூற விரும்புகிறேன். முதலாவது, எல்லாக் கொள்கையின் அடிப்படையிலும் சில உண்மைகள் இராமல் போகவில்லை; ஆனுல் மாறிக்கொண்டே போகும் இந்த உலகில், எந்த ஒரு கொள்கையையும் முடிவான சிந்தாந்தமாக எடுத்துக்கொள்வது மதியீனமாகும். இரண்டாவது, ஒரு தேசத்தின் ஸ்தாபனத்தை வேரோடு களைந்து அதை மற்ருெரு தேசத்தில் வீம்புக்காக நட்டு வளர்ப்பதால் நல்ல பலன் கிடைக்குமென்ற உறுதி இல்லை. இதைக் கவனிக்கவேண்டும் யாவரும். ஒவ்வொரு நாட்டின் ஸ்தாபனமும் அதனதன் சரித்திரப்போக்கு, பாவம், ஆதர்சம் இவற்றுடன் ஒழுகியே வந்திருக்கிறது. ஆகவே, ஒரு ஸ்தாபனத்தை இயக்கும் சமயம், சரித்திர உண்மைகளையும் சூழ்நிலையையும் நாம் மறக்கக்கூடாது.

'மார்க்ஸிஸ'த்தின் அலை இந்தத் தேசத்தினுள்ளும் புகுந்துவிட்டது. இந்த அலையின் தாக்குதலால் சிலர் பரபரப்படைந்திருக்கிருர்கள். 'கார்ல் மார்க்ஸின்' தத்துவத்தை அப்படியே உட்கொண்டால் நம் நாடு பொன்கொழிக்கும் ஸம்ருத்தி அடையுமென்று நம்புவோர், அத்தாட்சியாக ருஷியாவை நமக்குச் சுட்டிக்காட்டு

கிறார்கள். ஆனால் ருஷ்யாவில் பரவியுள்ள 'பால்ஷிவிக்' கொள்கைக்கும் உண்மையான மார்க்ஸின் ஸோஷலிஸத்திற்கும் ஒற்றுமை எவ்வளவோ வேற்றுமை அதற்குக் குறைவு இல்லை. ருஷ்யா மார்க்ஸின் கொள்கையை எடுத்தாளும்போது தன் புராதன சரித்திரத்தின் போக்கையோ ஜாதீயத்தின் லக்ஷ்யத்தையோ, தன் வாழ்விற்குரிய அவசியத்தையோ மறந்துவிடவில்லை. இன்று கார்ல் மார்க்ஸ் மட்டும் உயிருடன் இருப்பாரானால் ருஷ்யாவின் தற்போதைய நிலையைக் கண்டு மகிழ்ச்சியடைவாரென்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை. கார்ல் மார்க்ஸின் உறுதி என்ன? தாம் காட்டும் ஆதர்சம் ஒரேவிதமாக, மாறுதல் எதுவுமின்றி எல்லா நாடுகளிலும் பரவவேண்டுமென்ற ஆசை உடையவர். இதை நான் சொல்ல வந்ததன் உத்தேசமாவது: இங்கே நான் அதை அறுத்துப் பேசிவிடுகிறேன். பிறநாட்டிற்குரிய ஆதர்சத்தையோ, ஸ்தாபனத்தையோ கண்மூடித்தனமாகப் பின்பற்றும் ரீதிக்கு நான் எப்பொழுதும் எதிரி.

இன்னொரு விஷயத்தைச் சொல்லாமல் நிறுத்தினால் முக்கியமான உண்மையை மறைத்ததாகும். பிறர் ஆதீனத்தின்கீழ் உழலும் நாடு ஆந்தரிகமாக ஏதாவது தத்துவத்தைக் கொள்ளவேண்டுமானால், ஜாதீயம்போல் உயர்ந்ததொன்றில்லை. நமக்கு ஸ்வாதீனமும் அதிகாரமும் இராதவரை சமூகத்தையோ பொருளாதாரத்தையோ சீர்திருத்தச் சந்தர்ப்பம் வாய்க்காது; இது வெள்ளிடைமலை.

இதற்காக நாம் முதலில் ஒன்று சேர்ந்தே சுதந்திரம் பெற முயல்வோம். தேசம் ஒரு தனிப்பட்ட ஆளுக்கோ சாராருக்கோ சொந்தமன்று; எல்லாருடையதுந்தான். ஹிந்து முஸ்லீம், பாட்டாளி பணக்காரன் எல்லாரும் வித்தியாசங்களை மறந்து ஒன்றுகூடிப் போராடினால்தான் ஸ்வராஜ்யம் கிட்டும். இதற்காகத் தம் உரிமையை எவரும் இழக்க வேண்டுமென்பது அர்த்தமில்லை. நாம் எல்லா

ஸம்பிரதாயத்தின் உரிமைகளையும் கூடவே அங்கீகாரம் செய்யவேண்டும். காரணம்: ஸத்யம், நியாயம் இவற்றின் மேல் எழும்பாத ஜாதீயம் ஒருநாளும் நிலைத்திராது. இதற்காகத் தொழிலாளர் சங்கங்கள், கிஷான் சபைகள் எல்லாம் ஸ்வராஜ்ய சித்திக்கு அவசியமற்றவை என்று நான் நினைப்பவன் அல்ல. இதோ முழுமனத்துடன் உரக்கச் சொல்லி ஒப்புக்கொள்கிறேன்: அந்தமாதிரி சங்கங்களைப் புறக்கணித்துவிட்டுச் சுதந்திரமடையலா மென்றால் அது நிராசையாகத்தான் முடியும். நாட்டிற்கு மூச்சுப் போன்ற இவர்கள் ஒன்று சேராத வரைக்கும் ஸ்வராஜ்யப் போராகட்டும், சமூக எழுச்சியாகட்டும், பொருளாதாரப் புனருத்தாரணமாகட்டும் கைகூடுவ தற்கு வழி ஏது?

எல்லா நாடுகளிலும், முக்கியமாகத் துர்ப்பாக்கியம் பிடித்த நம் நாட்டிலும் கற்றறிந்த நடுத்தர வகுப்பினரே தேசத்தின் முதுகெலும்பு போன்றவர். அவர்கள் விடு தலைக்கு வழிகாட்டி முன்னேகும் தூதர்கள் மாத்திரமா? ஜனநாயக இயக்கத்தின் முன்னணியிலும் நிற்பவர்கள். பொது மக்களிடையே விழிப்பு ஏற்படாதவரை இவர் களே இந்த இயக்கத்தை நடத்தவேண்டும். புனருத் தாரண வேலைகளில் கற்றவர்களான இந்தச் சாராரே வழிகாட்டுவோராக வேலை செய்யவேண்டும். இந்தக் காரணங்களை உத்தேசித்தே, படித்த நடுத்தர வகுப்பி னருக்குள்ள பெருங்குறை சம்பந்தமாக இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விழைகிறேன்.

முதலாவது, உன்னத பாவனைகள் இவர்களிடையே பரவாத குறை. படித்தவர்களுக்கு ஆதர்சங்களின்மீது பற்று சிறிதேனும் இல்லை. இந்த வறுமைக்குக் காரண மென்ன? நமக்குக் கல்வியைப் புகட்டுவோர் கூடவே ஆதர்சத்தின் வித்தை நம் இதயத்துள் ஊன்றாமல் இருக்கிறார்கள்.

இந்த வறுமை, நாட்டில் மூண்டதற்குப் படிப்பாளி கள்மீதும் பல்கலைக் கழகத்தார் மேலுமே குற்றம் சாட்ட வேண்டும். இதோ கேட்கிறேன்: நம் கல்லூரிகளில் எங்கேதான் நிர்மலமான சுதந்திரத்தின் காற்றுப் புகுந்து விளையாடுகிறது? இங்கே அறிவை உட்கொள்ள வரு வோர் யார்தாம் விடுதலையின் ஆதர்சத்தில் நினைவுள்ள வர்? உங்களுக்கெல்லாம் தெரிந்திருக்கும்: பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றுண்டுகளில் மூண்ட புனித எழுச்சி வெள்ளம்போல் பிரெஞ்சு நாட்டையே அசைத்து விட்டது. அந்த மாபெரும் இயக்கத்தை நடத்தியவர்கள் யார்? அந்நாட்டின் வித்துவான்களே; ஆசிரியர்களே. நம் கலாசாலைகளை நோக்குங்கள், எவ்வளவு கேடான நிலை மைக்கு நம் ஜாதீயம் வந்திருக்கிறது! சப்பிட்டுப் போவ தில் பிரயோஜனமில்லை. ஆசிரியர்களும் உபாத்தியாயர் களும் தம் கடமையை ஆற்ருது போனுல் - தம் வாழ்க்கை லக்ஷ்யத்தைக் கொண்டும் போதனைகளாலும் மக்களை மனிதர்களாக்கத் தவறினுல் - மாணவர்களும் இளைஞரும் தம் சொந்த முயற்சியாலும், கடின ஸாதனைகளாலும் மனிதர்களாக உயரவேண்டும்.

புதிய பாவங்கள் இராத குறை ஒருபுறம் இருக் கட்டும். உணவிராத பெருங்குறை நம் கண்முன் வந்து நிற்கிறது. படித்தவர்களிடையே வேலை இல்லாத திண் டாட்டம் வரவரப் பெருத்துக்கொண்டே போகிறது. படித்தவர்களுடைய பண வருவாய், உழவாளர்களின் பொருளாதார நிலையைவிடப் படுமோசமாக இருக்கிறது. வேலை கிடைக்கும், தரித்திரம் ஒழியுமென்பதற்கு நம்பிக்கை இல்லையே! உத்தியோகங்களின் எண்ணிக்கை யைக் காட்டிலும் அவைகளுக்கு மனுப்போடும் படித்தவர் களின் சங்கியை பன்மடங்கில் உள்ளது. இன்னும் முப் பது அல்லது நாற்பது வருஷங்களுக்குள் படித்த இந்த நடுத்தர வகுப்பினர் உணவின்றி நசித்துவிடுவார்கள்.

இதைத் தடுக்கமுடியாது. ஆனால் இன்று முதல் நாம் உத்தியோக வேட்டையை ஒழித்து வாணிபத்திலோ கைத்தொழிலிலோ ஆற்றலைச் செலவு செய்தோமானால் நாம் மரித்தொழிந்தாலும் நம் சந்ததியாராவது பிழைக்க ஏது உண்டு. நம் மார்வாடி சகோதரர்கள் ஐம்பது ஆண்டுகளுக்குமுன், உடுக்கக் கந்தையும் உண்ணக் கஞ்சியும் இராமல், நம் நகரங்களில் வியாபாரம் செய்யவந்தவர்கள், இப்போது அவர்களைப் பார்த்து விரலைக் கடித்துக்கொள்ளுங்கள். நாமும் அதேமாதிரி, முழு ஆவேசத்துடன் வாணிபத் துறையில் இறங்கிச் சொந்த உழைப்பினாலும், ஒழுக்கத்தினாலும் பொறுமையினாலும் விந்தைகள் புரிய வேண்டும். 'நாந்யஃ பந்தா வித்யதே அயநாய' - வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை.

நான் தற்போது நடத்துவதற்கான காரிய பத்ததியைக் குறித்து விரிவாக எதுவும் சொல்லாமல் இரண்டொரு வார்த்தை சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். இரு பக்கமாக வேலையைத் தொடங்கவேண்டும். முதலில் புதுமையான பாவங்கள் நம்மிடையே புகவேண்டும். இரண்டாவதாக, நாட்டில் இப்போது தோன்றியுள்ள எல்லா இளைஞர் சங்கங்களையும் பின்னால் தோன்ற இருக்கும் இளைஞர் இயக்கங்களையும் ஒரே ஸூத்ரத்தில் இணைக்கவேண்டும்.

வெவ்வேறு துறைகளில் சிருஷ்டித் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களிடையே போக்குவரத்து உண்டாக்க இளம் அறிவாளிகளின் சமாஜம் ஒன்றை நிறுவுவது முக்கியம். கவிஞன், இலக்கியத்தில் ஈடுபடுவோன், சிற்பி, வணிகன், விஞ்ஞானி, மற்றும் பல வழியில் உழைப்பவர் இந்தச் சபையில் இருக்கவேண்டும். சுருங்கக்கூறின் நாட்டில் சிறந்த அறிவு படைத்தவர்களை ஒன்றாகப் பிணைக்க வேண்டும். இவர்களிடையே பரஸ்பரமான ஒத்துழைப்பும் கூட்டுறவும் ஏற்பட வேண்டும். ஒரே லக்ஷியப் பாதையை

முன்னால் வைத்து மனித வாழ்வில் விதவிதமான புதுமைகளைச் சிருஷ்டி செய்யும் பெரும் பணியிலேயே தம் ஆற்றலைச் செலுத்த வேண்டும். வலிமை மிக்கவராயும் ஆரோக்கியம் நிரம்பியவராயும் எதற்கும் தகுதி வாய்ந்தவராயும் தேச மக்களை ஆக்கும் ஒரு கல்யாண வைபவத்திற்கு இன்றே காவணக்கால் நாட்டுங்கள்.

இரண்டாவது, பலவழிகளில் வழிந்தோடாமல் யுவகர்களின் சக்தியைக் கட்டிப் காப்பதற்கும், ஒருவர் மீது ஒருவர் பகைத்துக்கொள்வதைத் தடுப்பதற்கும், ஒரே ஆதர்சத்தின் காலில் அவர்கள் முயற்சி அனைத்தும் நிற்பதற்கும் கேந்திரமான இடங்களில் சங்கங்களை ஏற்படுத்துவது அவசியம். இந்த நோக்கத்துடனேயே சில வருஷங்களுக்குமுன் வங்க யுவக ஸமிதி ஸ்தாபிக்கப்பட்டது. நானு காரணங்களால் அந்த ஸமிதியின் காரியங்கள் எதிர்பார்த்த அளவு பலனைத் தரவில்லை. ஆனால் அந்த நிகில வங்கீய யுவக ஸமிதியை மீண்டும் உயிர்ப்பிக்கும் காலம் வந்திருக்கிறது. வேறொரு சங்கத்தை நிறுவாமல் நீங்கள் அந்தப் பழைய ஸமிதியில் புகுந்து அதற்குப் பிராண பிரதிஷ்டை செய்வீராயின் அதிசீக்கிரத்தில் அமோக பலனைப் பெறுவீர். இது என் நம்பிக்கை.

முன்பே கூறியுள்ளேன். விரிவான காரிய பத்ததியைத் தயாரிக்க நான் முயலவில்லை. இப்பொழுது எந்த முறையில் வேலை செய்யவேண்டுமென்பதைக் குறித்துச் சில வார்த்தைகள்: நமது வறுமை மூன்றுவிதமானது. (1) உணவில்லாத குறை; (2) உடை இல்லாத குறை; (3) கல்வி இன்மை. இந்த வறுமைக்கெல்லாம் காரணம் நமக்கு இச்சா சக்தியும் ஊக்கவலிமையும் இல்லாததே; இந்த அபூர்வ சக்திகள் தலைதூக்காது போனால் எந்த ஸமஸ்யையும் ஒரு முடிவிற்கு வராது. நயவஞ்சக ஸர்க்காரோ, உள்நாட்டு அரசாங்கமோ மக்களுக்கு என்ன நன்மைகள் செய்ய வந்தாலும் நாம் மனிதர்

களாக முடியாது. அவர்கள் உதவுவதை நாம் அலக்ஷ்யம் செய்யவில்லை. எதற்கும் நம் ஐக்கியபலத்திலேயே மேற்கண்ட நல்குரவைப் போக்கிக்கொள்வது நலம். கூட்டுறவு முறையில் இந்தக் காரியத்தைச் செய்ய முடிந்தால் கட்டாயம் ஜாதீய உணர்ச்சி தானே கிளைத்தெழும்; ஸ்வராஜ்யம் எளிதல் கைகூடும்.

கிராமப் புனருத்தாரணத்தை யோசிக்குங்கால் ஒரு விஷயம் எனக்குப் புலனாகிறது: கிராமத்தவர்களை, தாமே ஒன்றாக இணைந்து பாடுபட்டு ஊண், உடை, உடல்நலம் யாவும் சம்பாதித்துக் கொள்ளும் வழியில் திருப்புவது நமது மற்றொரு லக்ஷ்யம். ஆரம்பத்தில் வெளியிலிருந்து கிராமவாசிகளுக்கு உதவி வரவேண்டி யிருக்கிறது. ஆனால் அவர்கள் தம் காலிலேயே நிற்க முயலாதிருந்தால் இந்தச் சீர்திருத்தங்கள் விழலுக்கு இரைத்த மாதிரி தான். பிறர் தயையை நோக்கியே கிராமத்தவர் வாழ்க்கையின் போக்கு படர்கிறது. தாமே வலிமையுடன் நிற்பதற்கு நீண்டநாள் அவர்கள் சளைக்காமல் உழைக்க வேண்டும்.

இந்தக் காலத்தில் வெள்ளத்தால் சேதமும் கொடிய பஞ்சத்தால் மரணமும் இல்லாத நாளே கிடையாது. இதற்குத் தக்க பரிகாரம் செய்யக் கூடியவரையில் சங்கங்களும் முதலாளிகளும் பாடுபடுகின்றனர். இவர்களுக்கு நாம் உத்ஸாஹம் ஊட்ட வேண்டியதுதான். ஆனால் கூடவே வெள்ளத்திற்கோ பஞ்சத்திற்கோ மூலகாரணம் எதுவென்று ஆராய்வதும் அவசியமல்லவா? சரியான முடிவிற்கு வருவோமென்ற உறுதி இல்லைதான். ஆனால் ஆராய்வதைத் தாமதமின்றித் தொடங்குவதில் என்ன தவறு? சிந்தனையாளனான ஒவ்வோர் இளைஞனையும், ஞானியையும் இந்த விஷயத்தில் சற்றுக் கவனம் செலுத்துமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

லோகாசாரம் (மக்கள் பழக்கம்), சமயாசாரம் என்ற பெயரில் உலவும் அநீதங்கள், அநாசாரங்கள் போன்ற விஷயங்களிலும் இளையோர் நிகா வைத்தல் நலமே. ஆசார்ய ப்ரபுல்ல சந்த்ர ராய், பலதடவை சொல்வதுண்டு: 'விவாக வயது வரும்பொழுது மட்டும் நம் பிள்ளைகள் திடீரெனப் பெற்றோர் வார்த்தைகளுக்குக் குறுக்குச் சொல்வதே இல்லை.' விவாக விஷயத்தில் மட்டுந்தானா? பல சமயங்களில் தமக்கு இசைவாக இருந்தால் தாய் தந்தையரின் சொற்படி நடப்பார்கள். மூத்தோர் சொல் வார்த்தையை ஏற்பவர்கள்போல் பல அநீதங்களைச் செய்ய இளைஞர் நடுங்குவதில்லை. இதை ஒப்புக்கொள்ளாமல் இருந்தால் நாம் ஸத்யவாதிகளல்ல. ஸமூகத்தைப் பாழாக்கும் அக்கிரமங்களை இளைஞர் கட்டுப்பாடாக விரைவில் தொலைக்க முன்வந்தால் நம் ஸமுதாயத்திற்கு நல்ல காலம் பிறந்து விட்டதெனலாம்.

தம்பிகளே, தங்கைகளே! முடித்துக் கொள்கிறேன் இத்துடன். நாம் எல்லோரும் சேர்ந்து ஒத்துழைத்தால் தான் பாரததேசத்தில் புதிய ஜாதீயத்தை நிறுத்த முடியும். மேல்நாட்டு ஆசாரம் நம் ஸமூகத்துள் குறுக்கும் நெடுக்குமாகப் புகுந்து நம் கலை, செல்வம் அனைத்தையும் பாழாக்கி அழித்துவிடப் பார்க்கிறது. வாணிபம், தர்மம் சிற்பம், பொருளாதாரம் யாவும் மங்கிப் போகின்றன. ஆதலால் வாழ்க்கையின் ஒவ்வோர் உறுப்பிலும் பொலிவைத் தரும் ஸஞ்ஜீவியைப் புகட்டவேண்டும். இந்த அம்ருத கலசத்தைக் கொண்டுவரக்கூடிய பகீரதர்கள் எங்கே?

ச்ருண்வந்து ஸர்வே அம்ருதஸ்ய புத்ரா;

நாமெல்லாம் சாவாமருந்தை உட்கொண்ட இளம் பிள்ளைகள். நம்மைச் சூழ்ந்திருக்குக்கும் குறுகிய அகம் பாவத்தினாலேயே நம்முள் பொதிந்திருக்கும் ஓர் அமுதக்

கடல் தென்படாமல் இருக்கிறது. உங்களை நான் அழைக்கிறேன். வாரீர் விரைந்து. அன்னையின் திருக்கோயிலை நண்ணி விரதம் பூண்போம். ஒரே மனமாக, ஒரே குரலாகப் பிரதிக்ஞை செய்துகொள்வோம்: நம் கடன் தேசத்திற்குப் பணிசெய்து வாழ்வதே, தேசமாதாவின் திருவடிகளில் நம் உடல், பொருள் ஆவி, மூன்றையும் வைத்து வழிபடுவோம். மரணத்தின் மூலம் அமரநிலை எய்துவோம். இவ்வாறு செய்வோமானால்,

"பாரத ஆபார் ஜகத்ஸபாய்
ச்ரேஷ்ட ஆஸன ல'பே!"

பாரதம் மீண்டும் உலக மகா சபையில் சிறப்பான இடம் பெறுவது திண்ணம்.*



*கல்கத்தா யூனிவர்ஸிடி இன்ஸ்டிட்யூட் ஹாலில் நிகில வங்கீய யுவக ஸம்மேளனத்தின்போது ஆற்றிய தலைமை உரை.

“சிந்தனையிலும் காரியத்திலும் புது தாரையை உண்டாக்கும் ஸமயம் தன்னலமே கருதும் வலிமைமிக்க ஒரு சாராருடன் விரோதம் மூண்டே தீரும். அது இயற்கைதானே? அதற்கு நாம் அஞ்சிப் பின்னடைவது அழகல்ல; பகைவர்களின் தாக்குதலுக்கிடையே இளைஞர் இயக்கம் ஊடறுத்து முன்னே செல்லவேண்டும். ஒவ்வொரு வேளை நாற் புறமும் பெருந் தடங்கல்கள் நம்மை மூழ்க்கித் திணற அடித்தாலும் அடிக்கும். உலகத்தின் தொடர்பே நமக்கு இல்லைபோன்ற மருள் வரும். அந்த நெருக்கடியில் ஓர் ஐரிஷ் மஹா புருஷரின் அமரவாணியை நாம் நினைவில் கொள்ள வேண்டும். பேராபத்துக் கிடையே ஏகாங்கியாக நின்று உறுதியை இழக்காமல் அவர்செய்த வஜ்ரநாதமாவது ‘புன்மை இருள் கவிந்திருந்த உலகை உய்விக்கக் கிறிஸ்துப் பெருமான் எவ்வண்ணம் தோன்றினரோ அவ்வண்ணமே ஐரியைத் தூக்கிவிட ஒருவர் வருவார்’ என்பதே.”

ஒரு நெருக்கடியான யுக சந்திப்பில் நாம் முன்னேறி வருகிறோம். இப்போது யுவர்களின் கடமை என்னவெனின் பின்னால் செய்ய இருக்கும் காரியங்களுக்கு ஒன்று கலந்தே திட்டங்கள் வகுத்துக்கொள்வதாகும். நம் வாழ்வின் இன்றியமையாத ஸமஸ்யைகளுக்கு ஏற்ற முடிவைக் காண்பதற்கும், அதன் பொருட்டு வேலை செய்வதற்கும் மத்திய மாகாணத்து யுவர்கள் வயதான வர்களையும் கிழங்களையும் நம்பி இருக்கவில்லை. தாமே ஊக்கத்துடன் முனைந்துள்ளனர். இது ஒரு நல்ல குறியென்றே எனக்குப் படுகிறது. உங்களுடைய இந்தப் பேராக்கத்தில் என்னால் இயன்ற உதவியைச் செய்வேனால் பெருமையே கொள்வேன்; என் சிரமம் வீணாகவில்லை, பயனளித்ததென்று ஆனந்தக் கடலாடுவேன்.

இந்த இளைஞர் இயக்கத்தை நல்ல கண்ணால் பார்க்காதவர்களும் இதன் நன்மையை உணராதவர்களும் இந்த நாட்டில் சிலர் இருக்கிறார்கள். பொது ஜனங்களின் மதிப்பைப் பெற்ற சிலர், இளைஞர் எழுச்சியில் அடங்கிய மர்மத்தைப் புரிந்து கொள்ளாமல், தாம் கலக்காது போனால் எந்த இயக்கமும் வளர்ச்சி அடையாதென்ற அகந்தை வசப்பட்டு இந்தமாதிரி எழுச்சிகளில் சேர்ந்து கொள்ளுகிறார்கள். பாரத நாட்டில் இன்று தோன்றியுள்ள புது விழிப்பின் பயனாய் ஒவ்வொன்றாக எத்தனையோ இயக்கங்கள் தலைகாட்டுகின்றன. மனிதன் உள்ளத்திலும் ஜாதியின் பிராணத்திலும் நிச்சயமாக ஆழமானதோர் ஆசை குருத்துவிடுகிறது. அதன் விளைவே இந்த எழுச்சி. அந்தரங்கத்துள் வேர்விடும் இந்த உணர்வே சுதந்திரத்தின்மேலுள்ள அவாவாகும். முற்றும் மலர்ச்சி அடைவதற்கான ஏக்கமும் இதுவே.

இன்று நம் நாடு வேண்டி நிற்கும் ஓர் இயக்கம் தனி மனிதனையும் ஸமுதாயத்தையும் எந்தவிதமான கட்டிலிருந்தும் விடுவிக்கக் கூடியதாகவும் தேசத்தின் முழு விலாசத்திற்கு வழி கோலுவதாகவும் இருக்கவேண்டும். இளைஞர் இயக்கத்தைச் சிலபேர் காங்கிரஸின் ஒரு கிளை ஸ்தாபனமாக மாற்ற விரும்புகிறார்கள்; ஆனால் இந்த இயக்கத்திற்குள்ள ஒரு தனித் தன்மையை அவர்கள் உணரவில்லையே. அடிப்படையில் காங்கிரஸ் அரசியல் ஸ்தாபனமாகும்; அதன் லக்ஷ்யம் ஒரு வரையறைக்கு உட்பட்டது. காங்கிரஸ் சுதந்திரத்தை இன்னும் தன் அரசியல் லக்ஷ்யமாகக் கொள்ளவில்லையே. ஆகவே, வாழ்வை முழு உண்மையாக நோக்கும் யுவ யுவதியர் ஒவ்வொரு துறையிலும் ஸ்வாதீனம் பெற விரும்புகிறார்கள். காங்கிரஸைப்போன்ற வெற்று அரசியல் ஸ்தாபனத்தில் ஈடுபடுவதோடு திருப்தி அடைந்து விடுவதில்லை; மனிதன் ஒருவன் உள்ளத்தில் ஊறும் ஆசைகளை நிறை

வேற்றவல்ல ஓர் இயக்கத்தில் அவர்கள் சேர விரும்புவதில்லை ; இதில் அதிசயம் ஒன்றும் இல்லை. இளைஞர் இயக்கம் சுத்தமான அரசியல் கிளர்ச்சியாக இராதுபோனாலும் அதற்குத் தொலைவாக நிற்பதன்று. அதன் லக்ஷயத்தின் விட்டம் விரிவானது. அகண்டமான இதனுள் வாழ்க்கையின் லக்ஷயங்கள் பல துண்டுகளாக அடங்கி இருக்கின்றன. இத்தகைய இளைஞர் இயக்கம் அரசியல் கிளர்ச்சிக்கும் வேகத்தைத் தரக்கூடியது.

இன்றைய போக்கு எந்த விதத்திலும் திருப்திகரமாக இல்லை. இந்த அதிருப்தியின் சின்னமாக விளங்குகிறது இளைஞரது இயக்கம். யுக யுகமாக நீடித்துவரும் கட்டுக்காய்தா, யதேச்சாதிகாரம், அநீதங்கள் இவற்றுடன் போரிடுவதே இதன் வேலை. எல்லாத் தளைகளையும் அறுத்தெறிந்து கட்டுக்கடங்காத ஸ்ருஷ்டியின் ஊற்றைக் கிளப்பி, மானிட ஜாதியைப் புதியதோர் உலகத்தில் பிரதிஷ்டை செய்வதே இதன் நோக்கமாகும். ஆகவே வெளிநாட்டிலிருந்து இறக்குமதியான சரக்கும் அன்று, காரிய முறையும் அன்று இது. இது ஒரு தனிப்பட்ட இயக்கமே. இதன் ஊற்றுக்கால் மனிதத்தன்மையின் ஆழ்நிலையில் உள்ளது.

சுதந்திரமும் வாழ்வின் பயனும் பிரிக்க முடியாதவாறு ஒன்றோடொன்று பின்னிக்கொண்டிருக்கின்றன. சுதந்திரம் இராதுபோனால் வாழ்வில் பயனேது? இந்தப் பயனை நோக்கியே வாழ்வை இயக்குவதால் சுதந்திரம் அவ்வளவு மதிப்புடையதாகிறது.

இளைஞர் இயக்கத்திற்கு எத்தனையோ திக்குகள் உண்டு. உடலை உறுதியாக்குவதற்கு நாம் தேகப்பயிற்சி செய்யவேண்டும். ஸமூகத்திற்கு நவஜீவனைக் கொடுக்க வேண்டுமானால், இரக்கமின்றிப் பாசி பிடித்த பழக்க வழக்கங்களை அகற்றித் தெள்ளியதும் தூய்மையானதுமான பாவங்களைப் புகுத்தவேண்டும். யுகத்திற்கேற்ற

ஆதர்சத்தின் ஒளியில் நடக்கவேண்டும். பிற்காலத்தவர்களுக்கும் வழி காட்டக் கூடிய ரீதி நீதிகளை வகுக்க வேண்டும்.

சிந்தனையிலும் காரியத்திலும் புது ஓட்டத்தை உண்டாக்கும்பொழுது தன்னலமே கருதும் வலிமை மிக்க ஒரு சாராருடன் விரோதம் மூண்டே தீரும். அது இயற்கை தான். அதற்கு அஞ்சி நாம் பின்னடைவது அழகல்ல. பகைவர்களின் தாக்குதலுக்கிடையே இளைஞர் இயக்கம் ஊடறுத்து முன்னேறவேண்டும். ஒவ்வொரு ஸமயம் பெரிய இடர்கள் நாற்புறமும் சூழ்ந்துகொண்டு அழுத்தினாலும் அழுத்திவிடும், உலகத்தின் தொடர்பே நமக்கு இல்லைபோன்றே திக்பிரமை வரும். அந்த ஸங்கடத்தில் ஓர் ஐரிஷ் மஹாபுருஷரின் அமரவாணியை நாம் நினைவில் கொள்ளவேண்டும். விபத்துக்கிடையே தனி ஆளாக நின்று உறுதியை இழக்காமல் அவர் இடிக்குரல் எடுத்து அறை கூவியதாவது: 'வஞ்சனை இருள் கவிந்த உலகை உய்விக்க எம்மான் கிறிஸ்து எவ்வாறு தோன்றினாரோ அவ்வாறே ஐரியைக் காக்க ஒருவர் வருவார்.'

வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் ஸ்வாதீனத்தைப் பிரதிபலிக்கச் செய்யுங்கள். அதே ஸமயம் சத்துருக்கள் உங்கள் ஆதர்சத்தை நசுக்க ஒன்றுகூடுவார்கள். ஒரு முனையானால் பரவாயில்லை; சத்துருவைச் சமாளிக்கலாம். நாலுபக்கமும் சூழ்ந்துகொண்டால் எங்ஙனம் ஈடு கொடுப்பது? இதற்காகத்தான் இளைஞர் இயக்கம் சாமான்யமானதன்று என்றேன். பலபேரைப் பகைத்துக் கொள்ள நேரிடும். இதற்கு எந்த இளைஞனும் தயாராக இருக்கவேண்டும்.

அரசியல் கிளர்ச்சியாவது, தொழிலாளர் எழுச்சியாவது பொதுஜனத்தின் ஆதரவை எதிர்நோக்கி இருக்க வேண்டியது அவசியம். ஆனால், இளைஞர் இயக்கத்தில் சேர்ந்தவர்கள் ஜனங்களின் நன்மதிப்பைப் பெறும்

ஆசையை விட்டொழிக்க வேண்டியதே. ஒவ்வொரு ஸமயம் மக்களின் கொள்கையை ஒரு வழியில் திருப்பு வதற்கும், ஒருஸமயம் அடியோடு உதறித் தள்ளு வதற்கும் பொறுப்புடையவர் இளைஞர். நீங்கள் தேசத்தின் பெரிய ஸமஸ்யைகளைத் தீர்க்க விரும்பினால் மற்றவர்களைவிட விசாலமாகக் கண்ணைத் திறந்து வருங் காலம் வரை நோக்கவேண்டும். பொதுமக்களின் எண் ணங்கள் இந்தக் காலத்துக் கட்டுத் திட்டங்களுக்கு மீறிப் பிற்காலத்தில் திரண்டெழும் ஓர் உருவத்தைத் தழுவா.

நீங்கள் செய்யும் பணி தேசத்திற்கு மங்களத்தை உண்டுபண்ணக் கூடியதாக இருந்தாலும் ஜனங்கள் உங்கள் வழிக்கு வர மறுப்பார்கள். அந்த நிலையில் தனிமை யாக நின்று உலகத்துக்கே எதிரிடையாகச் சண்டை இடுவதற்கான ஸாஹஸத்தை வரவழைத்துக் கொள்ள வேண்டும். ஜனங்களுடைய பிரீதியில் மிதப்பவன் சில காலம் புகழெய்தி இருக்கலாம். ஆனால் சரித்திரத்தில் அவன் பெயர் எடுக்கமாட்டான். தனக்கென வாழாத வருக்கு நிந்தையும் இழுக்குமே வரும். நெருங்கிய உற வினர்கள்கூடப் பகைவ ராவார்கள். இதற்கெல்லாம் அசையவே கூடாது.

ஆனால் மனித சுபாவத்தில் மறைவாக ஒரு தெய்வத் தன்மை ஒளிர்கிறது. இந்த நிந்தை, பகை, யாவும் நீடித் திருப்பதில்லை. ஒருவன் தன் கொள்கையை நம்பிச் சாகத் துணிகிறான். அவனது மரணம் நமக்கு அமரநிலையைத் தரும். நம்முடைய கண் திறக்கும். உண்மையை உணர் வோம். ஆகவே, எந்த மாதிரியான நிலைக்கும் நாம் சித்த மாக இருக்கவேண்டும். அடி, ஆபத்து இருப்பதனாலேயே வாழ்விற்குத் தனி மதிப்பு ஏற்படுகிறது. தியாகம், சோகம், அநீதங்கள் இராதுபோனால் வாழ்வில் அழகேது, விசித்திரமேது?

மொத்தமாகக் கூறுவதாயிருந்தால் இளைஞர் இயக்கம் ஐந்து முகமானது: அரசியல், ஸமூகம், பொருளாதாரம், தேகப்பயிற்சி, கல்வி. இந்த இயக்கத்தின் லக்ஷ்யங்கள் இரண்டு: மேற்சொன்ன ஐந்து துறைகளில் தென்படும் தளைகளை நீக்கி ஸ்வாதீனம் பெறுவது ஒன்று. இந்த ஸ்வாதீனத்தைக்கொண்டு ஒவ்வொருவரும் முழுமலர்ச்சி அடைவதற்கு வழிகோலுவது இரண்டாவது. இது ஆக்கல், அழித்தலென்னும் இரண்டு ஆற்றல் வாய்ந்தது எனலாம். அழித்தல் நல்லதல்ல. ஆக்கலே நல்லது. ஆனாலும் அழித்தால்தானே உண்டாக்க முடியும் என்று எண்ணுவது தவறு. எல்லாவற்றையும் துவம்ஸம் செய்வதையே லக்ஷ்யமாகக் கொள்வதும் பிசகு. சில ஸமயம் கருணையின்றிச் சுதந்திரத்தை நிறுவுவதற்கு ஸமூகத்தின் சில பகுதிகளை அடியோடு நிர்மூலமாக்கவேண்டி யிருக்கிறது. அஸத்யம், கபடம், கட்டுத்திட்டங்கள், பேதமனப்பான்மை இவற்றுள் எதற்கும் அடங்கி இருக்கவே முடியாது. இந்தத் தளைகளையெல்லாம் வெட்டித் தள்ளுவதற்கு நம் சக்தி அனைத்தையும் பிரயோகம் செய்தாகவேண்டும். முன்னேறுவது நம் கடமையாக இருக்கையில் பின்னால் நோக்கித் தயக்கம் கொள்வது சரியல்ல.

பாரத தேசத்திலும், அதன் வெளியிலும் நடக்கும் கிளர்ச்சிகள் யாவும் சீர்திருத்த நோக்குடையன. இந்த இயக்கங்கள் வாழ்வின் ஒரு நுனியைத் தொடுகின்றனவே தவிர, வாழ்விற்குப் புது உருவைத் தந்து மாறுதலை உண்டாக்கவில்லை. நமக்குச் சீர்திருத்தம் வேண்டாம். முற்றும் புது ரூபமே வேண்டும். வெவ்வேறு நாடுகளில், வெவ்வேறு காலங்களில் சுதந்திரத்திற்கு வெவ்வேறு அர்த்தம் வழங்கி வந்திருக்கிறது. பிறநாடுகளைப்போலவே நம் தேசத்தில் சுதந்திரத்தைப் பற்றிய எண்ணங்கள் மெல்ல மெல்லப் படர்ந்துவருகின்றன. இப்போது சுதந்திர மென்பதற்குப் பொருள் எல்லாவிதமான தளைகளி

விருந்தும் நிறைவான விடுதலை பெறுவதே. இந்த அர்த்தமே இளைஞர் வரைக்கும் பிடித்திருக்கிறது. பாதி வழியில் நிற்க நாம் விரும்பவில்லை. எல்லாத் துறையிலும் ஸம்பூர்ணமான சுயேச்சை இருக்கவேண்டும். உண்மையில் நாம் சுதந்திரத்திற் கென்றே சுதந்திரத்தைக் கொண்டாடுபவர்களானால், கட்டுத் திட்டங்களையோ, வேற்றுமைகளையோ ஒருபோதும் சகித்துக்கொள்ள மாட்டோம். ஆட்சிமுறையிலும் சரி, பொருளாதாரத்திலும் சரி, சமூகத்திலும் சரி, எல்லாரும் பூர்ணமான விடுதலை அடையவேண்டுமென்ற மூலக் கொள்கையை நிலை நிறுத்துவது நம் கடமை. ஆண், பெண் என்ற பாகுபாடு இராமல் மனிதனிடம் பிறவிக் குணமான சமத்துவம் திகழ்கிறது. அதை மலரச் செய்வதற்குத் தகுந்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இதை வாயால் சுலபமாகச் சொல்லிவிடலாம். ஆனால் பின்பற்றுவது கடினம்.

நண்பர்களே! இளைஞர் இயக்கத்தைப் பெருக்கிப் பரவச்செய்ய விரும்புவோர்க்குரிய காரிய முறைகளை இங்கே விவரித்து அனுவசியமாகப் பொழுதை வீணாக்க மாட்டேன். நம்முடைய ஆதர்சம் வெகு தொலைவு நீள்வது. இதைவிடக் கடினமானது எதுவும் இராது என்பது என் எண்ணம். நம் வாழ்வையே அடியோடு மாற்றி அமைக்க விழைகிறோம். நமக்கும், மனித வர்க்கத்திற்கும் ஒளிமயமான புதியதோர் உலகை உண்டாக்க முயல்கிறோம். சுயேச்சை என்னும் மோஹன மந்த்ரமொன்றே நம்முள் உறங்கும் சக்திகளை எழுப்பி, தங்கு தடையிராத உழைப்பின் வெள்ளத்தில் நம்மை இழுத்துச் செல்லக் கூடியது. உள்ளூற நாம் சுதந்திரம் விரும்புவோமாயின் இந்த அடிமை வாழ்விலுள்ள துன்பமும் கொடூரமும் நமக்கு ஒருவாறு உறைக்கும். இந்த உணர்வு தீவிரமாகும்போது, சுயேச்சையின்றி வாழ்ந்து என்ன லாபம்

என்ற ஏக்கம் நம்மைப் பிடித்துக்கொள்ளும். இது வளர வளர ஒருநாள் அல்லது வேறு ஒருநாள் இந்தச் சுதந்திர தாகத்தைத் தணித்துக்கொள்ள வழிதேடுவோம். சுயேச்சையின் தேறலை மாந்திய ஆடவரும் பெண்டிருமான நாம் அந்த ஸமயம் வீடுவீடாக, ஊர்ஊராகச் சென்று அதைப் பறையறைவோம். இந்தப் பிரசாரத்தினுல் வாழ்வின் ஒவ்வொரு வழியிலும் புதுமையின் துடிப்புக் காணும். ஒரு புறம் ஸம்ஹாரம், மறுபுறம் சிருஷ்டி நடந்துகொண்டே போகும். குறுக்கிட்ட இடர்கள், பகைகள், மூட வழக்கங்கள் யாவும் சிதைவுறும். நாம் போகும் விசையில் புதிய சிருஷ்டிக்காகப் பாதை செப்பமாகும். சுதந்திரம், சமத்துவம், மைத்ரீ (கேண்மை) இவற்றின்மீது புது ஸமுதாயத்தை எழுப்ப முடிந்தால் உலகத்தைக் கலக்கிடும் எந்தச் சிக்கல்தான் விடுபடாது?

பாரத தேசம் ஒரு குட்டிப் பூலோகம். உலகத்தின் ஸமஸ்யை யாவும் இங்கே காணலாம். ஆகவே, இந்தியாவின் ஸமஸ்யைகள் முடிவிற்கு வந்ததென்ருல் உலகத்தின் ஸமஸ்யைகளும் தீர்ந்ததென்றே அர்த்தம். எத்தனையோ துக்கங்களைத் தாங்கிக்கொண்டும், கணக்கற்ற அதிர்ச்சிகளுக்குத் தலைகொடுத்தும் பாரதம் இன்றளவும் பிழைத்திருக்கிறது. காரணம்: விசேஷமான ஸாதனைகள் புரியும் சக்தி அதற்கு உண்டு. உலகத்தை ரக்ஷிப்பதற்காகவே பாரதம் இன்னும் உயிர் வைத்துக்கொண்டிருக்கிறது. இந்தியா கொடுக்க இருக்கும் தானத்தைப் பெற உலகம் சித்தமாகக் காத்திருக்கிறது. அதைப் பெருத உலகு பாழ் உலகே!

நண்பர்களே! நமக்குள்ள பொறுப்பு லேசானதல்ல. ஒவ்வொரு யுகமும், ஒவ்வொரு தேசத்திலும் இளமையே சுதந்திரத்தின் தீவர்த்தியைத் தூக்கிப் பிடித்து வழி காட்டி இருக்கிறது. பிறநாடுகளில் யுவர்கள் செய்திருக்கும் அரிய தியாகங்களை நாமும் செய்யவேண்டும். தினமும்

மாறுதல் அடையும் ஒரு விசித்திர யுகத்தில் நாம் வாழ்கிறோம். இன்று பாரத தேசத்தின் அதிர்ஷ்ட லிபி இளையோர் கையில்தான் இருக்கிறது. இந்தப் பெரும் பொறுப்பை நம் யுவக யுவதியர் உணர்ந்திருக்கிறார்கள்; இதில் ஐயமே இல்லை. இவர்கள் ஒப்பற்ற தியாகத்தினாலும் உழைப்பினாலும் பாரதநாடு புனர்ஜன்மம் எடுக்குமென்று நம்புகிறேன். இந்தப் பாரதத்தில் நரநாரியர் யாவரும் விடுதலையின் இன்பத்தை உட்கொண்ட புது ஜீவன்களாக மாறுவார்கள். சமமாகவே எல்லா வழியிலும் உன்னதி அடையும் காலம் வரும். பாரதம் சுதந்திர நாடாக எப்போது ஆகும்? என்று எமது அன்னையின் கைவிலங்குகள் போகும்?

நாம் பிறர்க்கு அடிமைகளாக இந்த நாட்டில் பிறந்தோம் என்பது வாஸ்தவமே; ஆனால் சுதந்திரத்தைப் பார்த்த பின்பே சாவோம். நாட்டை அன்னியர் கையிலிருந்து விடுவித்த பிறகுதான் நிம்மதியாக மரிப்போம். வாருங்கள், ஒவ்வொருவரும் இந்தப் பிரதிக்ஞை செய்து கொள்ளுங்கள். இந்த வாழ்வில் ஸ்வாதீனம் அடைந்த பாரதத்தைக் காணுவிடில், இந்தப் பாரத தேசத்தை மீட்கவே நம் பிராணனை விடுவோம். சுதந்திரத்தை நோக்கிச் செல்லும் பாதை முள் நிரம்பியது. இருந்தாலும் இதுவே அமரர் உலகிற்குக் கொண்டுவிடும் பாதை. இந்தப் பாதையில் நாம் வந்து கூடுவோம். இதோ அழைக்கின்றேன், வாருங்கள். வந்தே மாதரம்.



* 1929 - ஆம் ஆு நவம்பர்மீ 29 உ மித்னாபூர் மாகாண யுவகர் சங்கத்தில் பேசியது.

இளைஞன் கனவு

ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ்
(நேதாஜி)
வங்காளியில் எழுதியது
தமிழ் மொழிபெயர்ப்பு
ஸ்ரீ. த. நா. குமாரஸ்வாமி, பி. ஏ.

பொருளடக்கம்

கட்டுரைகள்

1. இளைஞன் கனவு
2. அன்னையின் அழைப்பு
3. சில முக்கியமான வார்த்தைகள்

கடிதங்கள்

4. "உன்பொருட்டு இந்தக் களங்கச் சுமையை வகிப்பதே எனது இன்பம்"
5. சமூகத் தொண்டும் குடிசைத் தொழிலும்
6. நல்லொழுக்கமும் உயரிய மனப்பான்மையும்
7. சிறையும் கைதியும்
8. கட்சிச் சண்டையும் வங்காளத்தின் வருங்காலமும்
9. ஹிந்து - முஸ்லிம் உடன்படிக்கை
10. சிறைமீளும் பேச்சிற்கு மறுமாற்றம்
11. வாழ்க்கையின் லக்ஷ்யம்
12. வட கல்கத்தா வாசிகளுக்கு ஒரு விண்ணப்பம் (க)
13. ... ... (உ)
14. தேசபந்து

—— விலை ரூ. 2—0—0 ——

அல்லயன்ஸ் கம்பெனி :: மயிலாப்பூர், சென்னை - 4

ஆனந்த மடம்

வங்க மூலத்திலிருந்து

த. நா. குமாரஸ்வாமி, பி. ஏ., அவர்கள்

மிக்க அழகாய் மொழிபெயர்த்தது.

ரூ. 2—8—0

மதிப்புரைகளிற் சில

தனவணிகன்: தமிழ் மக்கள் அவசியம் படிக்கவேண்டிய நூல்களுள் இது ஒன்று. மொழிபெயர்ப்பு அருமையாய் இருக்கிறது. கண்கவர் முறையில் அமைந்த புத்தகம்.

கலாசேவகி: சொல் அமைப்பு இலகுவாயும், கற்பனை வெகு நேர்த்தியாயும், கதைப்போக்கு விருவிருப்பாயும் இருக்கின்றன.

நவசக்தி: இந்தியாவுக்குச் சுதந்திர உணர்ச்சி ஊட்டியது ஆனந்த மடம். மொழிபெயர்ப்பு நன்ருயிருக்கிறது.

ஹனுமான்: இக் கதையின் போக்கே நூதன வசீகரம் படைத்தது. தேசீய ஆவேசத்தை ஊட்டும் இந்த நவீனத்தைப் படிக்கும்போது, ஒரு கதையைப் படிப்பதுபோன்ற உணர்ச்சியே நமக்கு ஏற்படவில்லை. மொழிபெயர்ப்பு என்ற எண்ணமும் நமக்கு உண்டாகவில்லை. எளிய லலிதமான தமிழ் நடை. உயர்ந்த நாவல், நல்ல மொழிபெயர்ப்பு.

மணிக்கொடி: பங்கிம் பாபுவின் மூலத்திலுள்ள வேகம் பூரானவயும் கொண்டுவந்திருக்கிருர். அழகான வர்ணனைகளை நன்ருக மொழிபெயர்த்திருக்கிருர்.

கலைமகள்: வர்ணனைகள் எல்லாம் தத்ரூபமாகக் கண்முன் வந்து நிற்கின்றன. இயற்கை வர்ணனைகளை அநாயாசமாகப் படம் பிடித்துக் காட்டுகிருர். அரண்யத்தின் காட்சிகள், பஞ்சத்தின் கொடுமை, ஆனந்த மடம், சத்தானர்களின் போர் முதலியவை உயர்ந்த சித்திரங்கள்.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை - 4